Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 மாசி 30 வெள்ளிக்கிழமை (14.03.2014) பக்கங்கள் 20 ஓசை – 164

## மக்கள் நலன்புரித் திட்டங்களுக்கு பலம் சேர்க்க வேண்டும்

### யாழ்.செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

அரசின் கொள்கைத் திட்டங்களுக்கும் வேலைத் திட்டங்களுக்கும் அமைவாகவே செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுப் புதிதாக கிராம அலுவலர்களாக நியமனம் பெற்றவர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசின் கொள்கைத் திட்டங்களையும், வேலைத் திட்டங்களையும் மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று அதனூடாக மக்களுக்கான சேவைகளை ஆற்றுவதே உங்களது தலையாய கடமையாகும். எமது அரசு மக்களுக்காகப் பல்வேறு நலன்புரி அபிவிருத்தித் திட்டங்களை 19 ஆம் பக்கம் பார்க்க...

## கிளிநொச்சியில் தேடுதல்; ஒருவர் காயம், இருவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - தர்மபுரம் பகுதியில் உள்ள முரசன்பிட்டி உட்பட அதனை அண்டியுள்ள பகுதிகளில் படையினரும், பொலிஸாரும் இணைந்து தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று மாலை ஆரம்பமாகிய இந்தத் தேடுதல் நடவடிக்கையின்போது ஒரு பெண் உட்பட இருவர் கைது செய்யப் பட்டிருக்கின்றனர்.

மேலும் ஒருவர் இந்தத் தேடுதல் நடவடிக்கையின் போது காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நள்ளிரவு வரை தேடுதல் நடவடிக்கை தொடர்ந்த வண்ணமிருந்தது. (29)

## குப்பை மேட்டில் வெடித்தது குண்டு

(யாழ்ப்பாணம்)

குப்பையை எரித்த போது வெடிப்புச் சம்பவம் ஒன்று மணியந்தோட்டம் 10 ஆம் குறுக்குத்தெரு வீதியில் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் உள்ள ஒரு வீட்டின் உரிமையாளர் அருகிலுள்ள தோட்டக் காணியைத் துப்புரவாக்கியதுடன், காணிக்கு முன்னால் ஏற்கனவே போடப்பட்ட குப்பையுடன் சேர்த்து தீ இட்டுக் கொழுத்திய வேளையிலேயே இவ்வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதுடன், சிறியரக வெடிபொருள் 19 ஆம் பக்கம் பார்க்க...

# வடக்கில் சமூக மறுசீரமைப்பு ஜப்பானிய உதவியுடன் திட்டம்

(கொழும்பு)

வடக்கில் சமூக மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஜப்பானிய அரசு நிதி உதவி வழங்கியுள்ளது.

யுத்தப் பாதிப்புக்கு உள்ளான பகுதிகளின் மீளமைப்பு நடவடிக்கைகளுக்காக ஜப்பான் அரசாங்கம் நிதி உதவி வழங்கி இருக்கிறது.

இதற்காக ஜப்பான் 3.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள ஜப்பானின் இலங்கைக்கான தூதுவர் நொபுஹிட்டோ ஹோபோ இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிதியைக் கொண்டு சமூக மறுசீரமைப்பு வேலைத் திட்டம், வாழ்வாதார மேம்பாடு பெண்கள் அபிவிருத்தி போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஐக்கிய நாடுகளின் மனித குடியேற்றம் மற்றும் நிலையான அபிவிருத்தி நிலையத்தின் ஊடாக வடபகுதிக்கான இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (மற்றுமொரு செய்தி உள்ளே)

## யாழ்ப்பாணத்தில் முதலீட்டு வாய்ப்பு கனேடியத் தூதுவர் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இருந்து கனடாவிற்குப் புலம்பெயர்ந்த தமிழர்கள் யாழ்ப்பாணத்தில் முதலீடு செய்வதில் ஆர்வமாக இருப்பதாக இலங்கைக்கான கனேடியத் தூதுவர் சாலிவைற்கிங் யாழ்.அரச அதிபரிடம் தெரிவித்துள்ளார்.



நேற்றுப் பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.செயலகத்திற்கு விஜயம் செய்த கனேடியத் தூதுவர் யாழ். அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இந்த விடயத்தை அரச அதிபரிடம் தெரிவித்ததாகத் தெரிய வருகிறது.

இந்தச் சந்திப்பின் பின்னர் கனேடியத் தூதுவருடன் கதைத்த விடயங்கள் குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவிக்கையில்,

வடபகுதியைச் சேர்ந்தவர்கள் கூடுதலாக கனடாவில் இருக்கின்றனர். அவர்கள் இங்கு வந்து முதலீடு செய்வதில் எந்த விதமான தடைகள் இருக்கும் என்று கனேடியத் தூதுவர் தம்மிடம் 19 ஆம் பக்கம் பார்க்க...

## தனியார் வகுப்புகளுக்கு தடை; ஞாயிறு, போயா தினங்களில்

ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2.00 மணிவரையிலும் பௌர்ணமி (போயா) தினங்களிலும் பிரத்தியேக தனியார் வகுப்புகளை நடத்த அரசாங்கம் தடை விதித்துள்ளது.

இதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அனைத்து ஆளுநர்களுக்கும், முதலமைச்சர்களுக்கும் எதிர்க் கட்சித் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. 19 ஆம் பக்கம் பார்க்க...

## ஆணின் சடலம் பரந்தனில் மீட்பு

கிளிநொச்சி, பரந்தன் ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியில் ஆணின் சடலமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பிரதேச மக்கள் சிலரால் இந்தச் சடலம் நேற்றுப் பிற்பகல் அவதானிக்கப்பட்டிருப்பதுடன், பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

பரந்தன் ரயில் நிலையத் 19 ஆம் பக்கம் பார்க்க...

## ஜெனிவாவில் அணிசேரா நாடுகள் இலங்கைக்கு ஆதரவளிக்க வேண்டும்

### மகிந்த சமரசிங்க கோரிக்கை

அணிசேரா நாடுகள் ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவளிக்க வேண்டுமென அமைச்சர் மகிந்த சமரசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றுவதில் தீவிரம் காட்டி வருவதாக தெரிவித்துள்ளார்.

இந்த நெருக்கடியான தருணத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு அணிசேரா நாடுகள் 19 ஆம் பக்கம் பார்க்க...

## உலக உணவுத் திட்டம் யாழில் விஸ்தரிக்க ஏற்பாடு

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் சாலிவைற்கிங் நேற்று யாழ்.மாவட்டத்திற்கு விஜயம் செய்து உலக உணவுத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பல்வேறு வேலைத்திட்டங்கள் தொடர்பில் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நேற்றுக்காலை மாவிட்டபுரம் பகுதிக்கு விஜயம் செய்த தூதுவர் பொன்.பரமானந்த வித்தியாலயத்திற்கும், கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயத்திற்கும் விஜயம் செய்து அங்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு வழங்கப்படும் சமைத்த உணவு வழங்கும் திட்டத்தைப் பார்வையிட்டதுடன், அங்கு வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா, தெல்லிப்பழை உதவி அரச அதிபர் மற்றும் பாடசாலை அதிபர் முதலானவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதாகவும் தெரிய வருகின்றது.

அத்துடன் யாழ்.செயலகத்திற்கு பிற்பகல் 1.30 மணிக்கு விஜயம் செய்த தூதுவர் அங்கு யாழ்.அரச அதிபரைச் சந்தித்து யாழ்.மாவட்டத்தில் மேற்கொள் 19 ஆம் பக்கம் பார்க்க...

## தீயில் எரிந்து இளம் பெண் மரணம்

மன்னார் மாவட்டத்தின் எழுத்தூர், தோட்டக்காடு கிராமத்தைச் சேர்ந்த இளம் தாயான நிசாந்தன் தேவிகா (வயது-27) என்பவர் தனக்குத்தானே தீ மூட்டி உயிரிழந்ததாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 12 ஆம் திகதி இரவு அப்பகுதியிலுள்ள கடைக்குச் சென்று மண்ணெண்ணெய் வாங்கிக்கொண்டு வீடு சென்ற குறித்த தாய், வீட்டுச் சமயலறையில் தனக்குத்தானே தீ மூட்டியதாக விசாரணையிலிருந்து தெரியவருவதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்நிலையில், வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக்கொ 19 ஆம் பக்கம் பார்க்க...

## ஊடகத்துறையினருக்கு அனர்த்த முகாமைத்துவ செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயுலகத்தின் அனர்த்த முகாமைத்துவ அலகினால் ஊடகவியலாளர்களுக்கான அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

இச்செயலமர்வில் ஊடக நிறுவனங்களில் கடமையாற்றும் செய்தியாளர்கள், ஊடகத்துறை உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்துகொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது, அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகள் தொடர்பான திறன் விருத்தி, காலநிலை மாற்றங்கள் தொடர்பான நடை 19 ஆம் பக்கம் பார்க்க...

06

கட்டணம் குறைப்பு


09
முன்னேற்றம்

# மருதங்குளம் வீதியினை புனரமைக்குமாறு கோரிக்கை

சாவகச்சேரி பிரதேச சபைக் குட்பட்ட எழுதுமட்டுவாள் வடக்கு மருதங்குளம் வீதியினை புனரமைப்பு செய்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்தும் இவ்வீதியானது கடந்த 20 வருடங்களிற்கு மேலாக திருத்தப்படாமல் குன்றும் குழியுமாக உள்ளது. இவ்வீதியினை எழுது மட்டவாள் வடக்கு, மிருசுவில் தெற்கு, மிருசுவில் வடக்கு, பகுதியைச் சேர்ந்த பொது மக்கள் பயன்படுத்துகின்றனர்.

இந்த பகுதியில் உற்பத்தி செய்யப்படும் விவாசாய உற்பத்திப் பொருட்களை வெளிச் சந்தைகளில் உற்பத்திப் பொருட்களை வெளிச்சந்தைகளிற்குகு கொண்டு செல்வதற்கு இவ் வீதியே பயன்படுத்துகின்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னங்குறிச்சி கந்தசாமி கோவில் வரை இ.போ.ச. பேருந்துசேவைகளும் நடைபெறுகிறது.

எனவே உடன் கவனமெடுத்து எழுதுமட்டுவாள் மருதங்குளம் வீதியினை புனரமைப்பு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (150)

# சிகிச்சைக்கு வந்தவரின் சைக்கிள் திருட்டு

மானிப்பாய் பிரதே அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்கு வந்தவரின் சைக்கிள் திருடர்களால் நேற்று முன்தினம் திருடப்பட்டுள்ளது.

நாவலியைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் மருந்தைப்பெற்று வீடு செல்வதற்காக தனது சைக்கிளை தேடிய போது அங்கு நின்ற சைக்கிள் திருடப்பட்டமை தெரியவந்துள்ளது.


இதேபோன்று முன்பு மூன்று தடவைகள் சிகிச்சை பெறவந்த நோயாளர்களின் சைக்கிள் திருடப்பட்டுள்ளுது. இப்படியான சம்பங்கள் தொடர்ந்த நடைபெறாமல் இருப்பதற்கு நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் சைக்கிள் பாதுகாப்பு நிலையமென்றை அமைத்து அதன் மூலம் நிதியைப் பெற்றால் மக்களின் சைக்கிள்களுக்கு பாதுகாப்பு ஏற்படுவதுடன், சங்கத்திற்கு நிதியும் கிடைக்குமென பலரும் கருத்துத்தெரிவித்துள்ளனர்.(104)

# சித்திரத்தேர் வெள்ளோட்டம்

ஈவினை மதுரையம்பதி அருள் மிகு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் திருக்கோயிலின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இளைப்பாறிய அதிபர் செல்லையா செல்வரத்தினத்தினத்தின் உபயமாக ஸ்தபதிரத கலாஞானி விஸ்வபிரம்மஸ்ரீ செ.பாலச்சந்திரனால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து நிர்மாணக் கலைஞர் கௌரவிப்பு இடம் பெறும். (இ)

# 956 வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



யாழ்.மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட 956 வறிய மாணவர்களுக்கு யாழ்.வணிகர்கழகம் கற்றல் உபகரணங்களை நேற்று வழங்கியுள்ளது.

பிரதேச செயலகங்கள் ஊடாக வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஏறக்குறைய 1500 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை 950 மாணவர்களுக்கு நேற்று யாழ்.செயலகத்தில் வைத்து வணிகர் கழகம் வங்கியுள்ளது.

ரூபா 15 இலட்சம் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் இவ்வாறு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.வணிகர் கழகத் தலைவர் எஸ்.ஜெயசேகரம் தெரிவித்தார். (இ)

# பொதுக்கூட்டங்கள்

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு திருநெல்வேலியிலுள்ள வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் சங்கத்தை சேர்ந்தவர்களை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (17)

★ ★ ★

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குஉட்பட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வருடாந்த பொதுக்கூட்டம் நாளை காலை 9 மணிக்கு டிறிபேக்கல்லூரியில் சங்கத்தலைவர் ச.ஞானலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலக கணக்காளர் திருமதி வசந்தமாலா மனோகரான் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட பகிரங்க ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தலைவர் வி.ஸ்ரீசக்திவேலும், கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட பகிரங்க ஓய்வூதியர் நம்பிக்கை நிதியப் பொருளாளர் எஸ்.கணேசலிங்கமும் கலந்துகொள்ளவுள்ளார். (130)

★ ★ ★

(பருதித்துறை)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் 11 ஆவது வருடாந்தக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நிறுவன மண்டபத்தில் தலைவர் பா.ரகுநாதன் தலைமையில் நடைபெறும். அறிவிக்கப்பட்ட சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு செயலாளர் ஆ.குலநாதன் கேட்டுள்ளார். (109)

★ ★ ★

வட இந்து ஆரம்பப்பாடசாலையின் வருடாந்த பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் பாடசாலை மண்டபத்தில் அதிபர் த.ரவீந்திரன் தலைமையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

மத்திய கல்வி அமைச்சின் புதிய சுற்று நிரூபத்துக்கமைய பழைய மாணவர்கள் நால்வரும் ஆசிரியர்கள், பெற்றோர்கள் உட்பட பாடசாலை அபிவிருத்திக் குழு எனப் பெயர் மாற்றம் செய்யப்படவுள்ளது.

இதில் அங்கத்துவம் பெறுபவர்கள் ரூபா 50 - 600 வரை பாடசாலையின் தீர்மானத்துக்கமைய செலுத்தினால் மட்டுமே அங்கத்தவர்களாக இருக்க முடியும். அன்றைய தினம் நடப்பு வருட நிர்வாகத் தெரிவுகளும் இடம்பெறவுள்ளது. (109)

★ ★ ★

மானிப்பாய் கோவில் பற்று பல.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுச் சபைக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு சங்க மண்டபத்தில் தலைவர் க.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும்.

சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கூட்டம் கடந்த பெப்ரவரி 2 ஆம் திகதி நடைபெறவிந்த நிலையில் அங்கத்தவர் வருகை போதாமையால் குறித்த திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (104)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2512 திகதி 12-03-2014

ஆங்கில எழுத்து: U

வெற்றி எண்கள்: 08 25 40 53

போனஸ் இல: 63

ஜக்பொட் பரிசு ரூ.20,787,275/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 249086 | 20/- | 4,981,720/- |
| 2 இல | 17861 | 100/- | 1,786,100/- |
| 3 இல | 379 | 1,000/- | 379,000/- |
| 4 இல | - | 1,000,000/- | - |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10619 | 40/- | 424,760/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 748 | 1,000/- | 748,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10 | 10,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | 01 | 20,787,275/- | 20,787,275/- |
| 1 இல + போனஸ் இல | 11964 | 100/- | 1,196,400/- |
| 2 இல + போனஸ் இல | 567 | 500/- | 283,500/- |
| 3 இல + போனஸ் இல | 08 | 100,000/- | 800,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 447 | 200/- | 89,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 24 | 1,500/- | 36,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 291714 | | 31,612,155/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.03.15 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 10,000,000/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3355)


# பிரதேச மட்ட விளையாட்டு விழா

தென்மராட்சி பிரதேசங்களில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான பிரதேச மட்ட விளையாட்டு விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தலிங்கம் தலைமையில் மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.


பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக வடமாகாண விளையாட்டுத்திணைக்கள பணிப்பாளர் எஸ்.என்.ராஜாரணசிங்க, தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.தேவராஜா, வடமாகாண மெய்வல்லுநர் பயிற்றுநர் க.முகுந்தன், வளர்மதி சனசமூக நிலையத்தலைவர் கி.டினோஷன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (11)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

புதிய உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.30 மணி வரை கம்பஸ் லேன், வைமன் வீதி, அரசடி வீதி, கோவில் வீதி, நல்லூர், இராசாவின்தோட்டம், றக்கா வீதி, ஆஸ்பத்திரி வீதி, பழைய பூங்கா, கச்சேரியடி, சுண்டுக்குளி, குருசோ வீதி, பாசையூர், ஈச்சமோட்டை, கொழும்புத்துறை, நெடுங்குளம், ஆனந்தன்வடலி வீதி, எழிலூர், மகேந்திரபுரம், உதயபுரம், மணியந்தோட்டம், புங்கங்குளம் வீதி, பருத்தித்துறை வீதி, நாவலர் வீதி, கைலாச பிள்ளையார் கோவில் சந்தி வரை, கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரி, நொதேன் கொம்பனி, இராமநாதன் வீதி, பிறவுண் வீதி, அரசடி வீதி, தட்டார்தெரு - நாச்சிமார் கோவில் வரை, ஐயனார் கோவில் வீதி, கே.கே.எஸ் வீதியில் நாச்சிமார் கோவில் - சிவன் கோவில், கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதி, மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் சந்தி - பிள்ளையார் கொட்டல், சிவன் வடக்கு வீதி. சிவன் பண்ணை வீதி, சிவப்பிரகாசம் வீதி, வைத்தீஸ்வரா சந்தி - சீனிவாசகம் வீதி, காதி அபூபக்கர் வீதி, பி.ஏ.தம்பி வீதி, ஓடை லேன், மணிக்கூட்டு வீதி - கன்னாதிட்டி சந்தி, கன்னாதிட்டி வீதி, சட்டநாதர் வீதி, பருத்தித்துறை வீதி - நல்லூர் கோவில், கச்சேரிநல்லூர் வீதி, செம்மணி வீதி, சங்கிலியன் வீதி, கனகரத்தினம் வீதி, நாவலர் வீதி, ஆனந்தன் வடலி வீதி, புங்கன்குளம் வீதி, நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, நாயன்மார் கட்டு, நல்லூர் குறுக்கு வீதி ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

# சேதமுற்ற நிலையில் காணப்படும்
# சுகாதார வைத்திய நிலைய கட்டடம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.அராலி வீதியிலுள்ள சுகாதார வைத்திய நிலைய கட்டடம் சேதமுற்ற நிலையில் காணப்படுவதாகவும் இதனால் இங்கு முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் இடம் பெறுவதாக இப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இக்கட்டடத்தின் கூரை ஓடுகள் உடைந்து நொருங்கிய நிலையில் காணப்படுவதுடன் மழை நீரால் கட்டடத்தின் உட்புறம் சேதப்படுகின்றது.

இதேவேளை இக்கட்டடத்தில் குழந்தைகள் நிறுத்தல், ஊசி ஏற்றுதல், கர்ப்பிணிகளுக்கான மாதாந்த கிளினிக் பார்த்தல், மற்றும் போஷாக்குணவு வழங்கல் போன்ற சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனால் கட்டடமும் நிலையத்தின் உட்சூழலும் சுகாதாரக் குறைபாடுகளுடன் காணப்படுகின்றன. அத்துடன் இப் பகுதியில் பாழடைந்த கிணறும் துப்புரவாக்கப்படாமல் இருப்பதாக தெரிவிக்கும் மக்கள் இதனால் டெங்கு பரவக்கூடிய அபாயம் காணப்படுவதாக அச்சம் தெரிவிக்கின்றனர். (105)

# 'இந்து விஞ்ஞானி' நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரியின் விஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞான தினமும் 'இந்து விஞ்ஞானி' நூல் வெளியீடும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் விஞ்ஞான மன்றத்தின் தலைவர் மி.துமிலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் உப அதிபர் திருமதி.சத்தியரூபி சுரேந்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதன் முதற்பிரதியினை 2010 கணித உயிரியல் பிரிவு மாணவர்கள் பெற்றுக்கொள்ளவுள்ளனர். நூலின் ஆய்வுரையினை இரா.ஈஸ்வரதாஸன் வழங்குவார். (48)

# ஆசிரியர்களின் சம்பள நிலுவையை வழங்க வலி.கல்வி வலயத்தில் போதிய நிதி இல்லை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள ஆசிரியர்களின் சம்பள நிலுவையை வழங்குவதற்கு போதியளவு நிதியில்லையென கணக்காளர் கைவிரித்துள்ளதாக ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஆசிரிய சேவையில் பதவி உயர்வு பெற்றவர்களுக்கான சம்பள நிலுவைகளை வழங்குவதற்கு போதியளவு நிதியில்லையெனத் தெரிவிக்கப்படுவதுடன் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் வசித்துப் பின் சொந்த இடங்களிற்கு இடமாற்றம் பெற்றுவந்த ஆசிரியர்களின் சம்பள நிலுவைகளும் நீண்டகாலமாக வழங்கப்படாமல் உள்ளதென பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.


இவர்களது ஆவணங்கள் ஒழுங்காக இல்லாத காரணத்தினால் உரிய காலத்தில் ஆசிரிய சேவையில் பதவி உயர்வுகள் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டதெனவும், உரிய ஆசிரியர்கள் ஆவணங்களை வழங்கி நீண்ட காலத்துக்குப்பின்னர் பதவி உயர்வு வழங்கப்பட்டதே ஒழிய, சம்பள நிலுவைகள் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் மாகாணக் கல்வித் திணைக்களம் தகுந்த நடவடிக்கை எடுத்து சம்பள நிலுவை பெறுவதற்கு உதவ வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (06)

# பழைய பூங்கா வீதி தற்காலிகமாக மூடப்படும்


(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்.ஜோண்ஸ் கல்லூரியின் வருடாந்த துடுப்பாட்டப் போட்டிகள் கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளதால் அன்றைய தினம் காலை 7 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை பழைய பூங்கா வீதி தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் என்பதனையும் அந்தப் பாதையால் பயணிக்கும் பொது மக்கள் மாற்றுப் பாதையினை பயன்படுத்துமாறும் மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.



மகளிர் இலக்கியவிழா அண்மையில் யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்றபோது, அகில இலங்கை கம்பன் கழகத்தின் அமைப்பாளர் அ.வாசுதேவா (கம்பநேசன்) தலைமையில் கம்பராமாயணத்தில் பெண்கள் போற்றப்படுகின்றனரா? தூற்றப்படுகின்றனரா? என்னும் தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெற்றது. இதன் போது பட்டிமன்ற நடுவர் கௌரவிக்கப்படுவதையும், பிரதம விருந்தினர் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் உரையாற்றுவதையும் காணலாம். (48)

# தேர்தல்கால அறிக்கைகளை வெளியிடுவதோடு திருப்தி கொள்கிறதா மாணவ சமூகம்?




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவர் அமைப்பு இருக்கெண்டு உங்களுக்கு நினைவிருக்கும்.

முந்தி – பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அந்த அமைப்பு பல பொதுப்பணிகளைச் செய்து வந்தது.

1977 இல் நடந்த இன வன்முறையினால் பாதிக்கப்பட்டுத் தென்பகுதியில இருந்து வந்த அகதிகளுக்கு உதவிகள் செய்து அவர்களைப் பராமரித்தனர் அன்றைய மாணவர்கள்.

அதோட அந்தக் காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் புயலினால் ஏற்பட்ட பாதிப்புகளில் சிக்கியிருந்த மக்களுக்கு வடபகுதி மக்களிடம் இருந்து பெற்ற உதவிப்பொருட்களுடன் விரைந்து பல பணிகளையும் செய்தனர்.

பிறகும் பிறகும் இந்த மாதிரி பல்கலைக்கழக மாணவர் அமைப்பும் மாணவர்களும் மிக உற்சாகமாக மக்களுக்கான பணிகளைச் செய்து மக்களிடம் மதிப்பைப் பெற்றது வரலாறு.

1980 களில் யாழ்ப்பாணக்குடாநாட்டின் பல பகுதிகளிலும் குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்த மாணவர் அமைப்பும் மாணவர்களும் கிணறுகளைக் கூட அமைத்துக் கொடுத்தனர்.

இதைவிட 'மண்சுமந்த மேனியர்' என்ற வரலாற்றுப் பிரசித்தி பெற்ற (தயவு செய்து வரலாற்று நாடகம் என்று நினைத்து விடாதீர்கள்) நாடகத்தை உருவாக்கி ஊர்கள் தோறும் காண்பித்து விடுதலையைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

கவிதா நிகழ்வு என்றும் ஆய்வரங்குகள் என்றும் வெளியீடுகள் என்றும் பல பணிகள்...

இது மட்டுமா, அப்பொழுது மாணவர் அமைப்பில் செயற்பட்டவர்களில் பலரும் வெறும் வாய் சப்பிக் கொண்டிருக்காமல் உண்மையான விடுதலை விரும்பிகளாக – போராளிகளாகவே மாறிப் பயிற்சிக்குச் சென்றார்கள். போராடினார்கள். போராட்டப்பணிகளைச் செய்தார்கள்.

இதற்குள்ளும் சிலர் தண்ணி காட்டிக் கொண்டும் உல்டா விட்டுக்கொண்டும் தங்கள் காரியங்களைப் பார்த்தவர்கள் இருக்கிறார்கள். இன்னும் கொஞ்சப்பேர் தாங்களும் போராளிகள். தாங்களும் செயற்பாட்டுக்காரர்கள் என்று நடித்ததும் உண்டு.

அவர்களுடைய நாடகங்கள் இன்னும் முடியவில்லை. இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் அது தொடர்ந்து கொண்டேயிருக்கு.

போகட்டும்... நம்முடைய இன்றைய மாணவர் அமைப்பு என்ன செய்து கொண்டிருக்கிறது?

ஒரு பத்துப் பதினைந்து ஆண்டுகளாக (பொங்குதமிழ்க் காலத்திலிருந்து) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருக்கிற – ('செயற்படுகிற' அல்ல) மாணவர் அமைப்பும் அதன் மாணவர்களும் என்ன சாதனை செய்திருக்கிறார்கள் என்று யாருக்குமே தெரியாது.

பொங்குதமிழ் நிகழ்ச்சியை தங்களின் மிகப்பெரும் சாதனையாக அவர்கள் சொல்லக் கூடும்.

அந்தப் பொங்குதமிழ் நிகழ்வின் மூலமாகத் தமிழ் மக்கள் எத்தகைய அரசியல், சமூக, வாழ்க்கைப் பெறுமானங்களையும் பொருளாதார மலர்ச்சியையும் பெற்றனர்?

இதைக்குறித்து யாராவது விவாதிக்க வந்தால் நல்லது. அல்லது நமது ஆய்வாளர்களும் அரசியல், பொருளாதார சமூக அறிஞர்களும் இதைப்பற்றிச் சொல்லட்டும்.

கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் இன்னும் அந்த நாட்களில் இந்த நிகழ்வில் பங்கேற்றவர்கள் என்ற அடையாளத்தைக் காண்பித்து வெளிநாடுகளில் அரசியற் தஞ்சம் கோரிய ஒரு சிலரைத் தவிர்த்து பொது நன்மைகள் என்று எவருக்கும் கிட்டவில்லை.

இறுதிப்போரின்போது கூட மாணவர் அமைப்பு தனியே சில அறிக்கைகளை விடுவதுடன் படுத்து விட்டது.

போர் முடிந்த சில மாதங்கள் அது சற்று வினைத்திறனுடன் போரினால் பாதிக்கப்பட்ட வன்னி மாணவர்களைப் பராமரிக்கும் பணியிலும் வரையறைக்குட்பட்ட அளவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளைச் செய்வதிலும் ஈடுபட்டது. இதுவும் தற்துணிவாக அன்றைய நிர்வாகத்திலிருந்தவர்கள் செயற்பட்டதால் ஏற்பட்டதே.

ஆனால், இதைத் தொடர்வதற்கும் இதை வளர்த்து மீளவும் மாணவர் அமைப்பானது ஒரு வினைத்திறனும் மக்கள் கரிசனையும் உள்ள அமைப்பாக மாறுவதற்கு தீய சக்திகள் இடமளிக்கவில்லை.

அவை ஏனைய மாணவர்களைத் தூண்டி, மாணவர் அமைப்பைத் தங்கள் அரசியல் அபிலாஷைகளுக்குச் சேவகம் செய்யும் ஒன்றாக மாற்றி விட்டனர்.

இப்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பானது தேர்தல் காலத்தில் அறிக்கைகளை வெளியிடுவதற்கே பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

இதைத் தவிர்த்தால் எப்போதாவது, வேறு சில அறிக்கைகளையும் விடும்.

அதாவது அரசியல் செயற்பாட்டை 'அறிக்கைத் தேசிய அரசியலாக' நடத்தும் அரசியற் சக்திகளின் வாரிசுகளாகவும் அவர்களுக்குச் சேவகம் செய்யும் ஒரு அமைப்பாகவும் மாற்றி விட்டனர் பின்னர் வந்த மாணவர்களும் அவர்களுடைய மாணவர் தலைவர்களும்.

இதை நினைத்தால் யாருக்குத்தான் கண்ணீரும் கவலையும் வராது?

மிகப் பெரிய உண்மை இது பலமே வாழ்வு
பலவீனமே மரணம் - சுவாமி விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## நமக்காக 24 மணிநேரப் பணியில்...

நேற்று உலக சிறுநீரக விழிப்புணர்வு தினம். இன்றைய மனிதனின் வாழ்க்கைப் போராட்டம் என்பது பல்வேறு நோய்களோடு அவன் போராட வேண்டியிருப்பதும் சேர்ந்ததே. உணவே மருந்து என்ற காலம் போய் இன்று மருந்தே உணவு என்று ஆகிவிட்டது.

சுற்றுச்சூழலை, உண்ணும் உணவை, குடிக்கும் நீரை, மூச்சினுள் செல்லும் காற்றை எல்லாம் நஞ்சூட்டிக் கொண்டிருக்கும் மனிதனுக்கு, வருடத்தில் பாதி நாட்களுக்கு நோய்களின் தினம் கொண்டாட வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுவிட்டது. தனது உடலுறுப்புகளைப் பாதுகாப்பதற்கே விழிப்புணர்வு ஊட்ட வேண்டியிருக்கிறது.

உடம்பை உடலுறுப்புகளை சரிவரப் பேணுவதன் மூலமே உயிரைக் காத்துக்கொள்ளல் சாத்தியம் என்பது திருமூலர் காலத்திய விழிப்புணர்வு. நாம், உயிர் வாழ இன்றியமையாத அங்கங்களில் சிறுநீரகங்கள் இரண்டிற்கும் சிறப்பான இடமுண்டு. மிகச்சிறிய உறுப்புகளாயிருப்பினும் வியக்கத்தக்க பணி புரிந்து கொண்டிருப்பவை.

சிறுநீரகங்களை உடலின் வடிகால் என்று கூறலாம். இரத்தத்திலிருந்து உடலின் கழிவுப் பொருள்களைப் பிரித்தெடுத்து சிறுநீராக வெளியேற்றுகின்றன. மேலும், இரத்த அழுத்தத்தைச் சீராக வைத்திருப்பது; எலும்புகளை உறுதிப்படுத்துவது; செங்குருதிச் சிறுதுணிக்கைகளின் உற்பத்தியைத் தூண்டுவது; உடலின் நீர் மற்றும் அமிலப் பொருள்களைக் கட்டுப்படுத்துவது; உயிர் நிலைப்பதற்கான இரசாயன அளவுகளைக் கண்காணிப்பது போன்ற இன்றியமையாத பணிகளைச செய்யும் சிறுநீரகங்கள் உண்மையிலேயே வியப்புக்குரியவை.

சிறுநீரகம் சரியாக வேலை செய்யாவிட்டால் ஒருநாள்கூட நம்மால் ஆரோக்கியமாக இருக்க முடியாது. உடலில் எதிர்பார்க்காத தொந்தரவுகள் வர ஆரம்பித்து விடும். இந்தத் தொந்தரவுகள் நமக்கு வராமலிருக்க, நம் உடம்புக்குள்ளிருந்து ஓய்வொழிச்சலின்றிப் பணிபுரிந்து கொண்டிருப்பவை, சிறுநீரகங்களில் உள்ள ரத்த வடிகட்டிகள் (Nephorons).

இந்த வடிகட்டிகள் கழிவுகளை வடிகட்டி வெளியேற்றி, சுத்தமான ரத்தத்தை மட்டும் உடலுக்குள் மீண்டும் அனுப்புகின்றன. எஞ்சிய கழிவுகள் சிறுநீர்ப்பையில் தேங்கி, அங்கிருந்து சிறுநீராக வெளியறுகிறது.

சிறுநீரகங்கள் முழுவதும் சிறு சிறு ரத்த நாளங்கள் அதிக அளவில் உள்ளன. இயல்பான அளவுக்கு அதிகமான ரத்த அழுத்தம் மற்றும் கட்டுப்பாட்டில் இல்லாத நீரிழிவு நோய் காரணமாக ரத்த நாளங்கள் பழுதடைந்துவிடுகின்றன. குறிப்பாக உயர் ரத்த அழுத்த நோயானது, சிறுநீரக செயல்பாட்டை குறைப்பதோடு மற்றும் கோளாறுகளால் ஏற்படும் சிறுநீரக பாதிப்பை அதிகப்படுத்துகிறது.

ஆரோக்கியமான நிலையில் உள்ளவர்கள் எப்பொழுதும் கீழ்க் கண்ட அறிகுறிகள் வெளிப்பட்டால் எச்சரிக்கையடைவது அவசியம் என்கிறார்கள் மருத்துவர்கள். பாதத்தில் வீக்கம், சுவாசிப்பதில் சிரமம், சிறுநீர் கழிக்கும் போது வலி, அடிக்கடி சிறுநீர் கழித்தல் (ஒரு மணி நேரத்துக்குள் இரண்டு முறைக்கு மேல் கழித்தல்), சிறுநீரகம் உள்ள இடத்துக்கு மேல் (விலாப்புறத்தில்) வலி இருத்தல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனே மருத்துவரிடம் ஓடுக.

நமக்குச் சேவை செய்வதற்காகவே பொறுப்புகளை பதவிகளை தாம் ஏற்றிருப்பதாகச் சொல்லி, அதற்காகச் சம்பளங்களையும் சலுகைகளையும் பெற்றுக்கொண்டு, தலைவர்களாகவும் அதிகாரிகளாகவும் நம்மை ஏமாற்றிக் கொண்டிருப்பவர்களைப் போலில்லை சிறுநீரகங்கள். இருபத்து நான்கு மணி நேரமும் நம்மைப் பற்றிய சிந்தனையோடு நமக்காக வேலை செய்து கொண்டிருப்பவை. இந்த சிறுநீரகங்களைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டியது நமது கடமை!

- ஆசிரியர்

### குறிகாட்டுவான் - நயினாதீவு சேவையில் ஈடுபடும்

# படகு உரிமையாளர் நெருக்கடிக்கு சுமுகமான முறையில் கிடைத்தது தீர்வு

(வேலணை)

குறிகாட்டுவான் - நயினாதீவு இறங்குதுறைகளுக்கிடையில் சேவைகளை மேற்கொண்டு வருகின்ற மோட்டார் படகுகளினது உரிமையாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் பாதை சேவை (பாரி) யில் கடமையாற்றிவருகின்ற தொழிலாளர்களுக்கிடையிலான புரிந்துணர்வு கலந்துரையாடல் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது மோட்டார் படகினது உரிமையாளர்கள் குறிகாட்டுவான், நயினாதீவு இறங்குதுறைகளுக்கிடையில் புதிதாக ஆரம்பிக்கப் பட்டிருக்கின்ற பாதை (பாரி) யின் சேவையினால் தாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் பெருந்தொகையான பண முதலீடு செய்து மோட்டார் படகுகளைக் கொள்வனவு செய்து இந்த இறங்கு துறைகளுக்கிடையிலான சேவையினை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து மோட்டார் படகின் உரிமையாளர்களினது சேவைகள் பாதிப்பு அடையாத விதத்தில் மோட்டார் படகின் சேவைகள் வழமைபோல் இடம்பெற்று வருவதற்கு ஏற்ப பாதையினது சேவையானது மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் காலை 6.00 மணிக்கு குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருந்து புறப்படுகின்ற பாதையானது நயினாதீவு இறங்குதுறைக்குச் சென்றடையும். மீண்டும் அங்கிருந்து காலை 7.00 மணிக்கு நயினாதீவில் இருந்து குறிகாட்டுவான் இறங்குதுறை நோக்கிப் புறப்படும் பாதையானது மீண்டும் மதியம் 11.00 மணியளவில் குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவு இறங்கு துறைக்குச் செல்லும். மீண்டும் நயினாதீவு இறங்குதுறையில் இருந்து பி.ப. 5.00 மணியளவில் குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவிற்குச் செல்லும் பாதையானது அங்கிருந்து மாலை 6.00 மணியளவில் குறிகாட்டுவானுக்குப் புறப்படும். இரவு பாதை குறிகாட்டுவானில் தரித்து நிற்கும். மீண்டும் மறுநாள் இவ்வாறு சேவைகள் தினமும் நடைபெற்று வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண சபை பொறியியலாளர் எஸ்.சுதாகர் மற்றும் நயினாதீவில் உள்ள கிராம சேவை அலுவலர்கள் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொணடனர். (05)

# அரியாலை பூம்புகார் மக்களுக்கும் கட்டம், கட்டமாக இந்திய வீட்டுத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கு, பூம்புகார் நாவலடி பிரதேசத்திலுள்ள மக்களும் இந்திய வீட்டுத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டு கட்டம், கட்டமாக வீட்டுத் திட்டப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நல்லூர் பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி நல்லூர் பிரதேச அமைப்பாளருமான அ.இரவீந்திரதாசன் தெரிவித்துள்ளார்

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், நாவலடி, பூம்புகார் பகுதியில் 50 பயனாளிகளுக்கு இந்திய வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டு பணிகளும் நிறைவடைந்து, இந்திய அமைச்சர் ப.சிதம்பரம், அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைந்து திறந்து வைத்ததுடன், மக்களிடம் கையளித்தனர்.

இதேவேளை அரியாலை கிழக்கு சந்திரிக்கா பவுண்டேஷன் அமைப்பினால் 14 பயனாளிகளுக்கு வீட்டுத்திட்டப் பணிகள் வழங்கப்பட்டு முடிவடையும் நிலையை எட்டியுள்ளது.

மேலும் இக்கிராம அலுவலர் பிரிவில் 100 இந்திய வீட்டுத்திட்டம் வழங்குவதற்கான தெரிவுகள் இடம் பெற்றுவருவதுடன், நாவலடி கிராமத்துக்கு 36 பயனாளிகளுக்கு இந்திய வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இதைவிட இக்கிராமத்துக்கு மின்னிணைப்பு மற்றும் மலசலகூட வசதிகள் என்பன வழங்கப்பட்டுள்ளதுடன், அரியாலை கிழக்கு பிரதான வீதி, பூம்புகார் உள்ளக வீதி போன்ற வீதிகளும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பங்கேற்பு அபிவிருத்தித்திட்டம் வேலணையில் அடுத்தவாரம்

(வலி.மேற்கு)

பிரதேச செயலருடன் இணைந்த வகையில் வேலணைப் பிரதேசசபைக்குட்பட்ட 30 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் 30 பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் அடுத்த வாரம் அளவில் முன்னெடுக்கப்படவுள்ளது.

30 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள பொதுமக்கள், முதியோர்கள், கௌரவ உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள், ஆலயப் பிரதிநிதிகள், பங்குத் தந்தையர், கிராம அதிகாரிகள், சமுர்த்தி அதிகாரிகள் எனப் பலரும் இத்திட்டத்திற்கு முன்வந்து பங்களித்து உதவ வேண்டும் என வேலணை பிரதேசசபை தவிசாளர் சி.சிவராசா கேட்டுள்ளார்.

பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக சபையின் தவிசாளர் சி.சிவராசா மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளும் "ஒரு கிராமத்திற்கு ஒரு திட்டம்" என்ற வகையில் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டத்தினை தயாரித்து அடுத்த நான்காண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களைக் கிராம மட்டத்தில் தெரிவு செய்து வருகின்றன. இத்திட்டத்தினை அடுத்த வாரமளவில் கிராம அலுவலர்களுடன் இணைந்த வகையில் எமது சபையின் அனைத்து அலுவலர்களையும் உள்ளடக்கிய வகையில் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் தயாரிக்க உள்ளேன்.

எனவே இதற்கான ஆரம்பக் கட்ட வேலைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (92)

# ஆளும் கட்சி வேட்பாளர்கள் திட்டமிட்டு விதிகளை மீறுவதில்லை

## — கூறுகிறார் அமைச்சர் சுசில் —

(கொழும்பு)

ஆளும் கட்சியின் வேட்பாளர்கள் தேர்தல் விதி மீறல்களில் ஈடுபட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். ஆளும் கட்சி வேட்பாளர்களும், ஆதரவாளர்களும் வேண்டுமென்றே தேர்தல் விதி மீறல்களில் ஈடுபடுவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். வேட்பாளர்களும் மனிதர்களே எனவும் அவர்களை அறியாமல் இவ்வாறான குற்றச் செயல்கள் இடம்பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் விதி மீறல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வேட்பாளர்களுக்குப் பயிற்சிகளும், கருத்தரங்குகளும் நடத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். தேர்தல் விதிகளை மீறும் வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## எழுகதிரோன் கட்டுரையிலிருந்து

# கொன்று வீசப்பட்ட ஈழத்து பெண் ஆளுமைகள்

சர்வதேச பெண்கள் தினத்தில் ஈழம் இழந்துபோன பெண் ஆளுமைகள் பற்றிய சில நினைவுகள் வந்து செல்கின்றன. அவர்களில் ராஜனி திரணகம, செல்வி, சிவரமணி, சரோஜினி யோகேஸ்வரன், மகேஸ்வரி வேலாயுதம் ரேலங்கி செல்வராஜா...... ...... என்று நீண்டதொரு பட்டியலுக்கு நாம் சொந்தக்காரர்களாயுள்ளோம்.

இந்த இழப்புகள் இயற்கையில் வந்தவையல்ல. தவிர்த்திருக்க முடியாதவையுமல்ல. ஆனால் கடந்த காலத்தில் இலங்கையில் கோலோச்சிய வன்முறைச் சூழலும் அதன் மீதான கண்மூடித்தனமான வழிபாட்டு கலாசாரமுமே நாம் இழந்துபோன இந்த ஆளுமைகளை தீர்த்துக் கட்டியிருந்தது.

**இப்படி இன்னும் பலர் துரோகிகள் என்ற முத்திரை குத்தப்பட்டு கொன்று வீசப்பட்டனர். போர் தின்ற மாந்தர்களான இந்த மாபெரும் பெண் ஆளுமைகளை இந்த சர்வதேச பெண்கள் தினபொழுதுகளில் நினைவுகூருவோம்.**



இன்று பெண்களை பாதுகாப்போம், பெண்களை மீட்டெடுப்போம், பெண்களுக்கு சுதந்திரம் வழங்குவோம் என்று நாம் ஒவ்வொருவரும் கோசங்களை உச்சரித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் எம்மால் பல பெண் ஆளுமைகளின் இருப்புகளை கடந்த காலங்களில் காப்பாற்ற முடியவில்லை. எமது சமூகத்தை வழிநடத்தும் மிகப்பெரும் திறமைகளைத் தன்னகத்தே கொண்டிருந்த அந்தப் பெண்களை இன்று நாம் இழந்து நிற்கின்றோம். அதன் பிரதிபலனாகவே எமது பெண்சமூகம் இன்று மீள முடியாத அதலபாதாளத்துக்கு சென்று கொண்டிருக்கிறது எனலாம்.

**சைக்கிளில் சென்றுகொண்டிருந்த அவரை பின் தொடர்ந்த கொலையாளி அவரது தலையின் வலப்பக்கத்தில் முதல் வேட்டைத் தீர்த்தான். பின்னர் அவர் கீழே விழுந்ததும் இன்னும் இரண்டு தடவைகள் அவர் தலையில் சுட்டுவிட்டுச் சென்றான். கொல்லப்பட்ட மறுதினம் அவரின் உடல் மருத்துவ பீடத்திற்கு கொண்டு வரப்பட்ட பொழுது யாழ். பல்கலைக்கழகத்தின் பல மூத்த விரிவுரையாளர்கள் அங்கு சமூகமளிக்கவில்லை. ஏன்..? காரணம் அவர்களுக்கும் இக்கொலையை செய்தவர்கள் யார் என்று நன்றாகத் தெரியும். ஆனால் அனைவரும் மௌனம் காத்தனர்.**

### ராஜனி திரணகம

இலங்கையில் எழுத்துக்காக கொல்லப்பட்ட முதல் பெண். யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் உடல்கூற்றியல் விரிவுரையாளராக கடமையாற்றியவர். சமூகம் சார் சிந்தனையை மாணவர்களிடையே உருவாக்க வேண்டுமென்பதில் தீராது அக்கறையுடன் செயற்பட்டவர். அவர் பற்றி அவரது மாணவனொருவர் பின்வருமாறு எழுதுகிறார்.

"அவர் வெறும் உடற்கூற்றியல் விரிவுரையாளராக மட்டும் இருக்கவில்லை. அவரின் வகுப்புகள் எப்போதும் மிக உற்சாகம் நிறைந்ததாகவே இருக்கும். தனது அன்றாட விரிவுரைகளுக்கு அப்பால் எமது சமூகப் பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திக்கும் திசையிலும் மாணவர்களை மிகத் திறமையாக அவர் எடுத்துச் செல்வார். அப்போது அவரின் பரந்த அறிவையும் ஆழமான சமூக உணர்வையும் நாம் கண்டோம். எமக்கு அவற்றை புரிய வைப்பதற்காக சிறந்த திரைப்படங்கள், நாவல்கள் அவர் படித்து ரசித்த கவிதைகள் பலரின் உலக அனுபவங்கள் என சகலவற்றையும் எந்தவித தடங்கலும் இன்றி மள மளவென எம்முன் எடுத்துச் சொல்வார்..."

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தோல்வியை முன்னறிவித்த "முறிந்த பனை" என்னும் வரலாற்றுத் தொகுப்பின் ஆசிரியர்களில் ஒருவராக பணியாற்றியவர். புலிகளின் உளவுப்பிரிவில் பணியாற்றியவரும் கொலையாளியுமான பொஸ்கோ என்பவனின் கரங்களால் 1989 செப்டெம்பர் 21ஆம் திகதியன்று யாழ் பல்கலைக்கழக வளாகத்தில், 2ஆவது எம்.பீ.பீ.எஸ் பரீட்சையின் இறுதி அங்கம் முடிவடைந்து வெளியே வரும் போது சுட்டுக்கொல்லப்பட்டார்.

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த அவரை பின் தொடர்ந்த கொலையாளி அவரது தலையின் வலப்பக்கத்தில் முதல் வேட்டைத் தீர்த்தான். பின்னர் அவர் கீழே விழுந்ததும் இன்னும் இரண்டு தடவைகள் அவர் தலையில் சுட்டுவிட்டுச் சென்றான். கொல்லப்பட்ட மறுதினம் அவரின் உடல் மருத்துவ பீடத்திற்கு கொண்டு வரப்பட்ட பொழுது யாழ். பல்கலைக்கழகத்தின் பல மூத்த விரிவுரையாளர்கள் அங்கு சமூகமளிக்கவில்லை. ஏன்..? காரணம் அவர்களுக்கும் இக்கொலையை செய்தவர்கள் யார் என்று நன்றாகத் தெரியும். ஆனால் அனைவரும் மௌனம் காத்தனர்.

### கவிஞர் செல்வி

பெண்ணியவாதியான இவர் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் நாடகமும் அரங்கியலும் எனும் துறையின் இறுதியாண்டு மாணவி. "தோழி" இதழின் ஆசிரியராக இயங்கியவர். தனது கல்விச் செயற்பாடுகளுக்கு அப்பால் சமூகம் சார்ந்து தீராது உழைத்தவர். யாழ்ப்பாண பெண்கள் ஆய்வுவட்டம், பூரணி பெண்கள் நிலையம் என்று பலவிதத்திலும் பெண்களின் மேம்பாட்டுக்காக அயராது பாடுபட்டவர்.

1991ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் புலிகளால் கடத்தப்பட்ட இவரை விடுவிக்கக் கோரி சர்வதேச மனித உரிமை அமைப்பு பலவாறு முயன்றது. தனது இதழான Focusஇல் செல்வியைப் பற்றி 1994ஆம் ஆண்டு மார்ச் இதழில் விடுதலையைக் கோரி எழுதியது. புலிகள் எதற்கும் செவி சாய்க்கவில்லை.

இந்த இக்கட்டான காலகட்டத்தில்தான் உலகப் புகழ்பெற்ற 'Poetry International Award' கவிதைக்கான சர்வதேச விருது (Poets Essayists and Novelists) PEN அமைப்பினால் செல்விக்கு வழங்கப்பட்டது. இவ் விருதானது தங்களுடைய நம்பிக்கைகளுக்காகவும் இலட்சியத்திற்காகவும் எழுத்துத் தளத்திலும் கலைத்தளத்திலும் படைப்புக்களை உருவாக்கியவர்களுக்கு வழங்கப்படுவதாகும். செல்வி ஈழத்தின் நெருக்கடியான போராட்ட வாழ்நிலையில் இத்துறைகளில் சேவை புரிந்தமைக்காக இவ்விருது வழங்கப்பட்டது. இவரை புலிகள் இறுதிவரை விடுதலை செய்யவேயில்லை. காணாமற் போனோர் பட்டியலிலும் இல்லை.

### சரோஜினி யோகேஸ்வரன்

1997 ஆம் ஆண்டில் இவர் யாழ்ப்பாண நகர முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சரோஜினி இலங்கைத் தமிழ் அரசியல்வாதியும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வெ. யோகேஸ்வரனின் மனைவியும் ஆவார். திருமதி யோகேஸ்வரன் 1998 மே 17 ஆம் நாள் யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து புலிகளால் ஐந்து முறை துப்பாக்கியால் சுடப்பட்டு மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் மரணமானார். இவரது கணவர் வெ. யோகேஸ்வரனை 1987 ஆம் ஆண்டில் கொழும்பில் வைத்து சுட்டுக் கொன்றனர். இன்று யாழ்.மாநகர சபையும் வடமாகாண சபையும் ஒரு ஜனநாயக சூழலுக்குள் இயங்குவதற்கு உரமாக தன்னுயிரை தந்தவர்.

### சிவரமணி

இவ்வுலகில் வாழமுடியாது தன்னைத் தானே மாய்த்துக் கொண்டவர். எமது தமிழ் சூழலின் ஆணாதிக்க வெறிகளும் வன்முறை கலாசாரமும் இவரது தற்கொலைக்கு காரணமாயின. 1991 மே மாதம் இவர் சிறுவயதில் இறந்து போனாலும் அவரது கவிதைகள் இன்றைய பெண்ணிய கவிதைகளின் மூலவேர்களாக இன்றுவரை ஜீவிக்கின்றன.

### மகேஸ்வரி வேலாயுதம்

1983இன் பின்னர் இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டு இந்தியாவுக்கு ஓடிச்சென்ற தமிழ் மக்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக நின்று உதவிகரம் நீட்டியவர். அகதிகளின் வாழ்வில் ஓடியோடி பங்கெடுத்து அயராது உழைத்தவர். நமது முதலமைச்சர் விக்கினேஸ்வரன் இலங்கை அரசின் விசுவாசமான ஊழியனாய் உச்சநீதிமன்றில் இருந்துகொண்டு எமது இளைஞர்களுக்கு ஐந்துவருடம் பத்து வருடம் என்று சிறைவாச சாபம் கொண்டிருந்த வேளைகளில் இலங்கை சிறைகளில் வாடிய ஆயிரக் கணக்கான தமிழ் அரசியல் கைதிகளுக்கு இலவச வழக்காடி அவர்களின் வாழ்வில் ஒளியேற்றியவர்.

மனித உரிமை சட்டத்தரணியான 53 வயதுடைய மகேஸ்வரி வேலாயுதம் அவர்கள் சுகயீனமுற்றுள்ள தனது தாயாரான ஆசிரியை ஈஸ்வரி வேலாயுதம் அவர்களை பார்ப்பதற்காக தனது சொந்த ஊருக்கு சென்றிருந்த சமயம் 2008 மே மாதம் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்

### ரேலங்கி செல்வராஜா

இலங்கையில் இருந்த முன்னணி தமிழ் வானொலி மற்றும் தொலைக்காட்சி அறிவிப்பாளர் ஆவார். இவர் தனது கணவருடன் சேர்த்து ஆகஸ்ட் 12, 2005 கொழும்பில் வைத்து புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர்களின் கொலையின்போது ஒரு வயதும் அடையாத அவர்களது குழந்தை தெய்வாதீனமாக உயிர் தப்பியது.

இப்படி இன்னும் பலர் துரோகிகள் என்ற முத்திரை குத்தப்பட்டு கொன்று வீசப்பட்டனர். போர் தின்ற மாந்தர்களான இந்த மாபெரும் பெண் ஆளுமைகளை இந்த சர்வதேச பெண்கள் தினபொழுதுகளில் நினைவுகூருவோம்.

# கிளைபோசேட் களைநாசினிக்கு இலங்கையில் தடை விதிப்பு



உடன் அமுலுக்கு வரும் வகையில் கிளைபோசேட் (Glyphosate) நாசினிகளை தடைசெய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பணிப்புரை வழங்கியுள்ளதாக விசேட கருத்திட்ட அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

சிறுநீரக நோய் மற்றும் மிகவும் மோசமான விளைவுகளை இந்த இரசாயன பதார்த்தம் ஏற்படுத்துவதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். அமெரிக்கா போன்ற ஐரோப்பிய நாடுகளில் குளியல் அறையை சுத்தம் செய்வதற்காக Glyphosate இரசாயனத்தை உபயோகிக்கிறார்கள்.

இதனையே களைநாசினியாக எமது நாட்டில் விற்பனை செய்துவருகின்றனர். விவசாய நிலங்களில் மட்டுமல்லாமல், வீட்டுத்தோட்டங்களுக்கும் தென்னங் காணிகளிலும் களை நாசினியாக பயன்படுத்துகிறார்கள்.

இதன் மூலம் சிறுநீரக பாதிப்பு, புற்றுநோய், இருதய நோய், மாரடைப்பு போன்றவை ஏற்படக் கூடிய அபாயமும் ஏற்படும். மேலும் இக்களை நாசினியால் மரவள்ளிக் கிழங்கு, வாழை போன்றன அளவுக்கதிமான வளர்ச்சியையும் காண்பிக்கும்.

வழமைக்கு மாறாக கிழங்குகள் பெரிதாக காணப்படும். வாழைப்பழங்களும் எளிதாக காணப்படும் இவற்றை உண்பதன் மூலம் அதிகளவு பக்க விளைவுகள் ஏற்படும் என்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# இலங்கை மீது விசாரணை நடாத்த நவிப்பிள்ளைக்கு அதிகாரமில்லை

## சீனா, ரஷ்யா கூட்டாக அறிவிப்பு

(கொழும்பு)


ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு, இலங்கை தொடர்பில் விசாரணை நடாத்த அதிகாரம் கிடையாது என ரஷ்யாவும், சீனாவும் தெரிவித்துள்ளன.

இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணைக் குழுவொன்றை நியமிக்க நவநீதம்பிள்ளைக்கு அதிகாரம் கிடையாது.

இவ்வாறான விசாரணை நடாத்த அதிகாரம் இருந்தால் அது குறித்து அந்த அதிகாரங்களை சுட்டிக்காட்ட வேண்டும்.


மனித உரிமைப் பேரவையில், இலங்கைக்கு, சீனா, ரஷ்யா, கியூபா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஆதரவளித்து வருவதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை தொடரபில் விசாரணை நடாத்த ஆணைக்குழு அமைக்கும் அதிகாரம் நவநீதம்பிள்ளைக்கு காணப்படுவதாக ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி தெரிவித்துள்ளார்.



# அமெரிக்கா கொலைகளை செய்து இலங்கை அரசு மீது பழி போட முயற்சி

## அமைச்சர் வீரவன்ச குற்றச்சாட்டு



இலங்கையில் கொலைகளைச் செய்து அதற்கான பொறுப்பை அரசாங்கத்தின் மீது சுமத்த, அமெரிக்கா முயற்சித்து வருவதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பு கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிகையில்,

இலங்கைக்குள் மக்கள் ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்து அதில் தமது ஆட்களைப் புகுத்தி கண்டுபிடிக்க முடியாதபடி கொலைகளைச் செய்து அந்தக் கொலைகளுக்கான பொறுப்பை அரசாங்கத்தின் மீது சுமத்த அமெரிக்கா முயற்சித்து வருகிறது.

பணம் கொடுத்து விலைக்கு வாங்கிய அதிகாரிகளைப் பயன்படுத்தி அமெரிக்கா, இலங்கைக்குள் இந்த மக்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ள உள்ளது.

மாகாண சபைத் தேர்தலை கண்காணிக்க கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் புலனாய்வுத் துறைகளுக்கு பயன்படுத்தும் கமரா கட்டமைப்பையும், புதிய உபகரணங்களையும் கொண்டு வந்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

வெனிசூலாவை ஸ்திரமற்ற நிலைமைக்குள்ளாக்கிய அமெரிக்கா அங்கு பயன்படுத்திய வேலைத்திட்டத்தை இலங்கையிலும் அரங்கேற்றி வருகிறது.

அதேவேளை மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் வடக்கு மாகாணத்திற்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்குமாறு ஜெனிவா மனித உரிமை பேரவைக்கு யோசனை முன்வைத்துள்ளார்.

பெரும்பான்மை சிங்கள ஆடசியாளர்களிடம் தாம் துன்பப்படுவதாக ஆயர் கூறியுள்ளார்.

ஆயர் வெறுமனே இந்த யோசனையை முன்வைக்கவில்லை. அதுதான் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கை.

போர்க் குற்றங்கள் நடந்தன என்று ஜெனிவா மனித உரிமைப் பேரவை கூறுகிறது.

வடக்கில் இராணுவம் இருக்கின்றது இதனால் தமிழ் மக்களுக்கு தொந்தரவு கொடுக்கப்படுகிறது என்ற நிலைப்பாட்டை அவர்கள் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லாதவற்றை இருப்பதாக காட்டி வருகிறது என்றும் அமைச்சர விமல் வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளார்.

# தானியங்கி கைவிரல் அடையாளம் 899 குற்றவாளிகள் சிக்கினர்

தானியங்கி கைவிரல் அடையாள முறை கொண்டுவரப்பட்டது தொடக்கம் இதுவரை 899 குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தானியங்கி கைவிரல் அடையாள முறை அறிமுகப்படுத்தி 12 நாட்களுக்குள் 4035 கைவிரல் அடையாளங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன குறிப்பிட்டார்.

அதில் நூற்றுக்கு 22 வீதமானோர் குற்றவாளிகள் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தானியங்கி கைவிரல் அடையாள முறை கடந்த மாதம் 27ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டது.

இதற்கு முன்னர் கைவிரல் அடையாள அறிக்கை பெற 14 நாட்கள் சென்ற நிலையில் தற்போது 3 நிமிடங்களில் அறிக்கை பெற்றுக் கொள்ள முடியும்.

# சர்வதேச சமூகத்திற்கு அஞ்சி ஆணைக்குழுக்களை நிறுவவில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வதேச சமூகத்திற்கு அஞ்சி ஆணைக்குழுக்கள் நிறுவப்படவில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள் ளார்.

காணாமற் போனவர்கள் தொடர்பிலான விசாரணை ஆணைக் குழுவும், நல்லிணக்க ஆணைக்குழுவும் எவருக்கும் அஞ்சி ஏற்படுத்தப்படவில்லை. குறிப்பாக சர்வதேச சமூகத்திற்கு அஞ்சி இவ்வாறு ஆணைக்குழு நிறுவப்படவில்லை. போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை அழுத்தங்கள் காரணமாக மீள்குடியேற்றவில்லை.

1989, 1990களில் ஆணைக் குழுக்கள் தேவை என்று கோரியது போன்று, இன்றும் ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. அரசாங்கம் என்ற ரீதியில் நடந்த சம்பவங்கள் பற்றி விசாரணை நடாத்துவது அவசியமானது. 30 ஆண்டுகள் நாட்டில் போர் நீடித்தது. ஆனால் கடந்த சில ஆண்டுகளில் இடம் பெற்ற சம்பவங்கள் பற்றி மட்டும் விசாரணை நடாத்துமாறு கோருவதன் இரகசியம் என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# பிரபாகரனுக்கு நேர்ந்த கதியே அமைச்சர் ஹக்கீமிற்கும் ஏற்படும்

## எச்சரிக்கிறார் மேர்வின்

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு நேர்ந்ததே, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமிற்கும் நேரும் என பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டுக்கு எதிராக துரோகம் இழைப்பவர்களுக்கு பிரபாகரனின் தலைவிதியே காத்திருக்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். களனியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில பங்கேற்ற போத அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொருத்தமில்லாத உரைகளை ஆற்றி மக்களிடையே இன முரண்பாடுகளை உருவாக்க வேண்டாம் என. கோரிக்கை விடுப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வாயை மூடிக்கொண்டு அமைச்சுப் பதவியை காப்பாற்றிக்கொள்வதே ஹக்கீம் செய்ய வேண்டிய புத்திசாதுரியமான காரியம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சந்திரிக்கா அரசாங்கத்தை கவிழ்ததனைப போன்று இந்த ஆட்சியையும் கவிழ்க்க முடியும் என அமைச்சர் ஹக்கீம் அண்மையில் குறிப்பிட்டிருந்தாகவும், அவ்வாறான சாத்தியங்கள் எதுவும் கிடையாது எனவும் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.



ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள 113 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவே தேவை என்ற போதிலும், ஜனாதிபதிக்கு 160 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகள் மற்றும் இனத்தவர்களையும் ஜனாதிபதி ஒரே விதமாக நடாத்தி வருகின்றார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் எவரேனும் ஆதரவினை விலக்கிக் கொண்டால் அது அரசாங்கத்தை பாதிக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டுக்கு எதிராக செயற்பட்டால் பிரபாகரனுக்கு நேர்ந்த கதியே நேரும் என்பதனை நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

# மத தலங்கள் மீது தாக்குதல் வெறுப்பின் அறிகுறி அல்ல

## அரசாங்கம் தெரிவிப்பு

இலங்கையில் மத வழிப்பாட்டுத் தலங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் தனித்த சம்பவங்கள் எனவும் மத வெறுப்போ, வெறுப்பின் அறிகுறியோ அல்ல என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஜெனிவா மனித உரிமை பேரவையின் 25 ஆவது கூட்டத் தொடரில் சுதந்திரம் அல்லது மதம் அல்லது நம்பிக்கை தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் ஹெய்னர் பொலிபெல்ட் தாக்கல் செய்த அறிக்கை பற்றிய கலந்துரையாடலில் கலந்து கொண்டு பேசிய இலங்கை பிரதிநிதி பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே இதனைக் கூறியுள்ளார்.

மத வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்களை அரசாங்கம் மன்னிக்கவில்லை என்றும் இலங்கை பிரதிநிதி குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து சம்பவங்கள் குறித்தும் பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவது உட்பட சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இலங்கையின் சமூக, கலாசார, வரலாற்று விதிமுறைகளைக் கொண்டு வழக்கமான உரையாடல்கள் மூலம் மக்கள் மத்தியில் மத நல்லிணக்க புரிந்துணர்வை உறுதிப்படுத்த பல்வேறு மட்டங்களில் பரந்தளவில் தொடர் முனைப்புகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.


# கட்டணம் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

தெற்கு அதிவேக வீதியில் பயணிக்கும் பஸ்களுக்கான கட்டணத்தை குறைப்பதற்கு அதிவேக பஸ் போக்குவரத்து சேவைகள் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவிற்கமைய, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் தலைவர் எல்.ஏ விமலரத்ன தெரிவித்தார்.இதற்கமைய, கடுவெலவில் இருந்து காலி வரையான அதிவேக மார்க்கத்தின் பஸ் கட்டணம் 420 ரூபாவென தெரிவிக்கப்படுகின்றது.

கடுவெலவில் இருந்து மாத்தறை வரையில் 500 ரூபா அறவிடப்படுமென எல்.ஏ விமலரத்ன தெரிவித்தார்.இந்தக் கட்டண திருத்தம் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களுக்கு மாத்திரமல்லாது, தனியார் பஸ்களுக்கும் செல்லுபடியாகும் என அவர் தெரிவித்தார்.

காரைநகர் மணிவாசகர் சபையினரால் நடாத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மாணவர்கள் பாடல் இசைப்பதையும், மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுவதையும் காணலாம். (50)

# தற்துணிவும், விடாமுயற்சியுமே இன்று பெண்களின் வளர்ச்சிக்கு பெருமைதந்தது

## ஆசிரிய ஆலோசகர் கௌரிமுகுந்தன்

(அச்சுவேலி)

காலங்காலமாக அடிமைகளாக பின்தள்ளப்பட்டும், அடக்கு முறைகளுக்கு ஆளாக்கப்பட்டும், தீண்டத்தகாதவர்களாகவும் பார்க்கப்பட்டு வந்த பெண்கள் குலம் இன்று தனிப் பெரும் புகழோடு பார்போற்றும் வீராங்கனைகளாக் தம்மை மாற் றிக் கொண்டு விட்டார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களின் தற்துணிவும், விடாமுயற்சியும், எதிலும் சாதிக்க வேண்டும் என்ற பேரார்வமும் தான்.

யாழ்.கல்வி வலயத்தின் தமிழ்ப் பிரிவிற்கான சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் திருமதி.கௌரி முகுந்தன் ஆவரங்கால் புத்த கரட்டி ஸ்ரீவிஸ்ணு வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற மகளிர் தின நிகழ்வின் போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

பெண்களின் வரலாறுகளை எடுத்து நோக்கும் போது அவர்கள் ஆண்களின் அடிமைகளாகவும், ஆண்களுக்கு தொண்டு செய்யும் மடந்தைகளாகவுமே பார்க்கப்பட்டு வந்தனர். குடும்பத் தலைவனாகிய ஆண்கள் இறந்தால் துணைவியும் உடன் கட்டை ஏற வேண்டும், வீட்டுக்குள் முடங்கி வாழ வேண்டும் என்றிருந்த நிலை மாறி பெண்களே குடும்பச் சுமைகள் அனைத்தையும் சுமக்கக் கூடிய வல்லவர்களாக இன்று தம்மை மாற்றிக் கொண்டுவிட்டனர்.

அவர்கள் கல்வி கற்றால் அது குற்றம் என்றும் கூறிவந்தவர்களுக்கே சவால்விடும் அளவிற்கு பெண்களின் வளர்ச்சிப் போக்கு என்றுமில்லாத அளவிற்கு ஓங்கிப் பரிணமித்து விட்டது. பெண்கள் சர்வதேச ரீதியிலே பல சாதனைகளைப் படைத்துள்ளதோடு தொடந்து பல சாமர்த்தியங்களையும், சாகசங்களையும் நிகழ்த்தி வருகின்றனர்.

இவ்வாறு பெண்களின் எண்ணிலடங்காத பெருமைகளை நீட்டிக்கொண்டே செல்லலாம். எனவே இனிவரும் காலங்களில் பெண்கள் ஆண்களுக்கு எவ்விதத்திலும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நினைவில் நிறுத்தி அவர்களையும் சமத்துவத்துடனும், கௌரவத்துடனும் மதித்து நடக்க வேண்டும் என்றார். (03)

# குற்றச் செயல்களுக்கு எதிராக வடமராட்சியில் ஆர்ப்பாட்டப்பேரணி

வடமாகாணத்தில் அண்மைக் காலமாக தொடர்ச்சியாக நடைபெற்று வரும் பெண்கள், சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நெல்லியடி நகரப் பகுதியில் கண்டன ஆர்ப்பாட்டமும் கவனயீர்ப்பு போராட்டமும் நடைபெறவுள்ளது.

எமது பிரதேசத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் பாலியல் துஷ்பிரயோகங்கள் தற்கொலைகள், மதுபோதை பாவனைகள், சட்ட விரோத பணகொடுக்கல் வாங்கல், வன்முறைகள் போன்றவற்றுக்கு எதிராக விழிப்பூட்டல் கவனயீர்ப்புப் போராட்டம் அரசியலுக்கு அப்பால் பொதுநோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நடைபெறவுள்ளது.

வடமராட்சி பொதுமக்களின் ஏற்பாட்டில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு வடமாகாணசபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் தலைமையில் நெல்லியடி நகரில் ஆரம்பித்து கரவெட்டி பிரதேச செயலகத்தில் நிறைவடையவுள்ளது. அங்கு கரவெட்டி பிரதேசசெயலர் எஸ்.சிவசிறி மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் ஆகியோர் ஊடாக வடமாகாண, மாவட்ட அரச அதிபர்களுக்கு மகஜர்கள கையளிக்கப்படவுள்ளன. அத்துடன் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வடமாகாண பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு மகஜர்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இந்த கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு வடமராட்சி பிரதேசசெயலகங்கள், பிரதேச சபைகள் மற்றும் வர்த்தக சங்கங்கள், மகளிர் அமைப்புக்கள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் ஆதரவளித்துள்ளன. எனவே இக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் ஒற்றுமையுடன் தவறாது கலந்து கொண்டு எதிர்காலத்தில் குற்றச்செயல்களை இல்லாதொழிக்க பங்கு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# என்றும் குன்றாத ஜோதிட நம்பிக்கை துடிப்புக்களின் பலாபலன்கள்

**விரல்கள்:**

வலதுகைப் பெருவிரலில் துடிப்பு ஏற்படின் நற்பலன்கள் விளையும். வலது கையின் ஆள்காட்டி விரலெனின் பொன் பொருள் கிட்டும். வலக்கை நடுவிரலெனின் நற்காரியங்களில் ஈடுபட முன்னிற்பார். வலது கையின் மோதிர விரலெனின் செய்யும் முயற்சிகள் வெற்றியை ஈட்டித்தரும். சிறுவிரல் துடிப்பின் அவலச் செய்தி வந்தடையும். இடது கையின் பெரிய விரல் துடிப்பின் குறைவற்ற செல்வமுண்டாகும். ஆள்காட்டி விரலெனின் அரசின் செல்லப் பிள்ளையாக அரவணைக்கப்படும் நிலைக்கு வந்து விடுவார். இடது கையின் நடுவிரல் எனின் வீண் பிரச்சினைகள் வந்தடையும். மோதிரவிரல் துடித்துவிடின் பிறர் பாராட்டு வாழ்க்கை அமைந்துவிடும். இடதுகையின் சிறு விரல் துடித்தால் நீண்ட ஆயுளும் நோய் நொடியற்ற வாழ்வும் அமைந்து விடும்.

**நெஞ்சு:**

நெஞ்சஞ்துடிப்பின் நோயும், கவலைகளும் பிறரால் தொல்லைகளும் சூழும்.

**மார்பகங்கள்:**

வலதுபாகமெனின் அழிவுப் பாதையை நோக்கி விரைவார். இடது எனின் சுகபோக வாழ்வமைந்துவிடும்.

**வயிறு:**

வயிற்றில் துடிப்பு நேரிடின் நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாக நோயினால் வருந்துவார்.

(தொடரும்...)

ஜோதிர் வித்யா ரத்னா
வி.ஏ.சிவராசா.

# புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு இன்றுடன் இளவாலையில் முடிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் புகைத்தலுக்கெதிரான 101 நாள் வேலைத்திட்டம் வலி.தென்.மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெற்று வருகின்றது.

மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் இதன் மூலம் விழிப் புணர்வூட்டப்பட்டு வருவதுடன் சண்டிலிப்பாய் பொதுச்சுகாதார உத்தியோகத்தரின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை முதல் 5 கட்டங்களாக நடைபெற்றுவரும் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை இளவாலையில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் 'புகை எமக்கு பகை' என்னும் தலைப்பில் இடம்பெற்ற போட்டிகளுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.(48)

# முரசின் இன்றைய பலன்



(14.03.2014 வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் மாசி மாதம் 30 ஆம் திகதி. பிரதோஷ விரதம். திரயோதசி / மரணயோகம். ஆயிலிய நட்சத்திரம் மு.ப. 09.06 வரை. பின் மகம்.

இராகு காலம 10.51 - 12.21 வரை. சுபநேரம 06.21 - 07.51 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| **மேடம்** | நுகர்வோர் சட்டத்தை மீறியதால் தண்டம், நீண்டகால பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துதல். |
| **ரிஷபம்** | சகிப்பு விட்டுக் கொடுப்பினால் குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கல், சமூகப் பணிகளில் நாட்டம் ஏற்படும். |
| **மிதுனம்** | பரிகாசம் நிறைந்த பேச்சால் மனக்கொதிப்பை அடைதல், இல்லறத்துணையின் அன்பும் ஆதரவும் கிட்டும். |
| **கடகம்** | நட்புக் கொண்டாட கைவிட்டுப்போனோர் வருதல், பேச்சு செயலில் நிதானத்தைப் பின்பற்றுவதினால் துயர் விட்டுப்போதல். |
| **சிம்மம்** | பூர்விகச் சொத்தில் ஒரு பகுதியாவது கிடைத்தமை எண்ணி மகிழ்வு, ஊக்கமெடுக்கும் பிள்ளைகளை எண்ணி சந்தோஷமடைதல். |
| **கன்னி** | உங்கள் முன்னேற்றத்தில் அக்கறைகாட்டும் ஊழியர்களை எண்ணி களிப்படைதல், நற்பெயரைப் பாதுகாக்க சொல்லிலும் செயலிலும் கவனமாக இருத்தல். |
| **துலாம்** | தடைப்பட்டிருந்த செயலை நிறைவேற்ற பகீரதப் பிரயத்தனம், காணி, மனைவிற்க 'அடடோனி' பவர் வந்து சேரல். |
| **விருச்சிகம்** | கீரைக்கடைக்கும் எதிர்கடை ஏற்பட்டதைக் கண்டு மனக்கிலேசம், ஏழரைச்சனி இருப்பதினால் புதிய ஒப்பந்தம் ஏற்க பின்னடித்தல். |
| **தனுசு** | கணக்கில் தில்லு முல்லுக்காணப்பட்டதால் கொள்வனவு செய்ய விரும்பாமை, தற்காலிக பதவி நிரந்தரமாக்கப்படும் செய்தியால் மன மகிழ்வு. |
| **மகரம்** | கால் நடை குறுக்கறுத்ததினால் விபத்தினின்றும் அருந்தப்பு, படுக்கையில் காணாக்கழயினால் அவஸ்த்தைப்படல். |
| **கும்பம்** | விவாகம் இழுபடுவதினால் மனக்கவலை தக்க வைப்பு, புதிதாக மனைகோல இடமெடுத்தல். |
| **மீனம்** | முகவரிக்குரியவரைத்தேடி அலைந்து விரக்தி எற்படல், காலாவதியான பொருளைப் பெற்றதால் முரண்படுதல். |

## வடக்கின் போர் நேற்று கோலாகல ஆரம்பம்

# சுழல்பந்துவீச்சிற்கு திணறுகிறது சென். ஜோண்ஸ்




(யாழ்ப்பாணம்)

வடக்கின் போர் என வர்ணிக்கப்படுகின்ற மூன்று நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் சுழற்பந்து வீச்சாளர்களை எதிர்கொள்ள முடியாமல் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி திணறி வருகின்றது.

யாழ். மத்திய கல்லூரி அணிக்கும், சென். ஜோண்ஸ் கல்லூரி அணிக்குமிடையிலான 108ஆவது வடக்கின் போர் என வர்ணிக்கப்படுகின்ற மூன்று நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி நேற்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி சுழற்பந்து வீச்சாளர் லோகதீஸ்வரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் முதல் ஐந்து விக்கெட்டுக்களையும் சீரான இடைவெளியில் பறிகொடுத்து வந்தது. இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த கப்டன் யூனியஸ் கனிஸ்ரன், நிரோஜன் இணை அணியின் நிலையை உணர்ந்து பொறுப்புடன் ஆடியது. ஒரு முனையில் நிரோஜன் அதிரடியாக ஆட, மறுமுனையில் கப்டன் யூனியஸ் கனிஸ்ரன் நிதானமாக ஆடினார். இந்த விக்கெட்டைப் பிரிக்க சென். ஜோண்ஸ் கல்லூரி அணிக் கப்டன் துவாரகசீலன் களத்தடுப்பு பல வியூகங்களை வகுத்ததுடன் பந்து வீச்சாளர்களையும் சுழற்சி முறையில் பயன்படுத்தினார். இந்நிலையில் இந்த ஜோடி 60 ஓட்டங்களைப் பெற்றவேளை (யூனியஸ் கனிஸ்ரன்) கானாமிர்தனால் பிரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து யாழ். மத்திய கல்லூரியின் ஏனைய விக்கெட்டுக்கள் விரைவாக சரிக்கப்பட்டன. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக 63.2 ஓவர்களை எதிர்கொண்டு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிரோசன் 49 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 40, யூனியஸ் கனிஸ்ரன் 70 பந்துகளை எதிர்கொண்டு 36, சஞ்சயன் 94 பந்துகளை எதிர்கொண்டு 26, ஜெயந்திரன் 57 பந்துகளை எதிர்கொண்டு 19, சௌமிதரன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லோகதீஸ்வர் 55 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு, கானாமிர்தன், கஜிபன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைச் சாய்த்தனர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி மிக நிதானமாக ஆடி வந்தது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய கபில்ராஜ், சிந்துஜன் வேகப்பந்து வீச்சாளர்களை சிறப்பாக எதிர்கொண்டு ஓட்டங்களை மெல்ல மெல்ல அதிகரித்து வந்தனர். இந்நிலையில் யாழ். மத்திய கல்லூரி அணிக் கப்டன் யூனியஸ் கனிஸ்ரன் பந்துவீச்சில் மாற்றம் செய்தார். இதற்கமைய 12ஆவது ஓவரை சுழற்பந்து வீச்சாளர் மதுஷன் வீசினார். மதுஷனின் முதலிரு பந்துகளையும் நிதானமாக எதிர்கொண்ட சிந்துஜன் மூன்றாவது பந்தில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். 30 ஓட்டங்களைப் பெற்றவேளை சென். ஜோண்ஸ் கல்லூரி அணியின் முதல் விக்கெட் மதுஷனால் வீழ்த்தப்பட்டது. தொடர்ந்து சிறப்பான முறையில் பந்துவீசிய மதுஷன், நிருபன் ஆகியோர் சென். ஜோண்ஸ் கல்லூரி அணியின் துடுப்பாட்ட வீரர்களைத் திணறச் செய்து விக்கெட்டுக்களைச் சரித்தவண்ணமிருந்தனர். 30 ஓட்டங்களைப் பெற்றவேளை முதல் விக்கெட் சரிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து 46 ஓட்டங்களை சென். ஜோண்ஸ் கல்லூரி அணி பெற்றுக்கொள்வதற்குள் மேலும் ஐந்து விக்கெட்டுக்களை மளமளவென பறிகொடுத்தது. குறிப்பாக, மதுஷன், நிருபன் ஆகியோரின் சுழற்பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிய சென் ஜோண்ஸ் கல்லூரி அணி 16 ஓட்டங்களுக்குள் ஆறு விக்கெட்டுக்களை பறிகொடுத்தது. ஏழாவது விக்கெட்டுக்காக இணைந்த பிளமிங், கஜீபன் ஆகியோர் நிதானமாக ஆடி வருகின்றனர். இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டவேளை சென். ஜோண்ஸ் கல்லூரி அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் சிந்துஜன் 39 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 18, கபில்ராஜ் 37 பந்துகளை எதிர்கொண்டு 13 ஓட்டங்களைப் பெற்றனர் ஏனையோர் ஒற்றை இலக்கு ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். ஆட்டமிழக்காது பிளமிங், கஜீபன் ஆகியோர் களத்திலுள்ளனர். பந்துவீச்சில் மதுஷன் 10 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று, நிருபன் 9 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். நான்கு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 112 ஓட்டங்களால் பின்னிலையில் உள்ளது. நேற்றைய முதல் நாள் ஆட்டத்தில் இரு கல்லூரி அணியின் சுழற்பந்து வீச்சாளர்களால் 14 விக்கெட்டுக்கள் சாய்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

இதேவேளை, நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது. வீரர்கள் அறிமுகத்தைத் தொடர்ந்து இரு அணிகளும் விருந்தினர்களால் கைலாகு கொடுத்து உற்சாகப்படுத்தப்பட்டனர். இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, சென். ஜோண்ஸ் கல்லூரி அதிபர் வண. ஞானப்பொன்ராசா, யாழ். மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தன் மற்றும் பழைய மாணவர்கள், ஆதரவாளர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இப்போட்டிக்கு முதன் முறையாக எயாட்ரல் நிறுவனம் அனுசரணை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி, 20, 48, 42)









## இல்ல மெய்வல்லுநர்

(அச்சுவேலி)

புத்தூர் மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் பொ. வரதகுல சிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந் தினராக கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு. சற்குணராஜா, சிறப்பு விருந்தினர்களாக புத்தூர் மெதடிஸ்த மிசன் தேவாலய போதகர் டேவிட் அழகராஜா, புத்தூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கோ. அனுதர்சன், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட மகளிர் சமாசத் தலைவி செல்வி இ. கோமதி, புத்தூர் கலைமதி சனசமூக நிலையப் போசகர் கா. கதிர்காமநாதன் ஆகி யோர் கலந்து கொள்ளவுள்ளனர். (03)

## தாச்சி, கிரிக்கெட் பதிவுக்கு முந்துங்கள்

(சுழிபுரம்)

பொன்னாலை தெற்கு சுழிபுரம் இளம் சுடர் சனசமூக நிலையத்தின் ஆண்டு நிறைவை முன்னிட்டு மாவட்ட அணிகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் மற்றும் தாச்சிப் போட்டி நடாத்தப்படவுள்ளது. இப்போட்டியில் பங்கொள்ளவுள்ள அணிகளை நாளை மாலைக்கு முன்னர் 0779424438 அல்லது 0778680500 என்ற தொலைபேசி இலக் கங்களுடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள முடிவும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித் துள்ளனர்.

இதேவேளை, இப்போட்டியில் வெற்றி யீட்டும் அணிகளுக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்க்ள் வழங்கப்படும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# வடமராட்சி கால்பந்து சமர் கிண்ணம் வென்றது உதயதாரகை



சக்கோட்டை சென்.சேவியர் விளை யாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வந்த வடமராட்சியின் கால்பந்துச் சமர் என்று அழைக்கப்படும் அணிக்கு ஐந்து பேர் கொண்ட கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கற்கோவளம் உதயதாரகை அணி கைப்பற்றிக் கொண்டது.

இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி கடந்த திங்கட்கிழமை சக் கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

24 அணிகள் பங்குபற்றிய இப் போட்டித் தொடர் விலகல் முறையில் நடைபெற்றது..

முதலாவது அரையிறுதிப் போட்டி யில் உதயதாரகை அணியும், மனோகரா அணியும் மோதின. இதில் உதயதாரகை அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுது.

மற்றுமொரு அரையிறுதிப் போட்டி யில் கொலின்ஸ் அணியும், திக்கம் இளைஞர் அணியும் மோதின. இதில் கொலின்ஸ் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் கரணவாய் கொலின்ஸ் அணியும், உதயதாரகை அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய உதயதாரகை அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இச்சுற்றுப்போட்டியின் தொடர் நாய கனாக உதயதாரகை அணியின் சுரேந் திரன் வாகீசன், இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாக அதே அணியின் குயின்தீன் ஜன்சன், சிறந்த கோல் காப் பாளராக கொலின்ஸ் அணியின் எஸ். நிரோஜ் ஆகியோர் தெரிவு செய் யப்பட்டனர்.

## மென்பந்து கிரிக்கெட்

உடுவில் பிரதேச இளைஞர்கழக சம்மேளனம் பிரதேச இளைஞர் கழக அணிகளுக்கிடையில் மென்பந்து கிரிக் கெட் போட்டியை நாளையும், நாளை மறு தினமும் சுன்னாகம் காந்தி நியூஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடாத்தவுள்ளது.

ஐந்து ஓவர்கள் கொண்ட இப் போட்டித்தொடர் அணிக்கு ஏழு பேரைக் கொண்டதாகும். இப்போட்டியில் வெற்றியீட்டும் அணிகளுக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரி வித்துள்ளனர். (48)

## வென்றது குப்பிளான் விக்னேஸ்வரா

உடுவில் பிரதேச இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான வலைப்பந் தாட்டப் போட்டியில் குப்பிளான் விக் னேஸ்வரா அணி வெற்றிபெற்றது.

உடுவில் பிரதேச இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான வலைப்பந் தாட்டப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் குப்பிளான் விக்னேஸ்வரா இளைஞர் கழக அணியும், சுன்னாகம் காந்திய மன்ற இளைஞர் கழக அணி யும் மோதின. இதில் குப்பிளான் விக்கினேஸ்வரா இளைஞர் கழக அணி 17:02 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.இதேவோளை, உடுவில் புளூஸ் இளைஞர் கழக அணி 08:07 என்ற புள்ளிகள் அடிப்படையில் இணுவில் கலையொளி இளைஞர் கழக அணி-யினை வென்றது.

விளையாட்டுச் செய்திகள்

## கிண்ணத்தை வெல்ல பிரகாசமான வாய்ப்பு

### வட்சன் நம்பிக்கை

உலகக் கிண்ண ருவென்ரி-20 கிண்ணத்தை வெல்ல பிரகாச மான வாய்ப்பு எங்கள் அணிக்கு உண்டு என அவுஸ்ரேலிய அணியின் சகலதுறை வீரர் வட்சன் தெரிவித்துள்ளார். நான் இதுவரை இடம் பெற்ற அவுஸ்ரேலிய அணிகளிலேயே இது தற்போதைய அணி தான் சிறந்த கலவையில் அமைந்திருப்பதாக கருதுகிறேன். எல்லா வகையிலும் தொடர்ச்சியாக அதிரடியாக ஆடக்கூடிய துடுப்பாட்ட வீரர்கள் அணியில் உள்ளனர். 10ஆவது வரிசை வீரராலும் கூட அதிரடியாக விளையாட முடியும். இதே போல் உலகத் தரமான ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர்கள், இறுதி கட்டத்தில் கட்டுக்கோப்பாக பந்து வீசக்கூடிய பந்து வீச்சாளர்கள், தரம் வாய்ந்த சுழற்பந்து வீச்சாளர்கள் என்று பந்து

வீச்சுத் துறையும் வலுவாக உள்ளது. உலகின் எந்த விதமான சூழலிலும், எந்த அணிக்கு எதிராகவும் அபாரமாக விளையாடும் சர்வ வல்லமை உடைய அணியாகத் திகழ்கிறோம். ருவென்ரி-20 கிரிக்கெட்டின் முடிவை கணிக்க முடியாது. ஆனால் தனி வீரராக வெற்றியை தேடித்தரக்கூடிய வீரர்கள் அணியில் நிறை யப் பேர் இருக்கும் போது, அதன் பின்னர் அந்த அணிக்கே வெற்றி வாய்ப்பு அதிகமாக உண்டு. அந்த மாதிரியான அணியைத் தான் நாங்கள் கொண்டுள்ளோம். இதனால் கோப்பையை வெல்ல எங்களுக்கு பிரகாசமான வாய்ப்புள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


## நம்பிக்கை தரும் சிறிய முன்னேற்றம் சூமாக்கர் குறித்து புதிய தகவல்

(பாரிஸ்)

பனிச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டபோது விபத்தில் சிக்கிய பிரபல கார்பந்தய வீரரான மைக்கல் சூமாக்கரின் தலைப்பகுதி பாறையின் மீது மோதியதால் பலத்த காயமேற்பட்டது. இதன் காரணமாக கோமா நிலைக்கு அவர் செல்லும் நிலை ஏற்பட்டது.

இது குறித்து அவரது செய்தி தொடர்பாளரான சபைன் கெம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நீண்ட நாளாக அவர் கோமா நிலை யில் இருந்த நிலையில் தற்போது அவரது உடல்நிலையில் நம்பிக்கை தரும் சிறு முன்னேற்றம் காணப்படுவதாகக் கூறியுள்ளார். எனினும் பொறுமை யாக இருக்க வேண்டிய தருணமிது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சூமாக்கர் கோமாவிலிருந்து மீண்டு கண்டிப்பாக எழுந்து நடப்பார் என்று நம்புவதாகவும், முழுமையாக குணமடைய இன்னும் நீண்ட காலமாகும் எனவும் கெம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



## காலிறுதியில் லிநா

(இந்தியன் வேல்ஸ்)

பரிபாஸ் ஓப்பன் ரென்னிஸ் தொட ரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு காலி றுதிப் போட்டிக்கு சீனாவின் லிநா, போலந்தின் அக்னிஸ்கா ரத்வான்ஸ்கா உள்ளிட்ட முன்னணி வீராங்கனைகள் முன்னேறினர்.

அமெரிக்காவில் உள்ள இந்தியன் வேல்ஸ் நகரில், பரிபாஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வரு கின்றது. பெண்கள் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றில், சீனாவின் லிநா, கனடாவின் அலெக்சாண்டிரா வோஸ் னியாக் மோதினர். அபாரமாக ஆடிய லிநா 6-1, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில், சேர்பியாவின் ஜெலினா ஜோன்கோவிச் 6-3, 6-1 என்ற நேர் செட் கணக்கில், டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கியை வீழ்த்தி, காலிறுதிக்குத் தகுதி பெற்றார்.

மற்ற நான்காவது சுற்றுப் போட்டி களில் வெற்றி பெற்ற இத்தாலியின் பிளவியா பெனிட்டா, அமெரிக்காவின் ஸ்லோன் ஸ்டீபன்ஸ், சுலோவேகியா வின் டொமினிகா சிபுல்கோவா உள்ளிட்டோர் வெற்றி பெற்று, காலி றுதிக்குள் நுழைந்தனர்.



## 2ஆவது ருவென்ரி-20 வென்றது அவுஸ்ரேலியா

(டேர்பன்)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான இரண்டாவது ருவென்ரி-20 போட்டியில் அவுஸ்ரேலிய அணி ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

அவுஸ்ரேலிய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 தொடரின் இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் தென்னா பிரிக்காவின் டேர்பனில் நடைபெற்றது.

கன மழை காரணமாக இப்போட்டி ஏழு ஓவர்கள் கொண்டதாக நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி 7 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டி கொக் 47, டு பிளிசர் 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நில் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு 81 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி 6.4 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் டேவிட் வோர்னர் 40 ஓட்டங்களைப் பெற்றார். இதன் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 தொட ரில் அவுஸ்ரேலிய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. முதல் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 13ஆவது திருத்தத்தையே தீர்வாகப் பார்க்கின்றது ஜெனிவா தீர்மானம்

— பேராசிரியர் எஸ்.ஐ.கீதபொன்கலன் கட்டுரையிலிருந்து.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்கள் இறுதியில் ஒரு சர்வதேச விசாரணை-யையோ அல்லது அறுதியும் இறுதியுமான விளைவு-களையோ ஏற்படுத்தப் போவதில்லை என்று பல தடவைகள் இப்பகுதியில் சுட்டிக்காட்டியுள்ளோம்.

பெரிய மேளதாளத்துடனும் ஆரவாரத்துடனும் ஆரம்பிக்கின்ற ஜெனிவா செயன்முறை கடந்த இரண்டு ஆண்டுகளில் சப்பென்று முடிந்து போனமை யாவரும் அறிந்ததே. இந்த ஆண்டு செயன் முறைக்கும் கடந்த இரு ஆண்டு செயன்முறைக்கும் இடையில் ஒரு வேறுபாடு காணப்படுகின்றது. இதற்கு முன்னர் ஆரவாரத்துடன் ஆரம்பிக்கின்ற "திருவிழா" சப்பென்று முடிவடைந்திருந்தது.

இவ்வாண்டு ஆரம்பமே சற்று சப்பென்று ஆகிவிட்டது போலத் தோன்றுகின்றது. இது இச் செயன்முறையில் தவறான அடிப்படையில் பெரும் நம்பிக்கை கொண்டிருந்த சிறிய ஒரு குழுவினரிடையே பெரிய ஒரு ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளமையை உணரக்கூடியதாகவுள்ளது. சர்வதேச சமூகம் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டது என்ற தொனியில் செய்திகள் ஏற்கனவே வெளிவரத் தொடங்கியுள்ளன.

இப்போது அமெரிக்காவினாலும் அதன் சில கூட்டாளி நாடுகளினாலும் முன்வைக்கப்பட்டிருப்பது அடிப்படை நகல் ஆகும். இனி பேச்சுவார்த்தை அடிப்படையில் மாற்றப்படுகின்ற இறுதி நகலே வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்படும்.

இங்கு கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில், நகலை இன்னும் கடுமையாக்கினால்தான் வாக்களிப்பேன் என்று கூறக்கூடிய நாடுகள் எதுவும் மனித உரிமைக் கவுன்சிலில் இல்லாமையினால், இப்பொழுது வெளிவந்துள்ள



நகல் மேலும் மென்மையடைவதற்கான சாத்தியம் உள்ளதேயன்றி, இலங்கை அரசுக்கு எதிராக கடுமையடைவதற்கான சாத்தியம் மிகமிகக் குறைவானதே.

எவ்வாறாயினும், இப்போது வெளிவந்துள்ள நகல் தீர்மானம், அடிப்படையில் அது இலங்கை அரசாங்கத்துக்கு எதிரானது என்பதனால் அதனை கண்டிக்கின்ற பல விடயங்கள் அதில் கூறப்பட்டுள்ளன. வெலிவேரிய வன்முறைகள், ஆட்கடத்தல், சிறுபான்மை வணக்கத் தலங்கள் மீதான தாக்குதல்கள் போன்ற பல விடயங்கள் அதில் கூறப்பட்டுள்ளன.

இது இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை புதிய பிரச்சினைகள் அல்ல. எனவே, இவை பற்றி அரசாங்கம் பெரிதாக அலட்டிக்கொள்ளப் போவதில்லை தனக்கு எதிரான தீர்மானம் ஒன்று கொண்டுவரப்படுகின்றது என்கின்ற விசனத்துக்கு மத்தியிலும் அரசாங்கம் திருப்தியடையக் கூடிய இரண்டு விடயங்கள் நகலில் காணப்படுகின்றன.

ஒன்று நகலில் கேட்கப்பட்டிருப்பது உள்ளூர் விசாரணையே அன்றி சர்வதேச விசாரணை அல்ல.

இரண்டாவது விடயம் அரசாங்கம் முன்னெடுத்த பல்வேறு நடவடிக்கைகள் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளதுடன், பாராட்டப்பட்டுள்ளமை ஆகும். நல்லிணக்க ஆணைக்குழு, அதன் பரிந்துரைகள், லலித் வீரதுங்கவின் தேசிய செயற்றிட்டம் ஆகியவை வரவேற்கப்பட்டன.

அதேசமயம் நகல் 13ஆவது திருத்தம் தொடர்பில் கூறியுள்ள விடயம் ஜெனிவா செயன்முறை விமோசனம் தந்துவிடும் என்று நம்பியவர்களுக்கு ஒரு பின்னடைவே.

13ஆவது திருத்தத்தில் கூறப்பட்டிருப்பதன் அடிப்படையில் வடமாகாணத்திற்கு வளங்களும் அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும் எனப்படுகின்றது. இதன் கருத்து என்னவெனில் ஜெனிவா 13ஆவது திருத்தத்தையே அதிகாரப் பரவலாக்க செயன்முறைக்கான தீர்வாகப் பார்க்கின்றது என்பது ஆகும். சமஷ்டி, சுயநிர்ணயம் என்பவை கவனத்தில் எடுக்கப்படப் போவதில்லை என்பதையே தற்போதைய நகல் உணர்த்தி நிற்கின்றது.

இது ஜெனிவா தனி நாடு தந்துவிடும் என்ற கோணத்தில் கூத்தாட்டம் போட்டவர்களுக்கு ஒரு பின்னடைவே ஆகும். அத்துடன் ஜெனிவா இலங்கை அரசாங்கத்தை மட்டுமல்ல, இரு தரப்பின் மனித உரிமை மீறல்களையும் விசாரிக்க வேண்டும் என்றே கோரும் என்பதை ஏற்கனவே சுட்டிக்காட்டி இருந்தோம்.

எனவே, இன்றைய நிலையில் பலவீனமான நகல் ஒன்றே முன்வைக்கப்பட்டுள்ளது. அது மேலும், மென்மைப்படுத்தப்படலாம் என்பது தெளிவானது.

கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில், ஜெனிவா செயன்முறை தமிழ் மக்கள் மேலுள்ள அன்பு, பாசம் என்பனவற்றினால் முன்னெடுக்கப்படவில்லை. அது வல்லரசுகளின் தேவைக்காக முன்னெடுக்கப்படுகின்ற ஒரு செயன்முறை. அதில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய இயலுமை தமிழ்க் குழுக்களைப் பொறுத்தவரை குறைவானதே.

எனவே, அதில் மட்டற்ற நம்பிக்கை வைக்கின்றபோது ஏமாற்றங்கள் ஏற்படுகின்ற சாத்தியம் அதிகமாகவே இருக்கும். எமது தேவை என்னவெனில், உடனடியானதும், உள்ளூர்ப் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதாகும். நொந்து போனவன் எழுந்து முதலில் நிற்பது அவசியம்.



# வள்ளியை முருகன் சந்தித்த இடம்!

முருகக்கடவுள் மிகவும் தொன்மையானவர். அவர் வயதை எவராலும் கணக்கிட முடியாது. அது பற்றி எந்த நூலிலும் சொல்லப்படவில்லை என்கிறார் போகர். மூத்த சித்தர்களின் நூல்களில் "சுப்ரமணியக் காப்பு" இடம் பெற்றுள்ளது என்கிறார். ஆறுமுக சொருபமாக எழில்மிகு சித்தாக வெகுகாலமாய் உள்ளார் என்கிறார் போகர்.

"முத்தான வடிவேலர் முருகரப்பா
மயற்சியுடன் வயததுவும் ஏதென்றாக்கால்
சத்தியமாய் வயததுவுங் கணக்கோயில்லை
சார்பான நூல்தனிலுஞ் சொல்லவில்லை"


(போகர் 7000)

இதைத்தான் கந்தர் அநுபூதியில் "பெம்மான் முருகன் பிறவான், இறவான்" என்று அருணகிரிநாதர் சொல்லியுள்ளார்.

இலங்கையின் கதிர்காமம் முருகனின் ஏழாம் படை வீடு கொண்ட தலம் என்று கூறலாம். கதிர்காம மகா தேவாலயத்தை சித்தர் போகநாதர் வடிவமைத்து நிறுவியுள்ளார். சுமார் கி.பி. 214ஆம் ஆண்டில் கிரியா பாபாஜி தன் முதல் குருவான போகரை இங்குதான் தரிசித்ததாக வரலாறு செப்புகிறது. போகர் அருளிய யந்திரம்தான் இன்று அங்கு திரைக்குப் பின்னே பாதுகாப்பாக வைக்கப்பட்டு பூஜிக்கப்படுகிறது. இலங்கை முருகனின் தலம். கி.பி. 5ஆம் நூற்றாண்டுவரை கார்த்திகேய கிராமம் என்று அழைக்கப்பட்ட ஊர்தான் இன்று கதிர்காமம் என்று பெயர் பெற்றுள்ளது. அங்கு போகர் அருளிய சக்தி வாய்ந்த யந்திரம்தான் அப்பகுதியை சுபீட்சமாக இன்றும் காத்து வருவதாக ஐதீகம். அந்தக் கோயிலின் மரத்தடியில்தான் பாபாஜி (என்ற) நாகராஜுக்கு சித்தர் போகர் தீவிர தியான கிரியா பயிற்சிகளை இடைவிடாது பல நாட்களுக்குச் சொல்லிக் கொடுத்ததாக தல புராணம் கூறுகிறது.

கதிர்காம ஸ்கந்த முருகனைப் பற்றி 15ஆம் நூற்றாண்டு அருணகிரிநாதரே பாடியுள்ளார். வள்ளியை முருகன் சந்தித்த இடம் இதுவே என்று நம்பப்படுகிறது.

('அதிசய சித்தர் போகர்' நூலில் எஸ். சந்திரசேகர்)



# பாரதிராஜாவின் இனவாதத்திற்கு கேரள அரசின் பரிசு

— வே.மதிமாறன்

"தமிழ் சினிமாவில், கன்னடர்கள், மலையாளிகள் ஆதிக்கம்... தமிழகத்தில் திருமலை நாயக்கர் வழிவந்த தெலுங்கர்களின் ஆதிக்கம்... ஏன் தமிழனுக்குத் தலைமை தாங்க தமிழனே கிடைக்கலையா.. தமிழனுக்கு அந்தத் தகுதியில்லையா?"

என்று தீவிர இனவாதம் பேசிய இயக்குநர் பாரதிராஜா வெட்கப்படும்படியாக அவரை,

கேரள "காங்கிரஸ்" அரசு, திரைப்பட விருது கமிட்டி தலைவராக நியமித்துள்ளது.

2013ஆம் ஆண்டுக்கான சிறந்த மலையாளப் படம், கலைஞர்களைத் தேர்ந்தெடுக்க 7 பேர் அடங்கிய விருது கமிட்டிக்கு தலைவராக பாரதிராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதை தமிழனுக்குக் கிடைத்த பெருமை என்ற பாணியில், பாரதிராஜாவும் "பெருந்தன்மை"யோடு ஏற்றுக் கொண்டுள்ளார்.

"சிறந்த மலையாளப் படங்களைத் தேர்ந்தேடுக்கும் கமிட்டிக்குத் தலைவராக உங்களுக்கு ஒரு மலையாளிகூட கிடைக்கலையா? ஒரு மலையாளப் படத்தைக் கூட இயக்காத தமிழன் பாரதிராஜாதான் மலையாளப் படங்களை தேர்ந்தெடுக்கும் குழுவுக்குத் தலைவரா? இது என்ன கேரளாவா? தமிழ்நாடா?"

என்று மலையாள இனவாதிகள் யாராவது பேசியிருப்பார்களா? அப்படி பேசினால் அது சரியா? தப்பா?


# தெகிடி

- யுவகிருஷ்ணா -

ஷெர்லக் ஹோம்ஸ், ஜேம்ஸ்பாண்ட், சங்கர்லால், கணேஷ்-வசந்த், விவேக்-ரூபலா, நரேன்-வைஜயந்தி, பரத்-சுசிலா... இவர்கள் எல்லாம் யாரென்று உங்களுக்கு தெரிந்திருந்தால், "தெகிடி" உங்களுக்கான படம்.

எண்பதுகளின் மத்தியில் வெளிவந்த "க்ரைம் நாவல்" தமிழ் சமூகத்தில் குறிப்பிடத்தக்க சலனத்தை ஏற்படுத்திய சஞ்சிகை. கிட்டத்தட்ட இதே காலகட்டத்தில்தான் சிறுசுகளிடையே சக்கைப்போடு போட்ட ராணிகாமிக்ஸில் ஜேம்ஸ்பாண்ட் இடைவிடாமல் (அரைகுறை ஆடை அழகிகளின் துணையோடு) துப்பறிந்து கொண்டிருந்தார். அதற்கு முன்னாலும், பின்னாலும் துப்பறியும் க்ரைம் கதைகளுக்கு தமிழில் குறைச்சல் இல்லையென்றாலும் இந்த காலகட்டத்தை "கோல்டன் பீரியட்" எனலாம். "டிடெக்டிவ்" என்கிற ஆங்கிலச் சொல் தமிழர்களின் காதலுக்குள்ளானது. சென்னையில் திடீரென ஆங்காங்கே "டிடெக்டிவ் ஏஜென்ஸிகள்" முளைத்தன. வளர்ந்து பெரியவன் ஆனால் "டிடெக்டிவ் ஏஜெண்ட்" ஆவேன் என்று அந்தகால சிறுவர்கள் (நானும்தான்) இலட்சியம் கொண்டார்கள். உண்மையில் நம்மூர் டிடெக்டிவ் ஏஜென்ஸிகள் பெரும்பாலும் தரகர் வேலைதான் பார்த்தன என்பதெல்லாம் வேறு கதை.

தெகிடியின் ஹீரோ ஒரு டிடெக்டிவ். எம்.ஏ. கிரிமினாலஜி படித்தவனுக்கு ஒரு டிடெக்டிவ் ஏஜென்ஸியில் வேலை கிடைக்கிறது. சில தனி மனிதர்களின் பிரத்தியேக விபரங்களை அக்குவேறு ஆணிவேறாக அலசி உருவாக்கித் தருவதுதான் அவனுக்கு தரப்படும் பணி. இவன் துப்பறிந்த ஆட்கள் ஒவ்வொருவராக மண்டையை போடுகிறார்கள். இது யதேச்சையான ஒற்றுமையல்ல என்று உணருகிறான். பிரச்சினை என்னவென்றால் அவன் பார்த்த கடைசி துப்பறிதல் அவனுடைய காதலியுடையது. அவளும் இறந்துவிடுவாளோ என்கிற அச்சத்தில் ஒட்டுமொத்த கேஸையும் தனிப்பட்ட முறையில் விசாரிக்க ஆரம்பிக்கிறான். கொலையாளிகள் யாரென்பது "திடுக்" க்ளைமாக்ஸ்.



ஆமாம். அப்படியே ராஜேஷ்குமார் டெம்ப்ளேட் கதைதான். நீங்கள் நூற்றுக்கும் மேற்பட்ட க்ரைம் நாவல்களை வாசித்திருக்கும் பட்சத்தில் திரைக்கதையின் முடிச்சுகளை படம் பார்க்கும்போதே ஒவ்வொன்றாக நீங்களே அவிழ்த்து விளையாடலாம். உங்களுக்குள் ஒரு புத்திசாலித்தனமான டிடெக்டிவ் இருக்கும் பட்சத்தில் க்ளைமாக்ஸ் வில்லன் யாரென்று இடைவேளையின் போதே கூட யூகித்துவிடலாம்.

தமிழுக்கு புதுசு என்றெல்லாம் சொல்ல முடியாது. ஜெய்சங்கரில் தொடங்கி எவ்வளவோ சி.ஐ.டி.கள் ஏகப்பட்ட கேஸ்களை நம்முடைய வெள்ளித்திரையில் துப்பறிந்து வெற்றிக்கொடி நாட்டியிருக்கிறார்கள். க்ளைமாக்ஸில் க்ளப் டான்ஸ், காதில் பூச்சுற்றும் ஆக்ஷன் காட்சிகள் என்றே நம்மூர் துப்பறியும் படங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. "தெகிடி" இதிலிருந்து மாறுபடுவது, அதன் நம்பகத்தன்மை கொண்ட காட்சிகளால். மொக்கைபீஸான நாமே டிடெக்டிவ்வாக இருக்கும்பட்சத்தில் அதிகபட்சமாக நம்மால் எதை செய்யமுடியுமோ அதைத்தான் ஹீரோ செய்கிறார். படத்தில் வரும் ஒரே ஒரு சண்டைக் காட்சிகூட, பறந்து பறந்து தூள்பறத்தும் வகையில் அமையாத யதார்த்தமான சண்டைக்காட்சிதான்.

க்ரைம் தொடர்கதைகளுக்கு வரையப்படும் ஓவியங்கள் பாணியில் டைட்டில். தேவையான இடங்களில் மட்டும் பாடல்கள். விறுவிறுப்பான பின்னணி இசை. அலட்டலில்லாத இயக்கம் என்று வணிக சமரசங்கள் இல்லாமல் கச்சிதமான படத்தை எடுத்திருக்கிறார் இயக்குனர் ரமேஷ். "நல்ல படமே தமிழில் வருவதில்லை" என்று அலுத்துக்கொள்பவர்கள், திரையரங்கம் சென்று பார்த்து ஆதரிக்க வேண்டிய திரைப்படம்.

# இன்றைய ஊடகங்கள் பேசவேண்டிய கதை, மோதலோ எதிர்ப்புகளைப் பற்றியதோ அல்ல

- டிபிஎஸ்.ஜெயராஜ் -



சமீப காலங்களில் இலங்கையில் நடைபெறும் அரசியல் நடவடிக்கைகள் மற்றும் அரசியல்வாதிகளின் நடத்தையையும் கண்டு நான் அருவருப்பு அடைந்துள்ளேன். இந்த பயணத்துக்குப் பிறகு அது இன்னும் விரிவடைந்துள்ளது. மக்களின் தேவைகளும் அரசியல் வர்க்கத்தினரது தேவைகளும் வித்தியாசமானவை, மற்றும் அவை இரண்டும் தொடர்பற்றவைகள்.

என்னை அதிர வைத்தது, ஒரு கசப்பான மோதலினூடே வாழ்ந்து இப்போது உயர்ச்சியடைய முயற்சி செய்யும் எமது மக்களின், எதிர்த்தெறிப்பு மற்றும் விடா முயற்சி என்பன. என்னை வேதனையடைய வைத்தது அவர்கள் மீது ஏற்றப்பட்டுள்ள சுமைகள், குறிப்பாக வாழ்க்கை செலவு. என்னைப்போல தங்கள் தாய்நாட்டை கை விட்டு விடாமல் பொறுமை மற்றும் விடா முயற்சி என்பனவற்றை கடைப்பிடிக்கும் இந்த மக்களின் முன்னால் நான் சிறுமைப்பட்டு நிற்கிறேன்.

ஆகக்குறைந்தது என்னால் செய்யக்கூடியது, அளவுக்கு மிறீ பெருகிவரும் துயரங் களுக்கு மத்தியிலும் தங்கள் வாழ்க்கைய உயர்த்த பாடு படும் இந்த மக்களின் அவல நிலை மற்றும் அவர்களின் போராட்டம் என்பனவற்றின்மீது மேலும் கவனம் செலுத்த வேண்டும் இன்றைய ஊடகங்கள் பேசவேண்டிய கதை, மோதலோ அல்லது எதிர்ப்புகளைப் பற்றியதோ அல்ல ஆனால் போருக்குப் பிந்தைய மறுமலர்ச்சி, மக்களுக்கு இடையேயான நல்லிணக்கம், மற்றும் இன ஒற்றுமை என்பனவாக இருக்க வேண்டும். என்னுடைய சொந்த தனி வழியில் இந்த மாற்றத்தை பிரதிபலித்து பதிவு செய்ய விரும்புகிறேன். அதே நேரம் இந்த முழுக்கதையையும் பாரம்பரிய ஊடகவியல் மூலமாக மட்டும் சொல்ல முடியாது என்பதையும் நான் உணருகிறேன்...

சில நச்சுத்தன்மையான சிறுபான்மையினர் பெரிதாக கூக்குரலிட்டாலும்கூட, அது ஒட்டு மொத்த புலம் பெயர்ந்தவர்களின் கருத்தாகிவிடாது. தங்கள் சொந்த உறவினர்களுக்கு உதவுவதற்கு அப்பால் மனிதாபிமான விடயங்களுக்கு நல்ல மனதோடு உதவி புரியும் புலம் பெயர்ந்த உறுப்பினர்கள் பலரை எனக்குத் தெரியும். அந்த வகையானவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம். வெளிநாட்டில் வாழும் உண்மையான அக்கறையுள்ள மனிதர்களால் இன்னும் அதிகமான உதவிகளைச் செய்ய முடியும்.

புலம் பெயர்ந்தவர்களுக்கான எனது ஒரே அறிவுரை அவர்கள் இலங்கைக்கு வருகை தந்து தற்போது நிலவும் சூழ்நிலையை தாங்களே அறிய வேண்டும். அவசர தேவைக்கான பெறுமதியான காரணம் ஒன்றை அவர்கள் அறிய நேர்ந்தால் (அவர்கள் நிச்சயம் காண்பார்கள் என்பது எனக்கு உறுதியாகத் தெரியும்) அவர்கள் தனிப்பட்ட முறையிலோ அல்லது கூட்டாகவோ அதற்கு ஆதரவளித்து அதை திருத்தியமைக்க ஏதாவது உதவிகளைச் செய்ய முன்வர வேண்டும்.

இருளை நிந்திப்பதைக் காட்டிலும் அதைப் போக்க சிறியதொரு மெழுகு வர்த்தியை ஏற்றி வைப்பது சிறந்தது.


# இயற்கையின் ஆதார உயிர் யானை!

- யானைகள் ஆராய்ச்சியாளர் அஜய் தேசாய் -

"காடுகளைக் காப்பாற்ற வேண்டுமெனில் முதலில் யானைகளைக் காப்பாற்ற வேண்டும்".

யானைகளுக்கும், மனிதர்களுக்குமிடையேயான தொடர்பு சுமார் 5,000 ஆண்டுகளுக்கும் மேலானது. யானைகளுக்கும், மனிதர்களுக்குமிடையேயான மோதல்கள் அப்போதே இருந்தது. அதேசமயம் பல நூறு ஆண்டுகளாக ஒரு பிணைப்பும் உள்ளது.

ஆசிய யானைகளைப் பொறுத்தமட்டில் கடந்த 100 ஆண்டுகளில் அவற்றின் எண்ணிக்கை குறைந்துள்ளது. அதற்கு பல காரணங்கள் உள்ளன. அக்கால அரசர்களின் ப்டையில் மட்டும் ஆயிரக்கணக்கில் யானைகள் இருந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. இவையெல்லாம் காடுகளிலிருந்து பிடிக்கப்பட்ட யானைகள்தான். இவ்வாறு பல்வேறு காரணங்களுக்காக யானைகள் பிடிக்கப்பட்டும், இடம் பெயர்க்கப் பட்டும், கொல்லப் பட்டும் வந்ததால் அவற்றின் எண்ணிக்கையும் கணிசமாகக் குணறந்து வருகிறது. அதனைத் தடுக்கவே, கடந்த 1800ஆம் ஆண்டில் யானைகளைப் பாதுகாக்க பிரிட்டிஷ் அரசாங்கத்தால் சிறப்புச் சட்டமே உருவாக்கப்பட்டது.



அன்றாடம் நாம் பயன்படுத்தும் பற்பசை முதல் அனைத்து பொருட்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே வெளி உலகிற்கு வருகின்றன. ஆனால், இயற்கைக்கும், சூழலுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த யானைகளைக் குறித்த ஆராய்ச்சிகள் அதிக அளவில் இல்லை என்பது வருந்தத்தக்கது.

யானைகள் எத்தகைய சூழலிலும் வாழக் கூடியவை. ஆபிரிக்காவில் நமீம் பாலை வனம் முதல் கடும் குளிர் நிலவும் பகுதிகள் வரை இவை வசிக்கின்றன.

பாலைவனத்தில்கூட தங்களுக்குத் தேவையான தண்ணீர் மற்றும் உணவு எங்கு கிடைக்கும் என்பதையும் இவை அறிந்து வைத்திருக்கின்றன. அதேபோன்று, ஒரே இடத்தில் வாழும் யானைகளின் உணவுப்பழக்கம் கூட வெவ்வேறு மாதிரியாக இருக்கும்.

சுமார் 60 ஆண்டுகள் வரை வாழும் யானைகள், குட்டி மற்றும் தாய் என ஒரு பிரிவாகவும், உறவுகளின் அடிப்படையில் ஒரு கூட்டமாகவும், தாயிடமிருந்து பிரிந்து வந்தவை என்ற வக்கயில் பெருங்கூட்டமாகவும் வாழ்பவையாகும். இவையே கிளான் என அழைக்கப்படுகின்றன.

கூட்டத்தையே வழி நடத்திச் செல்லும் திறன் படைத்தது தாய் யானைதான். இணை சேர்வதற்காக ஆண் யானைகள் எப்பகுதிக்கு வேண்டுமானாலும் இடம் பெயரக்கூடியவை. இவ்வாறு இவை இடம் பெயரும் போது தான் மோதல்களும் உருவாகின்றன. மதம் என்பது ஆண் யானை இணை சேர்வதற்கு தயாராகவுள்ள காலம்.


யானைகள்தான் இயற்கையின் ஆதார உயிரினம் (கீ ஸ்டோன்). ஆதார உயிரினம் இருந்தால்தான் மற்ற உயிரினங்கள் வாழ்வதற்கான சூழல் அப்பகுதியில் உருவாகும்.

விதை பரவல், காடுகள் மேலாண்மை, இயற்கை பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்திற்குமே யானைகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பெரிதும் துணையாக உள்ளதால் யானைகள் குறித்த ஆராய்ச்சிகளை அதிகரித்து யானைகளைப் பாதுகாக்க வேண்டுமென்பது அவசியம்.

# மாதகலின் மண்வாசனை




மாதகல், யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமப் பிரிவில், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஒரு ஊராகும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடக்குக் கரையோரமாக அமைந்துள்ள இவ்வூரின் வடக்கு எல்லையில் கடலும், கிழக்கு எல்லையில் மாரீசன்கூடல், பெரியவிளான் ஆகிய ஊர்களும், தெற்கில் பண்டத்தரிப்பும், மேற்கில் சில்லாலையும் உள்ளன. இவ்வூர் மாதகல் கிழக்கு, மாதகல் தெற்கு, மாதகல் மேற்கு என மூன்று கிராம அலுவலர் பிரிவு களுக்குள் அடங்குகிறது




## கிராம அமைவிடம்

இலங்கையின் வடபாகத்தில் உள்ள யாழ்ப்பாண நகரத்தில் இருந்து 16 கிலோமீற்றர் தூரத்தில் மாதகல் கிராமம் அமைந்துள்ளது. மாதகல் கிராமத்திற்கு அருகாமையில் பண்டத்தரிப்பு, சில்லாலை, சேந்தான்குளம் ஆகிய கிராமங்கள் உள்ளன. இயற்கை அன்னையின் ஆசீர்வாதம் பெற்ற ஊராக மாதகல் விளங்குவதோடு கல்வித்துறையிலும் சிறந்து விளங்குகிறது. இந்த ஊரை தாய் நிலமாகக் கொண்ட பலர் மருத்துவம், தகவல் தொழில்நுட்பம், பொறியியல், சட்டம் மற்றும் கணக்கியல்களில் இலங்கையில் மாத்திரமன்றி வெளிநாடுகளிலும் சிறந்து விளங்குகிறார்கள்.

பசுமையான நெல் வயல்கள், தலையாட்டும் பனந்தோப்பு, அழகிய தென்னை மரங்கள் என பசுமைத் தாயின் அரவணைப்பு மாத்திரம் அன்றி கடல் அன்னையின் அரவணைப்பும் இந்தக் கிராமத்திற்கு உண்டு. இந்தக் கிராமத்து மக்கள் இந்து மற்றும் கத்தோலிக்க மதங்களை பின்பற்றுபவர்களாக உள்ளதோடு விவசாயம் மற்றும் கடற்றொழில் என்பன அவர்களுடைய பிரதான தொழில்களாக விளங்குகின்றன

## மாதகல் நுணசை முருகன் ஆலயம்


(Mathagal Nunasai Murugan Kovil)



ஈழத்தில் உள்ள தொன்மை வாய்ந்த முருகன் ஆலயங்களில் இதுவும் ஒன்று. ஈழத்திலேயே கடம் மரத்துடன் கூடிய கந்தன் ஆலயம் இதுதான் எனச் சொல்கிறார்கள். இக் கடம்பமரம் மிகவும் தொன்மை வாய்ந்தது. திருமுருககிருபானந்த வாரியார் அவர்கள் ஈழத்திற்கு வரும் போதெல்லாம் இந்த ஆலயத்திற்கு வந்து இவ் ஆலயத்தைத் தரிசிக்காமல் செல்லமாட்டாராம்.




ஈழத்தில் உள்ள முருகன் ஆலயங்களில் எழுந்தருளியிருக்கும் முருகனை ஒவ்வொரு பெயரால் அழைப்பார்கள். நல்லூர் முருகனை அலங்காரக் கந்தன் என்பர். செல்வச் சந்நிதியில் எழுந்தருளியிருக்கும் முருகனை அன்னதானக் கந்தன் என்பார்கள். இவ் ஊரில எழுந்தருளியிருக்கும் முருகனை காவடிக் கந்தன் என்பார்கள். திருவிழாக் காலங்களில் தமது நேர்த்திக் கடனை காவடிகள் எடுத்துச் செலுத்துவார்கள். ஈழத்தில் உள்ள ஆலயங்களில் அதிகளவு காவடி இக் கோவிலில் தான் எடுக்கப்படும். அதனால் காவடிக் கந்தன் என்றழைப்பர்.



மாதகல் - சம்பில்துறை ஐயனார் ஆலயம்

வடமாகாணத்தின் மிக உயரமான 25 அடி கொண்ட சிவபெருமான் சிலை யாழ்ப்பாணத்தில் உள்ள மாதகல் - சம்பில்துறை ஐயனார் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ளது.இத்திருவுருவ சிலை தமிழர் முறைப்படி ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு, அபிஷேகங்கள் மேற்கொள்ளப்பட்டன.யோகர் சுவாமிகளின் சிவ தொண்டர் அமைப்பைச் சேர்ந்தவர்கள் இவற்றை முன்னின்று மேற்கொண்டுள்ளார்கள்.சம்புநாதர் ஆலயத்தை சுற்றி உள்ள ஆலயங்களில் இருந்து சிவனடியார்களால் ஓம் நம சிவாய என்கிற மந்திர பாராயணத்துடன், பூரண கும்பங்கள் கொண்டுவரப்பட்டு, சம்புநாதர் ஈஸ்வரருக்கு அபிஷேகம் செய்யப்பட்டது.இலங்கையிலேயே முதன்முதலாக தமிழ் முறைப்படி திருக்குடமுழுக்கு இடம்பெற்று உள்ள கோவில் இதுவே ஆகும்.




## மாதகல் மயில்வாகனப் புலவர்

மயில்வாகனப் புலவர் பற்றிய இந்தக் குறிப்பு யாழ்ப்பாண வைபவமாலையை பதிப்பித்தவர்களில் ஒருவராகிய குல. சபாநாதன் அவர்களால் யாழப்பாண வைபவமாலை பதிப்பில் எழுதப்பட்டதாகும்.

மயில்வாகனப் புலவர், யாழ்ப்பாணம் பண்டத்தரிப்புக் கோயிற்பற்றைச் சேர்ந்த மாதகற்கிராமத்திற் பிறந்தவர். இவருடைய தந்தையார் பெயர் சுப்பிரமணியம் எனவும், தாயார் பெயர் சிதம்பரம் எனவும் கூறுவர். கணடியரசன் மீது கிள்ளைவிடு தூது பாடிய மாதகல் சிற்றம்பலப்புலவரின், சகோதரியார் புதல்வரே மயில்வாகனப் புலவர். இவர் இளமையிலே தம் மாமனாரிடம் கல்விகற்று சிறந்த பாண்டித்தியமடையலானார். இவர் வையா எனும் புலவர் மரபிலே உதித்தவர். அது

**நெய்யார்ந்த வாட்கைப் பரராச சேகரன் பேர்நிறுவி**<br>
**மெய்யாக நல்ல கலைத்தமிழ் நூல்கள் விரித்துரைத்த**<br>
**வையாவின் கோத்திரத் தான்மயில் வாகனன் மாதவங்கள்**<br>
**பொய்யாத வாய்மைப் புலியூரந்தாதி புகன்றனனே**

என்னும் புலியூரந்தாதிச் சிறப்புப்பாயிரச் செய்யுளா




லறியப்படுகின்றது. இச்செய்யுள் வரதபண்டிதர் பாடியதெனப்பொதுவாக நம்பப்படுகின்றது, வையா எனும் புலவர், சயவீரசிங்கையாரியன் எனப்படும் ஐந்தாம் செகராசசேகரன் காலத்தில் (கி.பி 1380-1414) சமஸ்தானப் புலவராய் கீர்த்தியுடன் விளங்கினார். இவர் வையாபாடல், பரராசசேகன் உலா, பரராசசேகரன் இராச முறை என்னும் நூல்களின் ஆசிரியர். மயில்வாகனப் புலவருடைய வரலாறு அ.சதாசிவப் பிள்ளையவர்கள் எழுதிய 'பாவலர் சரித்திர தீபகம்' எனும் நூலிலும், அ. குமாரசாமிப்புலவர் அவர்கள் எழுதிய 'தமிழ்ப் புலவர் சரித்திரம்' எனும் நூலிலும், வயாவிளான் க. வேலுப்பிள்ளையவர்கள் வெளியிட்ட 'யாழ்ப்பாண வைபவ கௌமுதியிலும், வித்துவான் பிரம்ம ஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் எழுதிய 'ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம் எனும் நூலிலும் சுருக்கமாக கூறப்பட்டுள்ளது,



மாதகல் சென்ஜோசப் மகாவித்தியாலய நிகழ்வு



மாதகல் சென்ஜோசப் மகாவித்தியாலய பான்ட் அணியினர்



மாதகலில் உள்ள ஆலயமொன்றில் வசித்து அபூர்வமான முறையில் குறிசொல்லிவரும் இந்தியசாமியார்

இலங்கையில் பௌத்த மதத்தைப் பரப்பும் நோக்குடன் இந்தியாவில் இருந்து முதன் முதலாக வெள்ளரசு மரக்கிளையுடன் சங்கமித்தை வந்து இறங்கிய பெருமை மாதகலிற்குரியது.



மாதகல் சென். அன்ரனீஸ் தேவாலயம்

# பாலைதீவு அந்தோனியார் திருவிழாவுக்கு ஒத்துழைக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்தல்


## கிளி. அரச அதிபர்

பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதாகவும் அதற்குரிய ஏற்பாடுகள் தகுந்த முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பக்தர்களின் நன்மை கருதி பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளையொன்று பாலைதீவில் திறக்கப்பட உள்ளது. கடற்போக்குவரத்திற்குரிய பாதுகாப்பு நடைமுறைகளை மக்கள் பின்பற்ற வேண்டும். அத்துடன் தங்களுக்குரிய போதுமான குடிநீரையும் மக்கள் கொண்டுவர வேண்டும். என தெரிவித்த அவா பெறுமதி வாய்ந்த ஆபரணங்களை கொண்டு வருவதனை மக்கள் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும் எனவும் கேட்டுக் கொணடுள்ளார்.

உற்சவ காலத்தில் அமைக்கப்படும் வணிக நிலையங்கள் யாவும் பூநகரி பிரதேச சபையின் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியதுடன். பக்தர்கள் வணிகர்கள், பொதுச்சுகாதாரப்பரிசோதகர்களினால் அறிவுறுத்தப்படும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியதும் அவசியமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பேணும் வகையில் பக்தர்களின் நடவடிக்கைகள் அமைய வேண்டும்.இந்த நடைமுறைகளை சரிவர பின்பற்றி பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் திருவிழா சிறப்பாக நடைபெற உதவுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (90)



நயினாதீவு செம்மனத்தம்புலம் அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் புதிதாக நுழைவாயில் வளைவுக் கோபுரம் துரித கதியில் அமைக்கப்பட்டு வருவதைக் காணலாம். (21)

# சமுர்த்தி போசாக்கு முத்திரைகள் நெடுங்கேணி மக்களுக்கு கிடைப்பதில்லை

வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலகத் திற்குட்பட்ட பொது மக்களுக்கு சமுர்த்திபோசாக்கு முத்திரை கிடைப்பதில்லை என பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இவ் விடயம் தொடர்பாக அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

சமுர்த்தி அதிகார சபையால் கர்ப்பிணிகள் மற்றும் குழந்தை கிடைத்தவர்களுக்காக வழங்கப்படும் போசாக்கு முத்திரை இது வரையும் தேவையானவர்களுக்கு வழங்கப்படவில்லை.

இம் முத்திரைகள் குறிப்பிட்ட காலப்பகுதியிலேயே பயனாளிகளுக்கு வழங்க முடியுமாக இருந்தபோதிலும் குறித்த காலத்தில் அவற்றை வழங்காமையால் பலரும் குறித்த திட்டத்தில் பயனை அடைய தவறிவருகின்றனர்.

இதேவேளை நெடுங்கேணி பிரதேசத்தில் சமுர்த்தி திட்டத்திற்கான விபரங்களை சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சரியான முறையில் மக்களிடமிருந்து திரட்டாத காரணத்தால் சமுர்த்தித் திட்டங்கள் மக்களைச் சென்றடையாத நிலை காணப்படுகின்றது.

மீள்குடியேறிய மக்களுக்கு பல திட்டங்களை சமுர்த்தி திட்டத்தினூடாக அறிமுகம் செய்துள்ள போதிலும் அதிகாரிகள் அதனை மக்களுக்கு கிடைக்காமல் செய்கின்ற செயற்பாடுகள் வேதனைகுரியது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (70)




# தமிழ் மறுமலர்ச்சிக் காலம்

இறை அன்பர்களாக விளங்கிய தேவார மூவர் இறைவனை நெருக்கமான உறவினராகக் கருதினர். 'அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ என்றும் அமமையே ஒப்பிலாமணியே' என்றும் நினைத்தனர். இறைவனுக்கும் நாவுக்கரசுக்கும் உள்ள உறவை ஆண்டான் –அடிமை நெறி [தாசமார்க்கம் என்றும் இறைவனுக்கும் சம்பந்தருக்கும் உள்ள உறவை தந்தை மகன் நெறி [சத்புத்ர மார்க்கம்] என்றும் இறைவனுக்கும் சுந்தரருக்கும் உள்ள உறவை தோழமை நெறி [சகமார்க்கம்]என்றும் கூறுவர். இன்னும் நெருக்கமான நிலையில். இறைவனின் நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் [மதுர மார்க்கம்]நினைத்தனர் .சங்கத் தமிழரின் மானுடக் காதல் மரபு, பக்தி இயக்கக் காலத்தில் தெயவீகக் காதலாக மலர்ந்தது காதல் நெறியால் இலக்கியம் வளம் பெற்றது

நாவுக்கரசின் 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டேன்' என்ற அகப்பாடலும் 'சிறையாரும் மடக் கிளியே இங்கேவா' என்று காதல் கொண்ட தலைவி கிளியிடம் கூறுவதாக சம்பந்தரும் உறவு முறைகளின் வழி பாடல்கள் புனையப் பெற்றதால் மக்களுக்குச் சிவபெருமான் எட்டாக்கனியாக இல்லாமல் கனிச்சான்றாக காட்டப் பெற்றான் மக்கள இறைவனோடும் ஒன்றுவதற்கு வாய்ப்பு ஏற்படுவதாக அமைந்தது

சமணர்களும் பௌத்தர்களும் இந்நாட்டிற்குரிய தமிழ் மொழியைப் புறக்கணித்தனர். சமஸ்கிருதம், பாலி, பிராகிருதம் ஆகியவை அரசரின் செல்வாக்கைப் பெற்றன மகேந்திரவர்மன சமஸ்கிருத மொழியில் மத்த விலாசனப் பிரகரணம் என்னும் நாடக நூலை எழுதும் அளவிற்குப் புலமை பெற்றிருந்தான். பௌத்த மதம் பாலி மொழியைப் போற்றியது. அரச ஆணைகளும் சாதனங்களும் பிராகிருதம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டன தமிழ்நாட்டு மக்களும் மொழி உணர்வு இன்றி இருந்தனர்.

இந்நிலையில் தேவார முதலிகள் தங்கள் பாடலகளை இனிய தமிழில் பாடினர். தாய் மொழியில் தான் இறையுணர்வைப் பெற முடியும் என நிலை நாட்டினார். சம்பந்தர் தமிழ் மொழிப்பரம் பலுக்குப் பெருந்தொண்டு ஆற்றினார். அவர் தம்மைத் தமிழ் ஞானசம்பந்தன் என்றே பல பதிகங்களில் பாடினார். திரு நெறிய தமிழ் ஞானம் மிகு பந்தன் குன்றத் தமிழ், ஞானமிக்க தன் தமிழால் ஞான சம்பந்தன் சொன்ன கோலமிக்க மாலை பேரியல் இன் தமிழால் ஞானசம்பந்தன் சொன்ன பண்ணார் பாடல் நற்றமிழ்க்கின்துணை ஞான சம்பந்தன் சம்பந்தன் பேசும் தமிழ், ஞானம் மலரும் தமிழ், முத்தமிழ் நான்மறை ஞானசம் பந்தனஒனதமிழ் மாலை என்று திருஞானசம்பந்தருடைய தமிழ் உணர்வு கூறப்படுகிறது பக்தி இயக்ககாலம் தமிழ் மறுமலர்ச்சிக் காலமாகவும் திகழ்ந்தது கண்டு மகிழ்வோம்

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

கதை என்பது சொற்களின், சொற்றொடர்களின் தொகுப்பு மட்டுமல்ல. அவை மனித சமூகத்தின் தொல் நினைவுகளின் தொகுப்பும் தொடர்ச்சியுமே ஆகும். எனவே கதை, ஒன்றரை இலட்சம் ஆண்டுகால மனித சமூகத்தின் சாரத்தையும் அந்தந்த நிலங்களில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட தனித்த பண்புகளையும் இணைத்தே கொண்டிருக்கும். அவ்வகையில் கதையினை இன்றைய மெமரி கார்ட்டுக்கு ஒப்பாக்க் கொள்ளலாம். ஆனால், இவை அனைத்தும் மக்களிடமிருந்து இயல்பாக உருவாகும் கதைகளுக்குத்தான் பொருந்துமே தவிர, திட்டமிட்டு நிறுவனதன்மையுடன் 'கட்டமைக்கப்படும்' கதைகளுக்குப் பொருந்தாது. மக்களின் கதைகள் அவர்களது வாழ்வியல் சார்ந்தவை. கட்டமைக்கப்படும் கதைகள் அதிகாரத்தோடு தொடர்புடையதாகவும் வெகு காத்திரமான நுண்ணரசியல் கொண்டவையாகவும் இருக்கின்றன. அத்தகைய நுண்ணரசியல் பொதிந்த தன்மையினை 'பாட்டி வடை சுட்ட' கதையினையும் மிகச் சமீபத்திய 'கிராவிட்டி' படத்தினையும் கொண்டு காண்போம்.

ஒர் ஊரில் ஒரு பாட்டி வடை சுட்டுப் பிழைத்து வந்தார். ஒரு நாள் மரத்தின் மேலிருந்த காகம், பாட்டி அசந்த நேரம் பார்த்து ஒரு வடையினைத் திருடி வாயில் கவ்வியபடி பறந்து சென்று ஒரு மரத்தின் மேல் அமர்ந்தது. அவ்வழியே வந்த நரி வடையினைக் கைப்பற்ற எண்ணி, உனது இனிமையான குரலில் பாட்டுப் பாடக் கோரியபோது, காகம் அவ்வாறே பாட முற்பட்டபோது, வாயிலிருந்து வடை கீழே விழ, நரி அதனைக் கவ்விக்கொண்டு ஓடியது.

முட்டாள் காகமும் ஏமாந்த நரியும் என்பதே இக்கதையின் தலைப்பு. இப்போது சிறிய மாறுதலுடன் சில பிரதிகளில் இக்கதை காணக் கிடைக்கிறது. இந்தக் கதையில் நரி பாடச்சொன்னதும் காகம் வடையினை காலில் வைத்தபடி பாட, நரி ஏமாந்து சென்றதாக உள்ளது. இந்தக் கதை தெரிந்ததுதானே என்பவர்களுக்கு இப்பொழுது ஒரு கேள்வி. இந்தக் கதையினை இதற்குமுன் கேள்விப்பட்ட பொழுதுகளில், இப்போது வாசித்த நேரத்தில், உங்களுக்கு இந்தக் கதையில் மிகப்பெரும் ஏமாற்றத்தினை சந்தித்தது பாட்டிதான் என்பது எப்போதேனும் தோன்றியிருக்கிறதா? வாய்ப்பில்லை. ஏனெனில், எவரது இழப்பு கவனிக்கப்பட வேண்டியது, எவரின் இழப்பு கவனத்திற்குரிய தகுதியுடையது இல்லை என்பதைக் கதைதான் முடிவு செய்கிறது.

பாட்டியின் உழைப்பு பறிபோனது நமக்கு உறுத்தாத வண்ணம் பின்னப்பட்டுள்ளதோடு, உழைப்பை உறிஞ்சுகிறவர்களிடையேயான வெற்றியும் தோல்வியும் மட்டுமே நமக்கு கவனத்திற்குரியதாகவும், அதனடிப்படையில் நமது எண்ணம், உரையாடல் நிகழும் வண்ணமும் கதை கட்டப்பட்டுள்ளது. உண்மையில் இன்றும் உலகின் பல கோடிக்கணக்கான உழைக்கும் மக்களின் உழைப்பு சுரண்டப்படுவது கவனத்தில்கூட வருவதில்லை என்பதுதான் வரலாறும். இதனை வெறும் கதைதானே என சுரண்டப்படுபவர்கள், சுரண்டலுக்கு எதிராக யோசிப்பவர்கள் விட்டுவிட முடியாது.

தற்போது வெளிவந்திருக்கும் 'கிராவிட்டி' படத்தின் கதை எளிமையானது. ஆனால் உலக ஒழுங்கை, நடப்பு உலகளாவிய அதிகார அரசியலை பிரதி செய்வதே. விண்வெளியில் ஆய்வு மேற்கொண்டிருக்கும் அமெரிக்க விண்வெளி வீரர்களுக்கு உடைந்த [கவனிக்க] சோவியத் விண்கலத்தின் காரணமாக ஆபத்து ஏற்படுகிறது. அதனை சர்வதேச[?], சீன விண்கலங்களின் தங்குமிடங்களின் உதவியுடன் தாண்டி, கதையின் நாயகி [ஸான்ட்ரா புல்லக்] மட்டும் மீள்வதான கதை மிக எளிதாக நமக்குள் பலவற்றை 'பாட்டி வடை சுட்ட' கதையினைப் போல் கடத்திவிடுகிறது.

சோவியத் யூனியன் அழிக்கப்பட்டு கால் நூற்றாண்டிற்குப் பிந்தைய படம். சோவியத் வேண்டாம் ஆனால், சீனா வேண்டும். ஏனெனில், இன்று முதலாளித்துவத்தினை விட பன்னாட்டு வணிகம்தான் வலிவுடைய பொருண்மை. சீனா கூட்டாளியாக முடியும். மிரட்டும் செய்நேர்த்தி. ஒரே ஒரு ஆறுதலான காட்சி சீனாவின் விண்கல நிலையத்தில் அத்தனை கணினி தகவல்களும் சீன மொழியில் தான் இருக்கும். ஆங்கிலமே பிரதானம் என்ற எண்ணமுடையோர் உணர வேண்டிய பகுதி அது. – **சேரலாதன்**

# யுத்தப் பாதிப்பிற்குள்ளான பகுதிகளின் அபிவிருத்திக்கு ஜப்பான் நிதியுதவி

(கொழும்பு)

**யுத்தப் பாதிப்பிற்குள்ளான வடக்கு, கிழக்கு மாகாணங்களின் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புத் தேவைகளுக்காக ஜப்பானிய அரசாங்கம் 3.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.**

ஐ.நாவின் ஹபிராற் நிறுவனத்தினூடாக இந்த மாகாணங்களில் புனர்வாழ்வு, குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்கள் மற்றும் பெண்கள் தலைமைத்துவமாக உள்ள குடும்பங்களுக்கான உதவிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் படி கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 80 கிராமங்கள் பயன்பெறவுள்ளன. இதன் படி, வீதிகள். பாடசாலைகள் மற்றும் வடிகாலமைப்புக்கள் என்பன திருத்தி அமைக்கப்படவுளளன. இந்தத் திட்டங்கள், ஐ.நா.வின் ஹபிராற் பங்களிப்புடன், சிவில் சமூகப் பிரதிநிதிகள், மாவட்ட அரச அதிபர்கள் ஆகியோரின் உதவியுடன் இரண்டு வருடகாலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

நிதியுதவி வழங்குவதற்கான ஒப்பந்த கைச்சாத்து நிகழ்வில் உரையாற்றிய ஜப்பானியத் தூதுவர் நொபு கிட்டோ கோபோ இலங்கையில் சுமுக நிலை ஏற்படுத்தப்படுவதற்கான அடிக்கட்டுமான வசதிகளை ஏற்படுத்தி வரும் இலங்கை அரசின் செயற்பாடுகளை வரவேற்கின்றோம். அதேபோன்று யுத்தப் பாதிப்பிற்குள்ளான மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது தொடர்பில் ஜப்பான் உணர்ந்துள்ளது.



பெண்களைத் தலைவர்களாக கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றி அவர்கள் தனித்து இயங்க பொருளாதார ரீதியாக முன்னேற்ற வேண்டும்.

அத்துடன் யுத்தப் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் ஐ.நா. ஹபிராற் நிறுவனம் முன்னெடுத்து வரும் புனர்வாழ்வு செயற்றிட்டங்கள் முக்கியமானது.


எனவே இந்தத் திட்டங்கள் மூலம் அப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் மேலும் மேம்படையுமென ஜப்பான் நம்பிக்கை கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கை தமிழ் வர்த்தகர் ஆஸியில் குத்திக் கொலை

அவுஸ்ரேலியா, சிட்னியில் இலங்கையைச் சேரந்த தமிழ் வர்த்தகர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

விசா ஈசன் ( 47 வயது) என்ற இலங்கைத் தமிழரான இவர், நேற்றுமுன்தினம் இரவு இனம் தெரியாத நபர்களின் கத்திக் குத்துக்கு இலக்காகி மருதத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், உயிரிழந்துள்ளார்.

இவர், 20 வருடங்களுக்கு முன்னர் இலங்கையிலிருந்து அவுஸ்ரேலியாவில் தஞ்சமடைந்துள்ளார்.



இப்படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பெண்டி ஹில் பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

# இந்தியா சென்ற இலங்கையர் விபத்தில் சிக்கி காயம்

(அக்ரா)

இந்தியாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையைச் சேர்ந்த 10 சுற்றுலாப் பயணிகள் காயமடைந்துள்ளதாக இந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


காயமடைந்தவர்களில் இலங்கையைச் சேர்ந்த பெண்ணொருவர் (வயது 63) ஆபத்தான நிலையிலுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இவர்கள் பயணித்த மினிபஸ் டிரக் வண்டியொன்றுடன் மோதி விபத்திற்குள்ளானது. எட்டு நாட்களுக்கு முன்னர் புதுடில்லி வந்த இச்சுற்றுலாப் பயணிகள், தாஜ்மஹாலைப் பார்வையிடுவதற்காக ஆக்ரா வழியாகச் சென்றுகொண்டிருந்தபோது யமுனா நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் விபத்திற்குள்ளாகினர்.

மேற்படி சுற்றுலாப் பயணிகளும் பஸ் சாரதியும் கைலாஷவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# கொழும்பிலிருந்து யாழ்வந்த பயணிகள் பேருந்து எரிந்து நாசம்

## பயணிகள் தப்பினர், உடமைகள் கருகின



(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ். நோக்கி பயணிகளை ஏற்றி வந்த சொகுசு போருந்தின் பின்பகுதி நேற்று அதிகாலை புளியங்குளம் பகுதியில் திடீரென தீப்பற்றிக் கொண்டதில் பஸ் முழுவதுமாக எரிந்து நாசமாகியதாக கனகராயன் குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ்ஸில் பயணித்த 45 பயணிகளுக்கும் ஆபத்து எதுவும் இல்லாத போதும், பஸ்ஸின் பின்பகுதியில் வைக்கப்பட்ட அவர்களின் உடமைகள் அனைத்தும் எரிந்து நாசமாகியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் இரவு யாழ். நோக்கி புறப்பட்ட குறித்த பஸ் நேற்று அதிகாலை 3 மணியளவில் புளியங்குளத்திற்கும் கனகராயன் குளத்திற்கும் இடைப்பட்ட குறிசுட்டான் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது பஸ்ஸின் பின்பகுதி எரியத் தொடங்கியுள்ளது.

உடனடியாக பஸ்ஸில் பயணித்த பயணிகள் கீழே இறங்கியமையினால் அவர்களுக்குப் பாதிப்பு ஏதுவும் ஏற்பட வில்லை என பொலிஸார் தெரி வித்தனர்.

மேற்படி அனர்த்தமானது பஸ்ஸில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இடம்பெற்றதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்ததாக புளியங்குளம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# மருந்துகளுக்கு கட்டுப்பாட்டு விலை மீறினால் தண்டனைக்குரிய குற்றம்

## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவிப்பு

இறக்குமதி செய்யப்படும் அனைத்து மருந்து வகைகளுக்கும் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக மற்றும் கூட்டுறவு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கடந்த மார்ச் 4 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இறக்குமதி செய்யப்படும் மருந்துப் பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலையினை நுகர்வோர் அதிகாரசபை தீர்மானித்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இதற்கிணங்க கட்டுப்பாட்டு விலையையும் மீறி மருந்துப் பொருட்களை விற்பனை செய்யும் தனியார் மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கெதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வர்த்தக மற்றும் கூட்டுறவு அமைச்சில் இது தொடர்பில் விளக்கமளிக்கும் விசேட செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். தனியார் மருந்தகங்களிலும் மருத்துவ மனைகளிலும் இறக்குமதி செய்யப்படும் மருந்துகளுக்கான விலைகளை தன்னிச்சையாக அதிகரித்து விற்பனை செய்வதனால் மக்கள் எதிர்நோக்கி வந்த பிரச்சினை குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நீண்டகாலமாக அவதானம் செலுத்தி வந்தார்.



இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் விலையினை நடைமுறைப்படுத்துவதனை துரிதப்படுத்துமாறு கேட்டுக் கொண்டதற்கமையவே நாம் இதனை அமுலுக்கு கொண்டு வந்துள்ளோம்.

மருந்தகங்களுக்கு மருந்தகம் மருந்துகளின் விலைகள் வேறுபடுகின்றன. சிலர் 800 சதவீதம் வரை இதனால் இலாபமடைகின்றனர். இனிமேலும் நோயாளிகளை ஏமாற்றிப் பணம் பறிக்கும் முறையினை நீடிப்பதற்கு இந்த அரசாங்கம் இடமளிக்கமாட்டாது.

நுகர்வோர் அதிகார சபையின் சட்ட விதிமுறைகளுக்கமையவே இதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி கட்டுப்பாட்டு விலையிலும் 10 சதத்தினால் அதிகரித்து மருந்துகளை விற்பனை செய்தாலும் அது தண்டனைக்குரிய குற்றமாகுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# யுவதியை நிர்வாணமாக்கி நோய்தேடிய சாமியார் கைது

(கொழும்பு)

சாஸ்திரம் பார்ப்பதற்காகச் சென்ற யுவதியொருவரை நிர்வாணப்படுத்தி அந்த யுவதியின் உடலில் நோய் தேடிய சாமியார் ஒருவரை பொலிஸார் கைது செய்த சம்பவமொன்று ஆனமடுவை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சாமியாரிடமிருந்து தப்பி ஓடிய மேற்படி யுவதி, பொலிஸில் செய்த முறைப்பாட்டை அடுத்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

குறித்த சாமியாரிடம் சாஸ்திரம் பார்ப்பதற்காக 27 வயது யுவதியொருவர் சென்றுள்ளார். அந்த யுவதி ஏதோவொரு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ள சாமியார், அந்த நோய் யாதெனக் கண்டுபிடிப்பதாகக் கூறி யுவதியை நிர்வாணப் படுத்தியுள்ளார்.

சாமியாரின் இந்த நடவடிக் கையிலிருந்து தப்பிக்கொண்ட யுவதி, அவ்விடத்திலிருந்து ஓடிச்சென்று பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்தே, அந்தச் சாமியார்



கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தொடர்ந்து விசாரணைகளை நடாத்தி வரும் ஆணமடுவை பொலிஸார், சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# காணி உறுதிகளில் மோசடி விழிப்புணர்வு அவசியம்


## மக்களுக்கு, பொலிஸார் அறிவுறுத்து

உறுதி தொடர்பான ஆவணங்கள் மோசடி செய்யப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள ளனர். இந்த ஆவண மோசடியில் பெண் பொறியியலாளர் ஒருவரும் சிக்கியுள்ளார்.

42 மில்லியன் ரூபா பெறுமதியான காணியொன்றை போலி ஆவணங்கள் தயாரித்து இந்தப் பெண் பொறியலாளருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணி இவ்வாறு மோசடியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மாலம்பே முன்னணி கணனி நிறுவனமொன்றுக்கு அருகாமையில் இவ்வாறு காணி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு காணிப் பதிவு திணைக்களத்திலிருந்து பாரியளவில் ஆவணங்கள் களவாடப்பட்டுள்ளதாகவும் அதற்குப் பதிலாக போலி ஆவணங்கள் வெளியிடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த விடயம் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டுமென பொலிஸார். கோரிக்கை விடுத்துள்ளனர்.




# முதலுதவி பற்றிய அறிவிற்காக கல்விமுரசு தரும் விசேட தகவல்கள்

## உயிர் காக்கும் முதலுதவி சிகிச்சை!

இலங்கையில் விபத்துக்களால் உயிர் இழப்பவர்களில் 80 சதவிகிதம் பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட முதல் ஒரு மணிநேரத்தில் பலியாகிறார்கள். இத்தகைய விபத்தில் சிக்கியவர்களுக்கு முறையான முதலுதவி கிடைத்திருந்தால், அவர்கள் நிச்சயம் காப்பாற்றப்பட்டு இருப்பார்கள்.

அந்த அளவுக்கு முதலுதவி என்பது தேவையானதாகவும், அவசியமாகவும் இருக்கின்றது. ஆபத்தான நிலையில் இருப்பவர்களை மருத்துவமனைக்கு தூக்கிச் செல்லும் முன், அவர்களுக்கு தேவையான அவசர சிகிச்சையே "முதலுதவி" எனப்படும்.

ஒவ்வொரு வருடமும் செப்ரெம்பர் 14 ஆம் திகதியை "உலக முதலுதவி




தினமாக" உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. இதில், ஒருவர் ஆபத்தான நிலையில் இருக்கும் பொழுது, அவருக்கு எந்த மாதிரியான உதவிகளைச் செய்ய வேண்டும் என்பது பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் அதனுடைய முக்கியத்துவத்தை வலியுறுத்தி மக்களிடம் பிரசாரம் செய்யப்படுகிறது.

இந்தப் பகுதியை வாசிப்பவர்கள் பிறருக்கு உதவி செய்வது பற்றியும் பார்வை, முதலுதவி என்றால் என்ன என்பது பற்றியும் முதலுதவி எவ்வாறு இருக்க வேண்டும், முதலுதவிக்கு தேவையான பொருட்கள் போன்றவற்றை தெரிந்து கொள்ளலாம்.ஆபத்தான நிலையில் (உடல்நிலை சரியில்லாமல் அல்லது காயம் பட்டு) இருப்பவருக்கு விரைவாக, சரியான முறையில் மருத்துவ உதவி அளிப்பது முதலுதவி என்று அழைக்கப்படும்.

ஆபத்தான நிலையில் இருக்கும் ஒருவருக்கு, அவருடைய உயிரைக்காப்பாற்ற அப்பொழுது அவருக்கு என்ன கொடுக்க வேண்டும், என்ன கொடுக்கக் கூடாது என்பதை அறிந்து சமயோசிதமாக செயற்பட வேண்டும். முதலுதவி செய்பவர் மருத்துவர்கள் வந்து அவருக்கு சிகிச்சை அளிக்கும் வரை அவருடன் இருந்து, முழு விபரத்தையும் தெரிவிக்க வேண்டும். ஏனென்றால், முதலுதவி என்பது அந்த நேரத்தில் செய்யக்கூடிய தற்காலிகமான சிகிச்சை என்பதை நாம் உணர வேண்டும். அதை உணர்ந்து நாம் ஒவ்வொருவரும் முதலுதுவி செய்ய இந்நாளில் சபதமேற்க வேண்டும்.

### வகுப்பறையில் முதுலுதவி எப்படிச் செய்ய வேண்டும்?

1. எப்பொழுதும் வகுப்பறையில் விழிப்புடன் இருக்க வேண்டும். ஆபத்தான பகுதிகள் இருப்பின் அதை கண்காணித்தவராக இருக்க வேண்டும்.
2. முதலுதவி செய்வதில் வயது வரம்பு கிடையாது. ஒருவருக்கு காயம் ஏற்பட்டிருப்பின் வாய்ப்பு இருக்கும் பட்சத்தில் உடனடியாக உதவ வேண்டும்.
3. சம்பவ இடத்தில் அமைதியை ஏற்படுத்த வேண்டும். இல்லையென்றால், பாதிக்கப்பட்டவருக்கு பீதியை ஏற்படுத்தக்கூடியதாக அமைந்து விடும்.
4. வகுப்பறையில் முதலுதவிப் பெட்டி அமைந்திருக்கும் இடத்தை அனைவரும் அறிந்திருக்க வேண்டும்.
5. பாதிக்கப்பட்டவரை யாரும் சூழ்ந்திருக்காதபடி கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இயற்கையின் காற்று அவருக்கு கிடைக்கும்.

### விளையாடும்பொழுது ஏற்படும் காயங்களுக்கு எவ்வாறு முதலுதவி செய்ய வேண்டும்?

1. மைதானம் மற்றும் இதர இடங்களில் விளையாடும்பொழுது சுளுக்கு, இரத்தப் போக்கு மற்றும் மூட்டுக் காயங்கள் ஏற்படும்.
2. இதுபோன்று பாதிப்புகள் ஏற்படும்பொழுது, பாதிக்கப்பட்டவரை இழுக்கவோ அல்லது நகர்த்தவோ செய்ய வேண்டாம். ஸ்ட்ரச்சரில் வைத்து தேவையான இடதத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.
3. இரத்தப் போக்கு அல்லது இரத்தக் கசிவு ஏற்பட்டவருக்கு சீக்கிரம் சிகிச்சை அளிக்க வேண்டும். உடனடியாக, இரத்தக் கசிவை நிறுத்த முதலுதவிப் பெட்டியில் இருக்கும் கட்டுத்துணி மற்றும் பஞ்சு வைத்து அடிபட்ட இடத்தை சுத்தம் செய்ய வேண்டும். காயம் பட்டவருக்கு தண்ணீர் கொடுக்கக் கூடாது. இக்கட்டான நேரத்தில் தேவையை உணர்ந்து கொஞ்சம் தண்ணீர் கொடுக்கலாம்.

### வீதியில் ஏற்படும் பொழுது

1. நல்ல வசதிகளை உடைய முதலுதவிப் பெட்டி அனைவர் வீட்டிலும் இருக்க வேண்டும்.
2. தீக்காயங்கள் மற்றும் வெட்டுக்கள் போன்ற பொதுவான காயங்களுக்கு சிகிச்சை அளிக்க தெரிந்திருக்க வேண்டும்.
3. சுளுக்கு ஏற்படும் இடங்களில் நேரடியாக ஐஸ் கட்டி வைக்கக் கூடாது. அதை, ஒரு பொலித்தீன் பையில் வைத்து சுளுக்கு ஏற்பபட்ட இடத்தில் வைக்கும்பொழுது பயனுள்ளதாக இருக்கும்.
4. சிறு தீக்காயங்களுக்கு மட்டுமே கிறம் போன்றவைகளை பயன்படுத்த வேண்டும.
5. வீட்டில் எப்பொழுதும், எந்ரேமும் மருத்துவர்களின் தொலைபேசி இலக்கமும் முகவரி யும் அவசரத்திற்கு அனைவரும் பார்க்கும்படி ஒட்டி வைத்திருக்க வேண்டும்.

### சாலையில் ஏற்படும் பொழுது

1. உங்களுடைய காரில் எப்பொழுதும் முதலுதவிப் பெட்டி இருக்கிறது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
2. விபத்து ஏற்படும்பொழுது உதவி செய்ய சிலர் அசிங்கமாக நினைபபார்கள். அப்பொழுது நாம் நம்முடைய முதலுதவிப் பெட்டியை எடுத்து தேவையான சிகிச்சையை அளிக்க வேண்டும்.
   ஒரு சில நேரங்களில் எலும்பு முறிவு ஏற்பட்டால், அதற்கு சிகிச்சை அளிக்கத் தெரியவில்லை என்றால், அப்பொழுது உதவிக்கு மற்றவர்களை அழைக்க வேண்டும்.
3. சில பகுதிகளில் உங்களுக்கு உதவிக்கு ஆட்கள் இருக்காது. அதுபோன்ற இடங்களில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.
4. நீங்கள் உதவி செய்யும்பொழுது, பிறருக்கு இடையூறு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
5. பாதிக்கப்பட்டவருக்கு அந்த நேரத்தில் மருத்துவரின் ஆலோசனை இல்லாமல், மருந்துகளையோ அல்லது ரொனிக்கோ எதுவும் கொடுத்துவிடக்கூடாது.

### முதலுதவி பெட்டியில் என்னென்ன பொருட்கள் இருக்க வேண்டும்?

1. காயம் பட்ட இடத்தை சுத்தம் செய்ய துணி இருக்க வேண்டும்.
2. கட்டுத் துணி மற்றும் பண்டேஜ் இருக்க வேண்டும்.
3. நோய்க் கிருமிகளை அழிக்கும் மருந்து மற்றும் காயத்தை ஆற்றுவதற்கான ஒயின்மெண்ட் இருக்க வேண்டும்.
4. ஒட்டும் தன்மையுள்ள டேப் ரோல்கள் இருக்க வேண்டும்.
5. முக்கோண வடிவில் சுற்றுவதற்கு பண்டேஜ் இருக்க வேண்டும்.
6. துணிகளை வெட்ட மற்றும் காயம் பட்ட இடத்தை சுற்றி இருக்கும் முடிகளை வெட்ட நல்ல கத்திரிக்கோல் இருக்க வேண்டும்.
7. தீக்காயங்கள் ஏற்பட்ட இடங்களில் போடுவதற்கான கிறீம் இருக்க வேண்டும்.
8. முறிந்த எலும்பை இணைப்பதற்காக வைத்துக் கட்டப்படும் சிம்பு அல்லது கட்டை இருக்க வேண்டும்.
9. தெர்மோ மீற்றர் இருக்க வேண்டும்.
10. காகிதம் மற்றும் பென்சில் இருக்க வேண்டும்.

***இதுவே முதலுதவிப் பெட்டியில் இருக்க வேண்டிய எப்பொழுதும் தேவையான முக்கியமான பொருட்களாகும்.***

**முதலுதவிப் பெட்டியை எப்பொழுதும் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளல**

1. முதலுதவிப் பெட்டியில் சிவப்பு நிற "ப்ளஸ்" போட்டிருக்க வேண்டும்.
2. அதில், மருத்துவர்கள் பெயர் அல்லது தொடர்பு எண்கள் எழுதியிருக்க வேண்டும்.

3. வீட்டில் எப்பொழுதும் முதலுதவிப் பெட்டியை எடுக்கின்ற இடமாக இருக்க வேண்டும்.

4. பூட்டிய அலுமாரி போன்ற எடுக்க முடியாத இடங்களில் முதுலுதவிப் பெட்டியை வைத்து விடக்கூடாது.

5. ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை முதலுதவிப் பெட்டியைப் பரிசோதனை மற்றும் சுத்தம் செய்ய வேண்டும். தேவையான பொருட்களைப் பூர்த்தி செய்ய வேண்டும். அனைத்து மருந்துப் பொருட்களுக்கும் காலாவதியாகும் திகதியை கண்டறிய வேண்டும்.

முதலுதவியைப் பொறுத்தவரை அனைவரும் தெரிந்திருக்க வேண்டிய அவசியம் உள்ளது. அதிலும், குறிப்பாக ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கண்டிப்பாக தெரிந்து வைத்திருக்க வேண்டும். ஏனென்றால், இதனுடைய தேவை எபபொழுதும் இருக்கும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். முதலுதவி விஷயத்தில் ஆசிரியர்கள் எவ்வாறு இருக்க வேண்டும்?

1. அனைத்து ஆசிரியர்களுக்கும் முதலுதவி பற்றிய பயிற்சி வழங்கப்பட்டிருக்க வேண்டும்.
2. வழக்கமான பயிற்சி முறைகளில் ஆசிரியர்கள் முதலுதவி பற்றிய விஷயங்களை தெரிந்து வைத்திருக்க வேண்டும்.
3. ஆசிரியர்கள் அடிப்படையான இதயம் மற்றும் நுரையீரலுக்குரிய சுவாச மீட்சி சிகிச்சையைக் கற்றிருக்கவேண்டும்.
4. காது, மூக்கு, கண், மூச்சு, முறிவுகள் போன்றவை குழந்தைகளுக்கு ஏற்படும் பொழுது, அதற்கு ஏற்றவாறு முதலுதவி செய்ய தெரிந்திருக்க வேண்டும்.
5. சில நேரம் இரத்தம் தடைப்பட்டு, சுவாசம் நின்று விடும் வாய்ப்பிருக்கிறது. அப்பொழுது, உணர்வு இருக்கின்றதா, இல்லையா என்பதை அறிய உடம்பின் மெல்லிய பகுதியில் கிள்ள வேண்டும். அப்படி இருக்கும் பட்சத்தில் அவருடைய வாயை திறந்து உங்களுடைய மூச்சை செலுத்த வேண்டும். அப்படிச் செலுத்தும் பொழுது மூச்சடைப்பு நிற்கும்.

**முதலுதவி விஷயத்தில் பெற்றோர்கள் எவ்வாறு இருக்க வேண்டும்?**

1. பெற்றோர்கள் சிறு சிறு காயங்களுக்கு கட்டுப் போடுவது பற்றி தெரிந்து வைத்திருக்க வேண்டும்.
2. உடம்புகளில் வீக்கங்கள் ஏற்படும்பொழுது எந்தெந்த பண்டேஜ்கள் பயன் படுத்துவதுஎன்பது பற்றி தெரிந்திருக்க வேண்டும்.
3. இரத்தக் கசிவு, தொடர்ந்து இரத்தம் வடிதல் போன்றவைகளை எவ்வாறு நிறுத்துவது என்பதை கண்டிப்பாக தெரிந்து வைத்திருப்பது அவசியமாகும்.
4. அதுபோன்று, சமையலறையில் ஏற்படும் கத்தி வெட்டுகள், கீறல்கள் போன்றவற்றிற்கு எவ்வாறு சிகிச்சை செய்ய வேண்டும் என்பதை தெரிந்து வைத்திருத்தல் அவசியமாகும்.

இவ்வாறு, முதலுதவி விஷயத்தில் நாம் கவனமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு தருணத்திலும் மற்றவர்களுக்கு உதவுவதில், மற்றவர்களின் உடல் நிலைகளில் கவனம் செலுத்துவதில் முன்னணியில் நின்று செயல்பட வேண்டும்.

## அவசர கால முதலுதவி முறைகள்

வேலை செய்யும் பொழுதோ மற்ற நேரங்களிலோ மயக்கம் வருவது போல் தெரிந்தால், உடனே தாமதிக்காமல் மேலுதட்டில் இருக்கும் சிறிய பள்ளத்தில் மூக்கிற்குக் கீழ் ஆட்காட்டி விரலை வைத்து 1 நிமிடம் லேசாக அழுத்தம் கொடுத்து கசக்கி விடுவதன் மூலம் மயக்கத்திலிருந்து உடனடி நிவாரணம் பெறலாம். மயக்கம் வந்து கீழே விழுந்து விட்டால் :உங்கள் கண் முன்னே யாராவது மயக்கம் வந்து கீழே விழுந்து விடலாம். அவருக்கு முதல் உதவி செய்து காப்பாற்ற வேண்டியது நமது கடமை. உடனே விழுந்தவரின் மூக்கிற்குக்



கீழ் உதட்டுப் பள்ளத்தில் மசாஜ் செய்யுங்கள். வேகமாக பிறகு உள்ளங்கால் பகுதியில் கட்டை விரல் எலும்பும், பக்கத்து விரல் எலும்பும் சேரும் இடத்தில் விரலால், மிகுந்த அழுத்தத்துடன் மசாஜ் செய்யுங்கள். விழுந்தவர் எழுந்து விடுவார் தெளிவுடன்.

**தலைவலி :**

கை கட்டை விரல் நகத்திற்கு நேர் கீழ் உள் பக்கம் (கைரேகைக்காக இங்க் படும் பகுதி) சதைப் பகுதியில் மறுவிரல் நகத்தால் 1 நிமிடம் விட்டு விட்டு அழுத்தம் கொடுங்கள். அதே போல் அடுத்த விரலிலும் செய்யுங்கள். தலைவலி பறந்து போவதை நீங்கள் உணரலாம்.

**வயிற்றுப் பிரச்னைகள் :**

தொப்புளிலிருந்து இடது பக்கம் 2 இஞ்ச் உங்கள் கைவிரல் அளவு அளந்து உங்களின் ஆட்காட்டி விரலால் 1 நிமிடம் அழுத்தம் கொடுங்கள். சாதாரண வயிறு உபாதைகள் நீங்கும்.கால் கட்டை விரலிலிருந்து மூன்றாவது விரலுக்கும் (நடுவிரல்) இரண்டாவது விரலுக்கும் இடைப்பட்ட சவ்வுப் பகுதியில் 1 நிமிடம



அழுத்தம் கொடுங்கள்.வயிறு உப்புசம், வயிற்றில் சூடு, வயிறு கல் போட்டது போன்றிருத்தல், உடம்பு வலி ஆகியவைகள் பறந்து போகும். இது போன்ற அக்குபஞ்சர் முறையிலான முதலுதவி முறைகளை தெரிந்துக் கொள்வதன் மூலம் கையில் முதலுதவி பெட்டி இல்லாத போதும் நம்மால் முதலுதவி செய்ய இயலும்.

**சாலை விபத்து தடுப்பும், அவசர சிகிச்சையும்**

மோட்டார் வாகன சாலை விபத்துக்களை தடுப்பதும், அவசர சிகிச்சைகளை பற்றி கோவை என்.ஜி.மருத்துவமனை சேர்மன் மற்றும் லேப்ராஸ்கோபி, எண்டாஸ்கோபி சிறப்பு சிகிச்சை நிபுணர் டாக்டர் மனோகரன் விழிப்புணர்வு அளித்தார். அவர் கூறியதாவது: விபத்து என்பது யாரும் எதிர்பாராமல் நடக்கும் ஒரு நிகழ்வு, விபத்துக்களை பலவிதமாக பிரிக்கலாம். சாலை விபத்து, நில நடுக்கம், தீ விபத்து, வெள்ள விபத்து, மின்சார விபத்து என்று கூறலாம்.

மேற்கூறிய விபத்துகளில் மக்கள் அதிகமாக பாதிக்கப்படுவது சாலை விபத்து. நம் இந்திய நாட்டில் ஒரு மணி நேரத்திற்கு 14 பேர் இறக்கிறார்கள். தேசிய குற்றவியல் துறையின் கணக்கின்படி வருடத்திற்கு 135000 பேர் இறக்கிறார்கள் ஒவ்வொரு வருடமும், இக்கணக்கெடுப்பின்படி 25 வயதுக்கு உட்பட்டவர்களின் இறப்பு விகிதம் அதிகமாக உள்ளது

அதுவும் இரு சக்கர வாகனத்தினால் ஏற்படும் விபத்தின் சராசரி விகிதம் அதிகமாக உள்ளது. விபத்தில் 44 சதவிகிதம் இறப்பு இரு சக்கர வாகனங்கள் ஓட்டுபவர்களாகவும், 34 சதவிகிதம் இறப்பு சாலையில் நடந்து செல்பவர்களாகும்.

**விபத்திற்கான காரணங்கள்**

குடிப்பழக்கம், கவனக்குறைவு, கைபேசியை உபயோகித்து கொண்டே வாகனங்களை ஓட்டுவது, சாலை விதிகளை கடைபிடிக்காமல் இருப்பது, அதிவேகமாக வாகனத்தை ஓட்டுவது, தலைக்கவசம் அணியாதது, வாகனங்களை சரியாக பராமரிக்காமல் இருப்பது, உறக்கமின்மை, அசதி, சீட் பெல்ட் அணியாமல் வாகனத்தை இயக்குவது, போட்டி போட்டு கொண்டு வாகனங்களை இயக்குவது.

**சாலை விபத்தை தவிர்க்கும் முறைகள்:**

குடி மற்றும் போதையில் இல்லாத போது வாகனங்களை இயக்குவது, வாகனங்களை ஓட்டும் போது முழுக்கவனம் சாலையில் இருக்க வேண்டும். கைபேசியே உபயோகிக்காமல் வாகனத்தை ஓட்டுவது, 18 வயதிற்கு கீழ் உள்ளவர்கள் தனியாக வாகனங்களை ஓட்டுவதற்கு ஊக்குவிக்காமல் இருப்பது, 60 வயதிற்கு மேல் உள்ளவர்கள் தனியாக வாகனங்களை ஓட்டுவதற்கு அனுமதிக்காமல் இருப்பது. சாலை விதிகளை முறைப்படி கடைபிடிப்பது,

**தலைக்கவசம் அணிவது, சீட் பெல்ட் அணிவது.**

**சாலை விபத்தில் அடிபட்டவர்களுக்கு முதலுதவி:**

அடிபட்டவரால் பேச முடிகிறதா, பெயர் என்ன? சீராக சுவாசிக்கிறாரா என்றும் நாடித்துடிப்பையும் அறிய வேண்டும். உடனடியாக அவசர ஊர்தியை வரவழைத்து மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டும். மருத்துவரிடம் நடந்தவற்றை கூற வேண்டும். சுவாசம் இல்லை என்றால் அடிபட்டவரின் வாயை திறந்து சுவாசிப்பதற்கு ஏதாவது இடைஞ்சல் இருக்கிறதா என்று அறிய வேண்டும். ஏதாவது இடைஞ்சல் இருந்தால், வாயினுள் ஆள்காட்டி விரலையோ அல்லது நடுவிரலையோ உள் செலுத்தி இடைஞ்சலை சரிப்படுத்த வேண்டும்.

அவ்வாறு செய்யும் பொழுது, அடிபட்டவர் விரலை கடிக்கும் வாய்ப்புள்ளதால் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நாடித் துடிப்பு குறைந்து, சுவாசம் குறைந்து காணப்பட்டால் வாய்க்கு வாய் சுவாசமும், வாய்க்கு, மூக்கு சுவாசம் கொடுக்க வேண்டும். வாயில் இரத்தக் கசிவு அல்லது வாந்தி எடுத்தால் அவருடைய உடம்பையும், தலையையும் ஒரு புறமாக சாய்த்து படுக்க வைக்க வேண்டும். இதனால் புறை போவதை தவிர்க்கலாம். ஒரு புறமாக படுக்க வைக்கும் பொழுது கீழ் இருக்கும் கை நீட்டியும், மேல் உள்ள கை அவருடைய மார்பின் மேல் இருக்க வேண்டும்.

இரத்தக்கசிவு அதிகமாக இருந்தால் அந்தப் பாகத்தை அழுத்தி பிடிக்க வேணடும். நம்முடைய உள்ளங்கையை வைத்தோ அல்லது கைவிரல்களை வைத்தோ அழுத்திப் பிடிக்கவேண்டும். அடிபட்டவர் விழுந்திருக்கும் போது அவருடைய உடம்பின் நிலை மாறுபட்டு காணப்பட்டால் அவரை அசைக்கக்கூடாது. உடனடியாக மருத்துவரின் சிகிச்சைக்கு கொண்டு போக வேண்டும். இவ்வாறு இருக்கும் போது குடிக்க தண்ணீர் கொடுக்ககூடாது. ஏனென்றால் புறை ஏற்பட்டு மூச்சு திணறல் ஏற்படும்.

நோயாளியை மருத்துவமனைக்கு கொண்டு போகும் போது கவனத்தில் வைக்க வேண்டியவை. நோயாளியை ஸ்ட்ரெட்சர் கொண்டு அவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டும். அவருடைய முதுகையும், கழுத்தையும் நேரடியாக, வைக்க வேண்டும். நோயாளி நேராக படுத்திருக்க வேண்டும். கை அல்லது காலில் இரத்தக் கசிவு இருந்தால், அப்பாகத்தை உயர்த்தி பிடித்து இரத்தக் கசிவை அழுத்தி பிடிக்க வேண்டும். அவர் தொடர்ந்து மூச்சு விடுகிறாரா? அவருடைய நாடி துடிப்பும் சீராக இருக்கிறதா என்று கண்காணிக்க வேண்டும்.

# உள்ளக வீதிகளின் புனரமைப்புக்கு வடமாகாண சபையே பொறுப்பு

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



வடபகுதியின் அபிவிருத்திக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியினைக் கொண்டு சேதமடைந்துள்ள உள்ளகவீதிகள் வடமாகாண சபையால் மீள்புனரமைப்புச் செய்யப்பட வேண்டுமென அமைச்சர் டக்ளஸ்.தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி, எழுதுமட்டுவாழின் இருவேறு பகுதிகளுக்கான மின்விநியோக திட்டத்தை நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைத்ததைத் தொடர்ந்து இடம்பெற்ற பொதுமக்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மக்களுக்கான வாழ்வாதாரத்தை எந்தெந்த வகைகளில் மேம்படுத்த முடியுமோ அதையே நாம் முன்னெடுத்து வரும் நிலையில் அந்தந்தப் பகுதிகளின் அபிவிருத்திகள் தொடர்பிலும் மிகுந்த கவனம் செலுத்துவதுடன், செயற்றிட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றோம்.

ஆனால், நாம் முன்னெடுத்து வரும் அபிவிருத்தி செயற்றிட்டங்களை குறைகாணும் விதத்தில் சுயலாப அரசியல்வாதிகள் செயற்பட்டு வருகின்றனர். இதுவிடயம் தொடர்பில் மக்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

இப்பகுதியில் வாழும் மக்கள் இங்குள்ள உள்ளகவீதிகளை புனரமைத்து தருமாறு எம்மிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இருந்தபோதிலும், உள்ளக வீதிகளின் புனரமைப்புக்களை முன்னெடுக்க வேண்டியது வடமாகாண சபையின் கரங்களிலேயே தங்கியுள்ளது.

நாட்டின் ஏனைய மாகாணங்களை விடவும் வட மாகாணத்திற்கே அதிகளவு நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் அந்த நிதியின் ஊடாக உள்ளக வீதிகளின் புனரமைப்பு உள்ளிட்ட ஏனைய அபிவிருத்தி செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதை உணர்ந்து அவர்கள் செயற்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தென்மராடசி பிரதேசசெயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன், யாழ்.பிராந்திய மின்பொறியியலாளர் ஞானகணேசன், வடககின் வசந்தம் மின்பொறியியலாளர் கோசல ஜயதிலக, ஈ.பி.டி.பியின் தென்மராட்சி பிரதேச இணைப்பாளர் சூசைமுத்து அலெக்ஸாண்டர் சாள்ஸ், ஈ.பி.டி.பியின் கொடிகாமம் இணைப்பாளர் விஸ்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மேய்ச்சல் தரவைகள் அழிப்பு உணவின்றி தவிக்கும் கால்நடைகள்

(கரவெட்டி)

கரவெட்டி கிழக்கு, கரவெட்டி மத்தி ஆகிய பிரதேசங்களில் உள்ள தோட்ட நிலங்களைச் சூழவுள்ள புற்கள் தீ வைத்து அழிக்கப்பட்டு வருவதால் கால்நடைகளுக்கு உணவு இல்லாமல் போவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இப்பகுதியிலுள்ள கிராய், அலும்பிச்சையடி, அந்திரான் போன்ற தோட்ட நிலங்களைச் சூழவுள்ள பகுதிகளில் உள்ள புற்களைச் சிலர் நெருப்பு வைத்து அழித்து வருவதாகவும், இதனால் மேய்வதற்கு புல் இல்லாமல் 500 இற்கு மேற்பட்ட கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தற்போது நிலவும் வறட்சியான காலநிலையால் நீரின்றி கால்நடைகள் தவிக்கின்ற நிலையில் மேய்ச்சல் தரவைகளை அழித்து உணவின்றித் தவிக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனினும் இது தொடர்பாக கமக்கார அமைப்பு உரிய நடவடிக்கை எடுக்குமா எனவும் விவசாயிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். (18)

# செலான் வங்கிக் கிளையால் சேமிப்பை ஊக்குவிக்கும் சிறுவர் சந்தை

(சாவகச்சேரி)

செலான் வங்கியின் சாவகச்சேரி கிளையினால் குழந்தைகளின் எதிர்கால கல்வி நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக சிறுவர் சந்தை ஒன்று ஏற்பாடு செய்து நடத்தப்பட்டு வருகிறது.

இதன்படி இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் 11 மணிவரை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச்சந்தையில் தரம் 1, 2 மாணவர்கள் தமது வீட்டில் பயிரிடப்பட்டு பெறப்பட்ட காய்கறிகள், பழவகைகள், வீட்டில் தயாரித்த சிற்றுண்டி வகைகள் மற்றும் கைவினைப் பொருட்கள் என்பவற்றை விற்பனை செய்யமுடியும் எனவும் பங்குபற்றுபவர்களுக்கான அனுமதிப் பத்திரமாக செலான் வங்கி டிக்கிரி சிறுவர் கணக்கு திறக்கப்படவுள்ளதுடன், பெற்றோர் 100 ரூபா கட்டணத்தை வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (11)

# வல்வை இந்து மயானத்தின் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுப்பு

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மயானங்களில் வல்வை இந்து மயானத்தின் அபிவிருத்தி வேலைகள் தற்போது நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்து மயான பரிபாலன சபை தெரிவுசெய்யப்பட்ட நிலையில் 7 கிராமங்கள் வல்வை இந்து மயானத்திற்கு தெரிவு செய்யப்பட்ட நிலையில் இக் கிராம மக்களிடமிருந்து மொத்தமாக 6 இலட்சம் ரூபா நிதியுடன் பிரதேச சபையிடமும் நிதி பெறப்பட்டு தற்போது அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருவதாகவும், மயானக் காணி சிரமதானம் மூலம் துப்புரவாக்கப் பட்டுள்ளதாக பிரதேசசபை உறுப்பினர் க.இரத்தினம் தெரிவித்துள்ளார். (18)

# மருந்து கொள்வனவுக்கு 1 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலைகளின் மருந்து வகைகளுக்கென 1 இலட்சம் ரூபா நிதி ஒதுக்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மாதாந்த பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கான மருந்துகள் முடிவடைந்துள்ளதால் கொள்வனவு செய்து வழங்குமாறு ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

அவர்களது கோரிக்கை சபையில ஆராயப்பட்டு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான மருந்துகள் கொள்வனவு செய்வதற்கு அனுமதிப்பதெனத் தெரிவித்த போது சபை உறுப்பினர் பொ.கணேஸ் முன்மொழிய இனனொரு உறுப்பினரான ந.கந்தசாமி வழிமொழிய சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (18)

# ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அபிவிருத்தி திட்டங்கள் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)


ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் ஊர்காவற்றுறை சுயகற்றல் அபிவிருத்தி செயற்பாட்டு மண்டபம், ஊர்காவற்றுறை பொதுச்சந்தை, வடக்கின் வசந்தம் விசேட செயற்றிட்டத்தில் புனரமைப்புச் செயயப்பட்ட அண்ணா சனசமூக நிலைய முன்பள்ளி மற்றும் தம்பாட்டி காந்திஜி முன்பள்ளி ஆகியவற்றின் திறப்பு விழா எதிர்வரும் 17 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதேச சபை தவிசாளர் ம.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினர்களாக ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட இணைப்பாளர் கே.வீ.கே. குகேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

முற்பகல் 10 மணிக்கு வடக்கின் வசந்தம் விசேட செயற்றிட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட தம்பாட்டி காந்திஜி முன்பள்ளி கட்டடமும் 10.45 மணிக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஊர்காவற்றுறை சுயகற்றல் அபிவிருத்தி செயற்பாட்டு மண்டபமும் திறந்து வைக்கப்படும்.

தொடாந்து முற்பகல் 11.45 மணிக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஊர்காவற்றுறை பொதுச சந்தைக் கட்டடமும், பி.ப. 12.15 மணிக்கு அண்ணா சனசமூக நிலைய முன்பள்ளிக் கட்டடமும் திறந்து வைக்கப்படவுள்ளன.






கண்டாவளைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த கல்வெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயத்தில் சாரணர் குழு ஆரம்பிக்கப்பட்டு பாடசாலை முதல்வர் கே.ஞானசீலன் தலைமையில் சாரணர்களுக்கான சின்னம் சூட்டு விழாவும் சாரணர்களுக்கான பயிற்சியும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வளவாளராக கலந்துகொண்ட முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் பொ.தில்லைநாதன் பயிற்சி வழங்குவதையும், சின்னம் சூட்டப்பட்ட சாரணர்களுடன் பிரதிநிதிகளையும் காணலாம். (112)

# விமானத்தின் சேதமடைந்த பாகங்களை வெளியிட்டது செயற்கைக்கோள்

## ஆராய்கிறது மலேசியா



(பீஜிங்)

காணாமற போன மலேசிய விமானத்தின் சேதமடைந்த பாகங்கள் தென்படும் படங்களை சீனா வின் செயற்கைக் கோள்கள் வெளியிட்டுள்ளதாக சீனாவின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனமான சின் ஹுவா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது

வியட்நாமின் தெற்கு முனை மற்றும் மலேசியாவின் கிழக்கு பகுதிக்கு இடையில் கடந்த மார்ச் 9ஆம் திகதி காலையில் செயற்கைக்கோள் எடுத்த படங்களில் "மூன்று சந்தேகத்திற்குரிய மிதக்கும் பொருட்கள்" மாறுபட்ட அளவுகளில் தென்பட்டுள்ளன. காணாமற் போனதாக சந்தேகிக்கப்படும் விமானத்தின் பாகங்கள் அதிகபட்சம் 22-24 மீற்றருக்குள் இருக்கும் என அளவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப பட்டுள்ளது.

மாயமான மலேசியன் ஏயாலைன்ஸ் விமானத்தை, செயற்கைக்கோள் உதவியுடன் தேடும் பணியில் சீனா ஈடுபட்டுள்ளது. இந்தத் தேடுதலில், தென்சீனக்கடலில் மூன்று சந்தேகப்படும்படியான பொருட்கள் மிதப்பது தெரியவந்தது. இது குறித்து சீனத் தலைவர் லீ கிகுவாங் கூறுகையில், "இந்தத் தகவல் சிறிது நம்பிக்கையை கொடுத்துள்ளது. இருப்பினும், இது சம்பந்தமாக உறுதியாக கூற முடியாது. சந்தேகப்படும் படியாக மிதக்கும் பொருட்கள் குறித்து தொடர்ந்து ஆராய்ந்து வருகிறோம்," என்றார். இந்நிலையில், தென்சீனக்கடலில், சந்தேகப் படும்படியான பொருட்கள் மிதந்து கொண்டிருக்கும் இடத்திற்கு, ஆய்வு நடாத்துவதற்காக மலேசியா ஒரு விமானத்தை அனுப்பியுள்ளது.

உலகச் செய்திகள்


# சமையலில் தக்காளி இல்லை மனைவியை கொன்ற கணவன்

உத்தரகாண்ட மாநிலத்தில் கூட்டில் தக்காளி சேர்க்காத குற்றத்திற்காக ஒருவர் மனைவியை கொலை செய்துள்ளார்.

உத்தரகண்ட் மாநிலம் டேராடுன் மாநிலம் ரிஷிகேஷ் நகர் அருகே உள்ள லாச்மன் ஜூலா பகுதியைச் சேர்ந்தவர் பிரபா தேவி(30). அவரது கணவர் இரவு காவலராக பணியாற்றி வந்தார். இந்நிலையில் ஒரு நாள் இரவு பிரபா தேவி தனது கணவருக்கு உணவு பரிமாறியுள்ளார். அப்போது காய்கறிக் கூட்டில் ஏன் தக்காளி போடவில்லை என்று கூறி அவர் பிரபா தேவியிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதனால் ஆத்திரம் அடைந்த அந்த நபர் தனது மனைவியின் தலையை சுவரில் வேகமாக மோதியதில் படுகாயம் அடைந்த பிரபா தேவி பரிதாபமாக உயிர் இழந்தார்.இந்தச் சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்த பொலிசார் பிரபா தேவியின் கணவரை கைது செய்தனர்.விசாரணையில் அவர் தனது மனைவியைக் கொலை செய்ததை ஒப்புக்கொண்டார்.

# நிபுணர்களின் கூட்டுமுயற்சி டிஜிட்டலில் இராமாயணம்



(லண்டன்)

இந்திய, இங்கிலாந்து நிபுணர்களின் கூட்டு முயற்சியில் இராமாயண கதை, டிஜிட்டல் வடிவில் தயாரிக்கப்படுகிறது. இங்கிலாந்தில் உள்ள பிரிட்டிஷ் நூலகம், இந்தியாவில மும்பையில் உள்ள சத்ரபதி சிவாஜி மகராஜ் வாஸ்து சங்கராலயா அருங்காட்சியகம் ஆகியவற்றின் நிபுணர்கள், இந்தியா மற்றும் இங்கிலாந்து உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் சிதறி இருந்த சுமார் 150 ஆண்டு பழமையான மேவார் இராமாயணத்தின் பிர[illegible]களை திரட்டினர். ஏற்கனவே மும்பையில் இருந்த வேல்ஸ் அருங்காட்சியகம் இவற்றை திரட்டி இருந்தது. இந்த மேவார் இராமாயணம் 17ஆம் நூற்றாண்டை சேர்ந்தவை என்று கருதப்படுகிறது.

# தி.மு.க.விலிருந்து நீக்கம் பிரதமருடன் அழகிரி பேச்சு



பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து மு.க.அழகிரி பேச்சு வார்த்தை நடாத்தியுள்ளார்.தி.மு.க தென் மண்டல அமைப்பு செயலாளராக இருந்த மு.க அழகிரி கட்சிக்கு எதிராக செயற்பட்டதாகக் கூறி தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டார்.

இதனால் அதிருப்தி அடைந்துள்ள மு.க.அழகிரி தி.மு.க.வை விமர்சித்து கருத்துக்களை வெளியிட்டு வருகிறார். தி.மு.க.வை கடுமையாக விமர்சித்தாலும் தி.மு.க. வேட்பாளர்களுக்கு எதிராக மு.க. அழகிரி செயறபட மாட்டார் என்று கூறப்பட்டது. இந்நிலையில் மு.க. அழகிரி ஹைதராபாத் சென்றிருந்தார். அங்கிருந்து அவர் நேற்று முன்தினம் டில்லிக்கு புறப்பட்டுச் சென்றார்.

டில்லியில் பிரதமர் மன்மோகன்சிங்கை நேற்று முன்தினம்காலை மு.க. அழகிரி சந்தித்துப் பேசியுள்ளார். பிறகு வெளியில் வந்த அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், மத்திய மந்திரி சபையில் சேர்ந்து பணியாற்ற எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்காக பிரதமரிடம் நன்றி தெரிவித்தேன். மேலும் மதுரை விமான நிலையத்திற்கு பொன்முத்துராமலிங்க தேவர் பெயரை சூட்ட வேண்டுமென கோரிக்கை விடுத்தேன். அதை அவர் ஏற்றுக் கொண்டார். எனத் தெரிவித்தார்.

# ரஷ்ய படைகளை எதிர்த்து போர் புரிய மாட்டோம்

## உக்ரேன் ஜனாதிபதி தெரிவிப்பு



உக்ரனின் கிரிமியா பகுதியில் உள்ள ரஷ்ய படையினரை எதிர்த்து போரிடும் திட்டம் ஏதுமில்லை என்று உக்ரேன் அதிபர் (பொறுப்பு) அலெக ஸாண்டர் டர்க்கினோவ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக செய்தி நிறுவனத்துக்கு அதிபர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது: 'கிரைமியாவுக்கு எதிராக இராணுவ ரீதியான தாக்குதலை எங்களால் மேற்கொள்ள முடியாது. அவ்வாறு செய்தால், எங்களின் கிழக்கு எல்லைப் பகுதியில் பாதுகாப்பு அற்ற சூழ்நிலை ஏற்பட்டு விடும்.

கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைப்பதா, வேண்டாமா என்பது பற்றி மார்ச் 16ஆம் திகதி பொது வாக்கெடுப்பு நடாத்தப் போவதாக அறிவித்துள்ளனர். இந்த வாக்கெடுப்பு நடவடிக்கை போலியானது. பொதுவாக்கெடுபபின் முடிவை, கிரிமியாவில் அல்ல, ரஷ்யாவில்தான் தீர்மானிப்பார்கள். பெருமளவிலான கிரிமியாவைச் சேர்ந்த மக்கள், இந்த வாக்கெடுப்பில் பங்கேற்க மாட்டார்கள்' என்றார்.

இந்தப் பிரச்சினைக்கு தூதரக ரீதியில் தீர்வு காண்பதற்கு ரஷ்யா மறுப்பு தெரிவித்து வருகிறது. வெளியுறவுத் துறை அமைச்சகம் மூலமும், அரசு உயர் அதிகாரிகள் மூலமும் பேச்சு நடாத்துவதற்கு ரஷ்ய ஒப்புக்கொள்ளவில்லை என்று டர்க்கினோவ் கூறினார்.

இதற்கிடையே அமெரிக்க அதிபர் ஒபாமாவை, உக்ரேன் பிரதமர் அர்சினி யாட்செனியுக் நேற்று முன்தினம் சந்தித்து பேசினார். கிரிமியா பகுதியில் ரஷ்ய படையினரின் ஆதிக்கம், ரஷ்யாவுடன் கிரிமியா இணைவது தொடர்பாக பொது வாக்கெடுப்பு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஒபாமாவுடன் உக்ரேன் பிரதமர் யாட்செனியுக் நேற்று முன்தினம் பேசினார். உகரேனுக்கு பொருளாதார உதவிகளை செய்ய வேண்டும். ரஷ்ய முயற்சிகளை எதிர்த்து நிற்பதற்கான தார்மிக ஆதரவினை தரவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# நியூயோர்க்கில் வெடிப்பு ஒருவர் பலி; 11 பேர் காயம்



(நியூயோர்க்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அடுக்குமாடி குடியிருப்பில் நிகழ்ந்த வெடிப்பு சம்பவத்தில் அடுக்குமாடி குடியிருப்பு நொருங்கியுள்ளது. அடுக்குமாடி குடியிருப்பின் கட்டட கூரையின் ஒரு பகுதி இடிந்ததால் பலர் உள்ளே சிக்கியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. சம்பவம் நடந்த இடத்திற்கு 39 தீயணைப்பு வாகனங்களுடன் 168 தீயணைப்புப் படையினர் மற்றும் பொலிசார் விரைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த இரண்டு கட்டடங்களில் வணிக நிறுவனங்களும் இருந்ததாக பொலிஸார் தகவல் அளித்துள்ளனர். குடியிருப்பில் எரிவாயு சிலிண்டர் வெடித்து விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனத் தகவல் வந்துள்ளது. விபத்தில் குடியிருப்பு வாசிகளில் ஒருவர் பலியானதுடன் 11 பேர் காயம் அடைந்ததாக தகவல் வந்துள்ளது.

# குற்றவாளிகளுக்கு தண்டனை குறைப்பு மனுவை நிராகரித்தது உயர் நீதிமன்றம்

ராஜிவ் காந்தியின் கொலை வழக்கு குற்றவாளிகளின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைப்பதற்கு அடிப்படையாக அமைந்த, இந்திய உயர்நீதிமன்றத்தின் உத்தரவு ஒன்றை மீளாய்வு செய்யுமாறு இந்திய மத்திய அரசாங்கம் தாக்கல் செய்திருந்த மனுவை இந்திய உயர நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பயங்கரவாத சட்டத்தின் கீழோ அல்லது சாதாரண சட்டத்தின் கீழோ மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரின் கருணை மனுவை ஆராய்வதற்கு கால தாமதம் ஏற்படும் பட்சத்தில், அந்த தண்டனையை ஆயுள் தண்டனயாக குறைக்க முடியும் என்று உயர் நீதிமன்றம் கடந்த ஜனவரி மாதம் 21ஆம் திகதி தீர்ப்பளித்திருந்தது.

இந்தத் தீர்ப்பின் அடிப்படையிலேயே ராஜிவ் காந்தியின் கொலை வழக்கு குற்றவாளிகளான சாந்தன், முருகன் மற்றும் பேரறிவாளன் ஆகியோரின் மரண தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக் கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த தீர்ப்பை மீளாய்வு செய்யுமாறு மத்திய அரசாங்கம் மனு ஒன்றைத் தாக்கல செய்திருந்தது.

இந்தத் தீர்ப்பினை மீளாய்வு செய்து, தீர்ப்பை வலுவிழக்கச் செய்வதன் மூலம், ராஜிவ் கொலை குற்றவாளிகளுக்கு மீண்டும் மரண தண்டனையை வழங்கலாம் என்று இந்திய மத்திய அரசாங்கம் கருதி இருந்தது.

எனினும் குறித்த மனுவை விசாரணை செய்த இந்திய பிரதம நீதியரசர் பி.சதாசிவம் தலைமையிலான நீதியரசர்கள் குழு, இதனை மீளாய்வு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்து, மனுவை நிராகரித்தது.

# காட்டுப்புலம் மக்களுக்கு சமுர்த்தி உதவி; வறுமையை துடைத்து ஒழிக்க ஏற்பாடு



(சுழிபுரம்)

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்து மீள்குடியேறிய மக்கள் பலர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றபோதும் அவர்கள் சமுர்த்தி உதவித்திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. எனவே யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி திட்டம் மீளாய்விற்குட்படுத்தப்பட்டு வறியவர்களையும் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

சங்கானை காட்டுப்புல மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் தேவைகளை இனங்காணும் விசேட ஆய்வுக் கலந்துரையாடல் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரின் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த பிரதேசத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்.

வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்களின் நிலையைக் கருத்தில் கொண்டே சமுர்த்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 55 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இந்த சமுர்த்தி திட்டத்தினை பெற்று வருகின்றனர். அவர்களில் பல குடும்பங்கள் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக இந்தத் திட்டத்தை பெற்றுவருகின்ற நிலையில், அவர்கள் இத்திட்டத்தினைச் சரியாகப் பயன்படுத்தியிருப்பின் இன்று வாழ்வாதார மேம்பாட்டை எட்டியிருக்க வேண்டும். அத்துடன், மாவட்டத்தில் சமுர்த்தித் திட்டத்தைப் பெறும் மக்களின் வாழ்வாதார மற்றும் பொருளாதார நிலைமைகள் மீளாய்வு செய்யப்பட்டு மீள்குடியேறிய நிலையில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு சமுர்த்தி உதவித் திட்டங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

அத்தோடு காட்டுப்புலம் மற்றும் பாண்டவெட்டை ஆகிய கிராமங்களில் 137 குடும்பங்கள் வசித்து வருவதாகக் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், இந்தக் கிராமத்திற்கு தற்போது 35 வீடுகள் அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வரும் அதேவேளை வீட்டுத்திட்டத்தை பெறுவதற்குத் தகுதியுடைய அனைத்துக் குடும்பங்களுக்கும் விரைவில் வீட்டுத் திட்டங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

எனவே, வீட்டுத் திட்டங்களை இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் தமது காணி ஆவணங்களை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் தமது கிராமத்தின் பல்வேறு தேவைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், குறிப்பாகத் தாம் பெரும் சிரமங்களின் மத்தியில் பயணம் செய்த வீதியை, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் புனரமைப்புச் செய்து போக்குவரத்தினை இலகுபடுத்தியதாகச் சுட்டிக்காட்டினர்.

மேலும் காட்டுப்பலம் கிராம மக்கள் எதிர்கொண்டுவரும் குடிநீர் பிரச்சினை மற்றும் ஏனைய தேவைகள் குறித்தும் கருத்தில் எடுத்துள்ளதாகவும் அவற்றுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலின் போது சங்கானை பிரதேச செயலர் சோதிநாதன், வலி.மேற்கு பிரதேசசபை உறுப்பினர்காளான பாலகிருஷ்ணன் (ஜீவன்), செல்வகுமார், பிரதேச செயலக உதவித் திட்டப்பணிப்பாளர் சிவகுமார், யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் கணேசமூர்த்தி, ஜசாக் நிறுவனத்தின் யாழ்.மாவட்ட இணைப்பளார் சுகிர்தராஜ், காட்டுப்புலம் கிராம அலுவலர் ஜீவராஜா ஆகியோரும் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர், மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினரால் அளவெட்டி தெற்கு குருவளை கிராம மக்களின் தேவைகள் குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் அப்பகுதி மக்களின் கோரிக்கைக்கமைவாக மின்விநியோகத்தினை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட அவர் அப்பகுதியில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டத்தினை வழங்குவதற்கும், அப்பகுதி மக்கள் எதிர்கொள்ளும் நீர்ப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கும் மற்றும் மக்களால் முன்வைக்கப்பட்ட ஏனைய தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

## தகவல் தொழில்நுட்ப சேவை; விண்ணப்பிக்க வாய்ப்பு

(கொழும்பு)

பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3, தரம் III இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைப்பரீட்சை மே மாதம் 3 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளன.

பரீட்சைக் கட்டணம் ரூபா 500 ஐச் செலுத்த வேண்டும். விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், இலங்கை அபி விருத்தி நிர்வாக நிறுவகம், 28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு-7 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை எழுதுதல் வேண்டும்.

இப் பரீட்சை மும்மொழிகளிலும் நடைபெறவுள்ளதுடன், தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணக் குறிப்பு ஆகிய பாடங்களில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (105)

## யாழ்ப்பாணத்தில்...

வினவியதாகவும், அதற்கு அவர்கள் இங்கு முதலீடு செய்வதில் எந்தவிதமான தடைகளும் இல்லை. எந்தவிதமான முயற்சிகளிலும் அவர்கள் ஈடுபடுதற்கு வாய்ப்புக்கள் இருக்கிறது.

அவர்கள் முன்வந்தால் அதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்குத் தயாராகவே இருக்கின்றோம். இந்த விடயத்தை அவர்களிடம் எடுத்துச் செல்லுமாறு தூதுவரிடம் சொல்லியிருப்பதாகவும் தெரிவித்த அரச அதிபர், கனேடியத் தூதுவர் தமது விஜயத்தை முடித்து திரும்பியதும் இந்தச் செய்தியை கனடாவில் உள்ள புலம்பெயர் ந்த தமிழர்களிடம் எடுத்துச் சொல்வதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்புக் குறித்த மேலும் தெரிவித்த அரச அதிபர் இங்கு போக்குவரத்து வசதிகள் சீராக்கப்பட்டுள்ளதால் முதலீடுகளை இங்கிருந்து தங்கள் எதிர்பார்ப்பதாகவும் கனேடியத் தூதுவர் தெரிவித்திருப்பதுடன், இந்த முதலீட்டுக்குரிய சூழல் ஒன்றும் திரும்பிக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் உலக உணவுத் திட்டத்தின் கீழான பல்வேறு வேலைத் திட்டங்கள் குறித்தும் தூதுவர் தம்முடன் கலந்துரையாடியதாகவும், சில பாடசாலைகளுக்கும் அவர் விஜயம் செய்ததாகவும், யாழ். மாவட்டத்தில் 429 பாடசாலைகளுக்கு மதிய உணவு வழங்கப்படுவதாகவும் இதில் 328 பாடசாலைகளுக்கு வழங்கப்படும் வசதிகள் குறைவாக இருப்பதாகவும், 127 பாடசாலைகளுக்கு வழங்கப்படும் மதிய உணவை அதிகரிக்க வேண்டிய நிலை உள்ளதாகவும் தூதுவரிடம் தெரிவிக்கப்பட்டதாகவும், பாடசாலைகளில் மாணவர்களுக்கான மதிய உணவு தயாரித்துக் கொடுக்கும் தொழிலாளர்களுக்கு ஏதாவது வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும் என்றும் தூதுவரிடம் கோரிக்கை விடப்பட்டதுடன், இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்த வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்ற குடும்பங்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறு மாத கால உலர் உணவு வழங்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கனேடியத் தூதுவரிடம் தாம் கோரியிருப்பதாகவும் யாழ்.அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

## ஜெனிவாவில்...

தங்களது முழு அளவிலான ஒத்துழைப்பை வழங்க வேண்டியது அவசியமானது எனக் குறிப்பிட்டுள்ளார்.

தீர்மானம் நிறைவேற்றப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இன்று எதிர்நோக்கியுள்ள நிலைமை அணிசேரா நாடுகளின் வேறும் நாடுகளினாலும் எதிர்நோக்க நேரிடலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தத்தின் பின்னர் நாடு பாரிய சவல்களை எதிர்நோக்கியதாகவும் அந்த சவால்கள் வெற்றிகொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

3 இலட்சம் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளதுடன், 12 ஆயிரம் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் உயிரிழந்த மற்றும் காணாமற் போனவர்கள் தொடர்பில் கணக்கெடுப்பு நடத் தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முனைப்புக்களுக்கு மேற்குலக நாடுகளின் ஒத்துழைப்பு இன்றியமையாதது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## உலக உணவுத்...

ளப்படும் உலக உணவுத்திட்ட நடவடிக்கைகளை யாழ்.மாவட்டத்தில் விஸ்தரிப்பது குறித்து கலந்துரையாடினார். இதனைத் தொடர்ந்து வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜாவை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

## தனியார்...

மேற்படி விடயம் உள்ளடக்கப்பட்ட அறிவித்தல் கடிதங்கள், பிரதமர் தி.மு.ஜயரத்னவினால் கைச்சாத்திடப்பட்டு மேற்கண்டோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஊடகத்துறையினருக்கு...

முறைகள், காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் அனர்த்தங்களைக் குறைத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக துறை சார்ந்த நிபுணர்களினால் விளக்கமளிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## மக்கள் நலன்புரித்...

முன்னெடுத்து வரும் நிலையில் அதற்கு துணையாக நீங்கள் பணியாற்ற வேண்டும்.

இச் செயற்திட்டங்கள் அரசினதும் வெளிநாடுகளிலிருந்தும் பெறப்படும் நிதிகளின் ஊடாகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இருந்தபோதிலும், அரசினால் முன்னெடுக்கப்பட்டு வரும் மக்களுக்கான அபிவிருத்திச் செயற்திட்டங்களைச் சிலர் குறை கூறி வருகின்றனர்.

எனவே, அரசின் கொள்கைக்கும் வேலைத்திட்டங்களுக்கு அமைவாகவும் நீங்கள் அனைவரும் உண்மையாகவும், விசுவாசமாகவும் மக்களுக்கு பணியாற்ற முன்வர வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் அமைச்சர் புதிதாக நியமனம் பெற்றுக்கொண்ட கிராம அலுவலர்களுக்கு தமது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இதன்போது யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

யாழ்.மாவட்டத்தில் சேவையாற்றும் பொருட்டு புதிதாக 129 பேர் கிராம அலுவலர்களாக அண்மையில் ஜனாதிபதியினால் நியமனம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தீயில் எரிந்து...

ண்டிருந்த அவரது கணவர் தனது மனைவி தீயில் எரிவதைக் கண்டு கூச்சலிட்டதாகவும் இதனைத் தொடர்ந்து அயலவர்கள் வந்து தீயை அணைத்து குறித்த தாயை மன்னார் வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும் பொலிஸார் கூறினர்.

இருப்பினும், இவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இவர் 2 பிள்ளைகளின் தாய் ஆவார். இது தொடர்பில் விரிவான விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆணின்...

திலிருந்து கிளிநொச்சி நோக்கி சுமார் அரை கிலோமீற்றர் தொலைவிலுள்ள ரயில் பாதையை அண்மித்த காட்டுப் பகுதியிலேயே சடலம் காணப்படுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றார்.

வடக்கு மார்க்கத்தில் ரயிலில் பயணம் செய்த ஒருவர் நேற்று முன்தினம் அல்லது நேற்று அதிகாலை தவறி வீழ்ந்து உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றார்.

இந்த சடலம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## குப்பை மேட்டில்...

ஒன்று குப்பையினுள் கிடந்து வெடித்திருக்கலாம் என இராணுவத்தினர் தெரிவித்தனர்.

மேற்படி வெடிப்புச் சம்பவத்தினைத் தொடர்ந்து அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. இச்சம்பவத்தில் எவரும் பாதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ, 25)

# குறைபாடுகளை சொல்லி அரசியல் இலாபம்; வடமாகாண சபை உறுப்பினர் சாடல்

கிளிநொச்சி பாரதிபுரம் அன்னை சாரதாதேவி வித்தியாலயத்தின் பௌதீக வளப்பற்றாக குறைகளை தீர்க்க வேண்டிய மாகாண கல்வி அமைச்சின் அதிகாரங்களை தன்னகத்தே கொண்டவர்கள் அதை தீர்ப்பதற்கான எவ்வித சிறு முயற்சிகளையும் எடுப்பதை விட்டுவிட்டு அந்த குறைகளை சொல்லி அரசியல் செய்கின்றனர் என ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் குற்றம் சுமத்தியுள்ளார்.

கிளிநொச்சி பாரதிபுரம் அன்னை சாரதாதேவி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மை திறனாய்வுப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார்.

இந்த பாடசாலை ஆரம்பிக்கப்படுகின்ற போது மிக மிக குறைந்தளவான பௌதீக வளப்பற்றாக் குறையுடன் ஆரம்பிக்கப்பட்டது இன்று பெருமளவு வளப்பற்றாக்குறையுடனேயே இயங்கி வருகிறது.

இது கவலை தரும் விடயமாகும் ஆனால் இன்று இந்த பிரச்சினைகளை தீர்க்க வேண்டியவர்கள் அதனை செய்வதாக தெரியவில்லை அவர்கள். இந்த அவலத்தில் நன்றாகவே அரசியல் நடத்துகின்றனர் எனத் தெரிவித்த அவர் இந்த வருடத்திற்குள் பாடசாலைக்கு ஒரு கட்டடத்தை பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார். கிளிநொச்சி பாரதிபுரம் அன்னை சாரதாதேவி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி வித்தியாலயமைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலை முதல்வர் நா. கணேஸ்வரநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக வடக்கு மாகாண சபை உறுப்பினரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளருமான வை.தவநாதனும், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி பாரதிபுரம் பப்ரீஸ் திருச்சபையைச் சேர்ந்த வண. பிதா கே.வி.மூர்த்தி, கரைச்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அமிர்தலிங்கமும்,



கௌரவ விருந்தினர்களாக மலையாள்புரம் கிராம அலுவலர் ம.சந்திரபாலனும் கலந்து கொண்டனர்.

மங்கள விளக்கேற்றல், கொடியேற்றல் மற்றும் ஆசியுரை ஆகியவற்றுடன் இல்ல விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகின. அதனைத் தொடர்ந்து விழாச் சுடரேற்றல், மாணவர்களின் அணிநடை மற்றும் ஏனைய விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெற்றன. இறுதியாக விளையாட்டுக்களில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றதனையடுத்து நன்றியுரையுடன் நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைவடைந்தன.

இந்த நிகழ்வில், பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# வீதி விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி மரணம்

இருபாலைச் சந்தியிலிருந்து கோண்டாவில் செல்லும் வீதியில் கடந்த 27 ஆம் திகதி நடைபெற்ற வீதி விபத்தில் படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த வயோதிபர் ஒருவர் நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சிவன் புதுவீதி பரவைக்குளம், திருநெல்வேலியைச் சேர்ந்த சுந்தரம் - வன்னியசிங்கம் (வயது - 60) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இருபாலையில் இருந்து கோண்டாவில் செல்லும் வீதியில் நடைபெற்ற இந்த விபத்தில் சிறியரக மோட்டார் சைக்கிளில் அவரும், அவரது நண்பரும் சென்றுகொண்டிருக்கையில் அவ்வீதியால் வந்த டிப்பர் வாகனம் இவர்களது மோட்டார் சைக்கிளை மோதியதன் காரணமாக இவ்விபத்து இடம்பெற்றது.

இதில் சம்பவ இடத்திலேயே ஒருவர் பலியாகியதுடன், வன்னியசிங்கம் படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ்.பேதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச்சம்பவத்துடன் தொடர்புடைய டிப்பர் வாகனத்தின் சாரதி கோப்பாய் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# கூட்டமைப்பு குழு இந்தியா பயணம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் அடுத்த வாரத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இதன்போது இந்திய அரசாங்கத்தின் பல முக்கியஸ்தர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஐ.நா. மனிதஉரிமைப் பேரவை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாக இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பதனை இந்தியா இன்னமும் அறிவிக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் தீர்மானம் குறித்து பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தொழுநோயின் தாக்கம் வடக்கில் மீண்டும் அதிகரிப்பு

(மானிப்பாய்)

தொழு நோயாளர்ளின் எண்ணிக்கை வடக்கில் அதிகரித்து வருவதாகவும், அந்த நோய் பற்றிய விழிப்புணர்வு இன்மையே நோய் அதிகரிப்புக்கு காரணம் எனவும் வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளரும், வைத்திய கலாநிதியுமான திருமதி எஸ்.ஆர்.யூட் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் 53 நோயாளர்கள் கடந்த வருடம் இனங்காணப்பட்டுள்ளதாகவும், வடமாகாணத்தில் 79 நோயாளர்கள் கடந்த வருடம் இந் நோயால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நோயை குணமாக்க முடியாது என மக்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் நோய் அடையாளம் தெரிந்தும் கூட சிகிச்சை மேற்கொள்ள அவர்கள் சிரத்தை காட்டுவதில்லை. இந்த நோயைக் குணமாக்க முடியும். நோய் பற்றி அவதானித்த உடனேயே மக்கள் சிகிச்சைக்கு வருவது அவசியம். மாகாணத்தில் அனைத்தது மாவட்டங்களிலும் உடற்பரிசோதனைகள் நடத்துவதுடன் இந்த நோய் பற்றிய விழிப்புணர்வுப் பிரசாரத்தையும் முன்னெடுத்து வருகிறோம்.

தோல் நோய்ச் சிகிச்சைக்கான நிபுணர்களுக்கு எங்கள் மாகாணத்தில் பற்றாக்குறை நிலவுகின்றது. எனினும் அந்தப் பிரச்சினையை நாம் எப்படியும் சமாளித்துக் கொள்வோம். என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் 2011 இல் 52 பேரும், 2012 இல் 62 பேரும், 2013 இல் 79 பேரும் இந்த நோயால் பீடிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.



சிட்டிசன் டெவலப்மென்ட் CDB யின் சேமிப்பு அலகு அச்சுவேலி மத்திய கல்லூரியில் திறந்து வைக்கப்பட்டபோது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், CDB இன் வலய விற்பனை மேம்படுத்தல் முகாமையாளர் சுபாஸ்குமார் மாணவர் ஒருவருக்கு சேமிப்புப் புத்தகம் வழங்குவதையும் காணலாம். (54)

# பாடல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரியின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை சேவைப் பிரிவின் கீழ் இயங்கும் "இளசுகள்" குழுமத்தின் மூன்றாம் வருட பூர்த்தியினை முன்னிட்டு மூத்த பொப் இசைக் கலைஞரான நித்தி கனகரத்தினம் மற்றும் இளம் இசையமைப்பாளரான மதீசன் தனபாலசிங்கம் இருவரும் இணைந்து தயாரித்து ஒரு பாடலை வெளியிடுகின்றார்கள்.

"நாடு திருந்தவென்றால்" என்று தொடங்கும் இப்பாடலை நித்தி கனகரத்தினம் எழுதி, மெட்டமைத்து பாட, மதீசன் இசையமைக்கிறார்.

இன்று காலை 9 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா இப் பாடலை வெளியிடுகிறார் தொடர்ந்து இந்த பாடல் இடம்பெறும் முழு அல்பம் பற்றிய செய்திகளை வெளியிட இருக்கிறார்கள். (48)

# ஆவா குழுவைச்சேர்ந்த 6 பேர் சுன்னாகம் நலன்புரிமுகாமில் கைது

யாழ்.சுன்னாகம் சபாபதிப் பிள்ளை நலன்புரி முகாமில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலின்போது ஆவாக் குழுவினர் என அடையாளங் காணப்பட்ட அறுவரை கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்ததாகவும், அவர்களிடமிருந்து சிறிய ஆயுதங்கள் சிலவற்றையும் கைப்பற்றியதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி நலன்புரி முகாம் பகுதியில் இரு குழுக்களிடையில் கோஷ்டி மோதல் ஏற்பட்டதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில், வடமாகாணப் பிரதிப்பொலிஸ் மா அதிபர் றொகான் டயலின் விசேட உத்தரவின்பேரில் பொலிஸ் குழு சம்பவத்துடன் தொடர்புபட்ட 6 பேரைக் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த 6 பேரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்ட விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் அவர்களை நேற்று முன்தினம் புதன்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (48)

# புண்ணிய கிராம வேலைத்திட்டம்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் புண்ணிய கிராம வேலைத் திட்டம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வானது நாளை காலை 8.30 மணி முதல் கரைப்பிரான் ஆதி விநாயகர் தேவஸ்தான திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சுப்பிரமணியம் முரளிதரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசு கலந்து கொள்ளவுள்ளார்.

ஆலய வழிபாட்டுடன் ஆரம்பமாகும் நிகழ்வில் ஆசியுரையினை சிவஸ்ரீ சோ.சிவகுமாரக் குருக்கள் வழங்குவார்.

நந்திக்கொடியேற்றல், கோமாதா பூஜை, "சமுதாய நெறிப்படுத்தலில் இந்து மதம்" என்னும் தலைப்பிலான ஆசிரியர் க. ஈஸ்வரனின் சிறப்பு பேச்சு உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன் கலைநிகழ்வுகளும், மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. ஆனைக்கோட்டை கரைப்பிரான் பகுதியினைப் புண்ணிய கிராமமாக மாற்றுவதற்கு அனைவரையும் ஒன்றிணையுமாறு கேட்கப்பட்டுள்ளது. (48)

# சமூகப்பாதுகாப்பு கொடுப்பனவுகள்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி சமுர்த்தி வங்கிச் சங்கத்தினால் 7 கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள சமுர்த்திப் பயனாளிகளுக்கு சமூகப்பாதுகாப்பு கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இதனடிப்படையில் திருவையாறு கிராம அலுவலர் பிரிவில் 2 பயனாளிகளுக்கும் மருதநகர் கிராம அலுவலர் பிரிவில் 2 பயனாளிகளுக்கும், வட்டக்கச்சி பிரிவில் இரு பயனாளிகளுக்கும், கனகாம்பிகைகுளம் கிராம அலுவலர் பிரிவில் 4 பயனாளிகளுக்கும் அம்பாள் நகர் சிவிக்சென்டர், மாயவனூர் ஆகிய பிரிவில் தலா ஒரு பயனாளிக்கும் இச்சமூக பாதுகாப்பு கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

திருமணம், பிறப்பு, மருத்துவ தேவைகளுக்காகவே இச்சமூக பாதுகாப்பு கொடுப்பனவுகள் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (69)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மார்ச் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.